The "NAVEENA BHARATI" Reg. No. M. 2645.

பிரமோதூத மாசி—பங்குனி

மார்ச்—1931.

நவீன

# பாரதி




27 APR 1931

மாலை 3. மணி 3.

ஓர் தேசிய

## மாதப் பத்திரிகை

இனிமையும் அழகும் கருத்தும்

விஷயமும் பொதிந்தது.

பிரசுராலயம்:

உத்தமபாளையம்,

மதுரை ஜில்லா.

52
ஹ211, N29BH
N31. 3. 3
196535

# போஷகர்கள்

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ், சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர், தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள், சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் பஜார் எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள், சொந்தக்காரர், ஆனந்த விலாஸ் எஸ்டேட், தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள், ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்பிரமணியம் அவர்கள், மிராஸ்தார், சித்தயங்கோட்டை.

9. ,, ஜான் அந்தோனி ஆஜூ அவர்கள், பைசன்வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.



27 APR 1931

# போஷகர்கள்.

(தொடர்ச்சி.)

10. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார், முனிசிபல் சேர்மன் & M. L. C., போடிநாயக்கனூர்.

11. ,, உ. ம. சே. முகிமித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

12. ,, க. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

13. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

14. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

15. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார், மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி & M. L. C., போடிநாயக்கனூர்.

16. ,, C. A. A. அப்துல் ரஹீம் ராவுத்தர் அவர்கள், மிராஸ்தார் & ஜில்லா போர்டு மெம்பர், கம்பம்.

17. ,, K. முத்துச்சாமி ரெட்டியார் அவர்கள், மிராஸ்தார், லக்ஷ்மிநாயக்கன்பட்டி, தேவாரம் P. O.

18. ,, ஆ. ஆத. இராமனுஜத் தேவர் அவர்கள், மிராஸ்தார், ஆதியாகுடி, புளியால் P. O, தேவகோட்டை

19. ,, நா. பூ. வேலுத் தேவர் அவர்கள், மிராஸ்தார், சிறுநல்லூர், திருவேகம்பத்து P. O., தேவகோட்டை.


20. ,, பி. மு. முத்துவேல் உடையார் அவர்கள், மிராஸ்தார், அதங்குடி, புளியால் P. O., தேவகோட்டை.

21 மெஸ்ஸர்ஸ் V. S. ராமலிங்கம் செட்டியார் & பிரதர்ஸ், கோம்பை.

---

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.

நவீன



படங்களுடன் வெளிவந் துலவும் தேசிய மாஸிகை

## பொருள் அடக்கம்.

மாலை 3. 1931 மார்ச் மணி 3.

தொடர் எண். பக்கம்.


1. பண்டித மோதிலால் நேரு—
திரு. என். வேங்கடரமணன் அவர்கள் ... 161
2. சுதேசாபிமானம்—திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் 179
3. ஸ்ரீ விவேகானந்தர் போதம்—
திரு. A. சுருளியாண்டி அவர்கள் ... 187
4. வேளாண்மையில் மின்சார உபயோகம்—
திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.) 191
5. இந்தியர்களின் வறுமை—திரு. A. நடேச பிள்ளை அவர்கள் 200
6. "பாரதி"யின் மறு மலர்ச்சி—ஆசிரியர், "நவீன பாரதி" 211
7. கடவுள் எங்கிருக்கிறார்?—திரு. ரா. நாராயணஸ்வாமி
அவர்கள், ஆசிரியர், "பாரதி" 212
8. காந்தியும் வில்லியம் வோர்ட்ஸ் வொர்த்தும்—
திரு. வெர்ரியர் எல்வின் அவர்கள் 213
9. சுதந்திர அயர்லாந்து—திரு. வி. எ. பெருமாள் அவர்கள் 217
10. பத்திரிகை உலகம்— ... ... 225
1. வியாபாரக் கல்வி, 2. சமய போதனையும் சன்மார்க்க விதிகளும், 3. வைத்தியத் தொழில், 4. லண்டன் பத்திரிகைகளின் செலவு, 5. இந்தியாவின் பெண் மக்கள், 6. இந்தியாவின் சிசு மரணம்.
11. ஆசிரியர் குறிப்புகள்— ... ... 238
1. காந்தி-இர்வின் உடன்படிக்கை, 2. சர். வி. பி.ராயும் தென்னாடும், 3. சர்க்காரின் தோல்விகள், 4. இந்தியச் சர்க்காரின் நிர்வாக இயல்பு 5. அமெரிக்கரும் மகாத்மா காந்தியும், 6. பகவத் சிங்கர்களின் பலி, 7. வியாபார மந்தமும் விவசாயிகள் துன்பமும், 8. விடுதலையாகாத சத்யாக்கிரகிகள், 9. அறிக்கை.


## படம்.


பண்டித மோதிலால் நேரு.



பண்டித மோதிலால் நேரு


நவீன

# பாரதி

ஓர் தேசீய மாதப் பத்திரிகை.


"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென் வாயுற வாழ்த்தேனோ—இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம் என்று வணங்கேனோ?"—பாரதி.


ஆசிரியர் : ரா. சுப்ரமண்யம்

உத்தமபாளையம்.


Copy Right] [Registered.

| மாலை 3 | பிரமோதூத, மாசி-பங்குனி 1931-ஆம் மார்ச்மீ | மணி 3 |
|---|---|---|


## பண்டித மோதிலால் நேரு.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

இந்திய நன் னாட்டின் விடுதலையைக் கோரி யுழைத்து வரும் பாரதப் புதல்வர்களும், புதல்விகளும் எண்ணிறந்தோர். இவ்வாறு எண்ணிறந்த மக்களை நாட்டின் விடுதலையை நாடி யுழைக்குமாறு தூண்டி நின்ற பெருமை ஒரு சில பெரியோருக்கே யுண்டு. அச் சிலருள்ளும் தம் உடல், பொருள், ஆவிகளை யொருங்கே தேசத்தின் பெயரால் தியாகம் செய்து, கஷ்டங்களை யேற்று, அன்னை பாரதியின் அடி மலர்களில்

198535



தங்களையே அர்ப்பணஞ் செய்து அழியாப் பெயர் படைத்த உத்தமத் தலைவர்கள் மிக மிகச் சிலரே. அவர்களில் தாதாபாய் நௌரோஜி, லோகமான்ய திலகர், சித்தரஞ்சன தாசர், லாலா லஜபதி ராய், பண்டித மோதிலால் நேரு முதலியோரைக் கூறலாம். இன்று இந்தியாவின் முடி சூடா மன்னராகி, ஒல்லியான தேகத்தில் ஒற்றையாடைத் துலங்கக் கர்ம யோகியாய் விளங்கி, பாரத மக்களைத் தன் கடைக் கண் பார்வையால் திரட்டி, அதிகாரமும் ஆயுத பலமும் படைத்த ஆங்கில துரைத்தனத்தாரின் மீது அஹிம்சா தர்மத்தோடு கூடிய ஒத்துழையாமை யென்னும் அறப்போரை நடத்தி வரும் மகாத்மா காந்தி யடிகளாரின் அடிச் சுவட்டைப் பின் பற்றி, அவரது இயக்கத்திற்குத் தோன்றாத் துணையாய் முன் வந்து, தமது அரச போகத்தை விடுத்து, அடிமை யோகத்தை யேற்று, பட்டுடுத்திய உடலில் கத்தர் கட்டுடுத்திச் சென்று, தாமும் தமது குடும்பமும் ஒருங்கே சுதந்திரப் போரின் முன்னணியில் நின்று, அறப்போரை நடத்திச் சமர்க் களத்தில் சாய்ந்த தேச பக்தச் சிங்கம்—தியாக வாழ்வின் தங்கம்—பண்டித மோதிலால் நேருவின் திரு நாமத்தை யறியாத பாரத மக்கள் யாருளர்? கனத்த கல்வி கற்றப் பண்டிதர்கள் பலர்; பெரும் பணம் படைத்த சீமான்கள் பலர்; சீரிய மக்கட் பேறு படைத்த பெரியோர்கள் பலர்; அரச போகத்தில் ஆழ்ந்திருப்போர் பலர்; மாட மாளிகையில் மகிழ்ந்திருப்போர் பலர். அவர்களில் எத்தனைப் பேரை இன்று உலகம் போற்றுகிறது? அவர்களில் எத்தனைப் பேர் உலகத்திற்குப் பயன்பட்டிருக்கின்றனர்? அவர்களில் எத்தனைப் பேர் பொது நலத்தைக் கருதித் தம் நலத்தை இழந்திருக்கின்றனர்? இல்லை, இல்லை, இல்லை யென்றே உலகம் விடை யிறுக்கிறது. எனினும் நம் மோதிலால் நேரு போன்ற சிலரது வாழ்க்கை அவ் வுரையை மறுக்க எழுவதா மெனக் கூற மகிழாதாரிரார். பண்டித நேரு கல்வியுங் கற்றார்; நாடு புகழ் நியாயவாதியுமானார்; அரசாங்கத்தாரின் அபிமானம் வாய்ந்த வழக்கறிஞருமானார்; பணமும் படைத்தார்; கனத்த குணமும் படைத்தார்; மக்கட் பேறும் மனை யிலக்கணமும் மாண்புறக் கண்டார். மாட மாளிகையில் தங்கி அரச போகத்தை நுகர்ந்தார். ஈற்றில் நாட்டின் நல மொன்றையே கருதி அத்தனைப் பெருமைகளையும் ஒருங்கே தியாகம் செய்து, அரசாங்கத்தாரின் கோபத்திற் காளாகிச்



சிறைக் கூடம் புகுந்தார். பஞ்சணையிற் றுயின்ற உடலைப் பாறை நிலத்தின் மீது கிடத்தினார். நல்ல வுணவை யிழந்து சிறை யுணவை யுட் கொண்டார். அல்லும் பகலும் அன்னை பாரதியின் அடிமைத் தளை யகல வேண்டித் தவங் கிடந்தார். அத்துணை யின்னல்களுக்கு ஈடு கொடுக்க முடியாது அவர் உடல் நலங் குன்றியது. அதுவே காரணமாகச் சிறை நீங்கி வெளி வந்தும் உடல் நலங் காணாது உயிர் நீத்தார். இன்று முப்பது கோடி பாரத மக்களும் பண்டிதரின் நாமத்தைப் பாராயணஞ் செய்கின்றனர். அஃதே இன்று இந்தியரின் தாரக மந்திரமாயிற்று. பண்டிதரின் வீழ்ச்சியால் இந்தியா வெங்கணும் தோன்றிய புத்துணர்ச்சியைக் கவனியுங்கள். நாடெங்கும் காணும் பரபரப்பை யுற்று நோக்குங்கள். ஒரு நேரு வீழ்ந்தார்; ஜவஹர்லாலுடன் முப்பது கோடி நேருகள் எழுந்தனர். மோதிலால் அவர்களின் பூத வுடம்பு மறைந்தது; இன்று அவரது புகழுடம்பு இந்தியருள்ளத்தில் விளங்குகிறது. என்னே பெருமை! என்னே தியாகம்!! "தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று" என்ற மறை வசனத்திற்கு இலக்காய் விளங்கிய பண்டித மோதிலால் நேருவின் பாக்கியந்தானென்னே! இம்மையில் அறம், பொருள், இன்பம் என்ற பேறுகளைக் குறைவறப் பெற்று, எழுபது ஆண்டுகள் வாழ்ந்து, தாய் நாட்டு விடுதலைப் போரில் வீர சொர்க்கம் எய்தி, வீட்டுப் பேற்றினை விரும்பி யேற்ற பண்டித மணியின் பிரிவினால் அன்னை பாரதி ஆவி துடிக்கிறாள். அவளது மக்கள் அலமருகின்றனர். எனவே இதுகாலை பண்டித நேரு அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தினை நம் 'பாரதி' யன்பர்களுக்கிங்கு அர்ப்பணஞ் செய்கின்றோம்.

## பிறப்பும் படிப்பும்

டில்லிப் பட்டணத்தில் மாஜிஸ்திரேட்டு வேலை பார்த்து வந்த மனோஹரலால் நேரு என்பவருக்கு 1861-ம் ஆண்டு மேமீ 10௳ நமது பண்டித மோதிலால் நேரு அவர்கள் இரண்டாவது குமாரராகப் பிறந்தார். இவரது தமையனாரின் பெயர் நந்தலால் நேரு என்பதாம். நந்தலாலுக்கு ஏழு வயது நிறைகையில் நமது மோதிலால் நேரு அன்னையின் கர்ப்பத்தி லிருக்கையிலேயே அவர்களது தந்தையார்

மனோஹரலால் ஜுரத்தால் தாக்குண்டுத் திடீரென்று காலஞ் சென்றார். மனோஹரலாலின் உண்மையுடைமையும், தைரியமும், நய நடத்தையும், பெருந் தன்மையும் ஆங்கிலேய அதிகாரிகளாலும், பொது மக்களாலும் வெகுவாய்ப் பாராட்டப்பட்டன. நேருவின் குடும்பம் பழமையான காஷ்மீர தேசத்திய அந்தணர் குலத்தைச் சார்ந்ததாகும். பஞ்சாப் நாட்டுப் பிராமணர்களுக்குப் பொதுவாகப் 'பண்டிதர்' என்ற பட்டமுண்டு. இவர்கள் வம்சம் வில் வித்தையிற் சிறந்த வீரம் மிக்க அந்தணரெனப் பெயர் வாய்ந்த துரோணாசாரியரின் வழி வந்ததெனக் கூறுவர். முன்னர் நிகழ்ந்த சீக்கிய யுத்த காலங்களில் இக் குலத்தார் ஆங்கிலேயருடன் பெரும் போரிட்டு நாட்டுக் குழைத்தார்களெனவுந் தெரிகிறது. பஞ்சாப் ராஜ்யத்தை யரசாண்ட ராஜா ரஞ்சிட் சிங்கினால் இவ் வம்சத்தார் பெரிதும் பாராட்டப்பட்டு வந்தனராம். எனவே பண்டு முதல் ராஜாக்களால் பாராட்டப் பட்டும், அரசியல் போர்களில் தலையிட்டு வீர வாழ்க்கை நடாத்தியும் நாட்டின் நலத்திற்காக உழைத்து வந்த கீர்த்தி பெற்ற ஒரு குலத்தில் மோதிலால் பிறந்தாரென்பதொன்றே அவரது வாழ்க்கையின் பெருமையை விளக்குவதாகும்.

மோதிலால் நேரு ஆறு மாதப் பிண்டமாக அன்னை வயிற்றிலிருந்து வருகையிலேயே அவரது தந்தையார் காலஞ் சென்றாரென மேலே கூறினோம். ஆகவே மோதிலால் பிறந்தது முதல் பந்துக்கள் முதல் பலரும் அவரை "தந்தையை யிழந்த தௌர்ப் பாக்கியன்" என்று பழித்துக் கூறுவார்களாம். எனினும் அப் பழிச் சொல் நம் மோதிலாலின் செவியிற் படாதவாறு அவரது அன்னையார் காத்துப் போற்றி வளர்த்து வந்தார். மோதிலால் நேருவின் தமையனாராகிய நந்தலால் நேரு கல்வி கற்று யௌவனப் பருவமடைந்தது முதல் தமது தம்பியைக் கல்வி கற்கச் செய்வதிலும், நல் வழியிற் பழக்குவதிலும் அதிக கவனத்தைச் செலுத்தலானார். ஆதலால் மோதிலால் கல்வி கற்று, உயர் நிலைமைக்கு வர முக்கியக் காரணமாயிருந்தவர் அவரது மூத்த சகோதரராகிய நந்தலாலேயாவர். மோதிலால் நேரு கல்விக் கேள்விகளிற் சிறந்து பண்டிதராகி உயர் நிலைக்கு வர வேண்டுமென்று கருதிய நந்தலால், கல்வியில் மோதிலாலை மென் மேலும்



ஊக்கி வருவாராயினர். ஆரம்பத்தில் மோதிலால் பனிரெண்டு வயது வரையில் டில்லியிலேயே படிக்கலானார். அப்பொழுது பாரசீக பாஷையிலும், அரபி பாஷையிலும் அவருக்கு நல்ல அனுபவமுண்டாயிற்று. எனினும் அவருக்குப் பாரசீக பாஷையில் அபிமானம் அதிகம். பின்னர் துரைத்தனப் பாடசாலையிற் புகுந்து பள்ளி யிறுதிப் பரீக்ஷை வரையிற் படித்து, அப் பரீக்ஷையிற் றேறியவுடன் நம் மோதிலால் நேரு அவர்கள் உயர்தரப் பரீக்ஷைக்குப் படிக்கக் கருதி அலகாபாத்திற்குச் சென்றார். அங்கு மூர் செண்டிரல் கலாசாலையிற் சேர்ந்து ஊக்கமாகப் படித்து வரலானார். அக் கலாசாலையின் தலைவரான ஹாரிசன் துரை யவர்கள் மோதிலாலின் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கவனித்து அவரை மிகவும் நேசித்தாராம். மோதிலால் பாட புத்தகங்களையே யன்றி வேறு சில அறிவு நூல்களையும் படிப்பதில் தமது கவனத்தைச் செலுத்தினார். வேடிக்கையாகப் பல துறைப் புத்தகங்களைப் படிப்பதிலும் அவருக்குப் பிரியம் அதிகம். மில்டன், ஷேக்ஸ்பியர் முதலியோர் எழுதிய நூல்களை அவர் மிகவும் நேசித்தார். அவ்வாறு கலாசாலை மாணவராய் அவர் இருக்கையிலேயே "பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் கல்வி கற்பது அறிவு வளர்ச்சிக்காகவே யன்றி, பரீக்ஷையில் தேருவதற்காக வன்று" என்ற கருத்தை வெளியிட்டார். அவ்வாறு கலாசாலையிற் படித்து வந்து பரீக்ஷையில் முதல் தரமாகத் தேர்ச்சி யுற்றுத் தங்கப் பதக்க மொன்றைப் பரிசு பெற்றார்.

## உத்தியோகமும் உழைப்பும்

அதன் பிறகு நியாயவாதத் தொழிலைக் கற்றுக் கான்பூர் நகரில் முதன் முதலாக வக்கீல் தொழிலை யாரம்பித்தார். சின்னாட்களில் தமது அபிவிருத்திக்குக் கான்பூர் ஏற்றவிடமல்லவென்பதைக் கருதி அலகாபாத்தை வந்தடைந்தார். அங்குத் தமது தமையனாரும் வக்கீல் தொழிலையே செய்து வந்தபடியால் அவருடன் கூடவே வசிக்கலானார். அவ்வாறு மோதிலால் அலகாபாத் வந்தடைந்த மூன்று மாதங்களுக்கெல்லாம் அவரது தமையனார் நந்தலால் நேரு தேக வியோக மெய்தினார். அதைக் கண்ட மோதிலால் தமது துரதிர்ஷ்ட நிலைக்கு மிக மிக வருந்தினாராயினும் ஒருவாறு ஆறுதல் மேற்கொண்டுத் தன் கடமையைச் செய்து வரலானார்.

வக்கீல் தொழிலில் அவர் காட்டிய சாமர்த்தியமும், தீவிரமும் பொது மக்களின் மனதைக் கவரலாயின. காலஞ்சென்ற அவரது தமையனாரின் கட்சிக்காரர்கள் அனைவரும் இவரையே நாடினர். பற்பல வழக்குகளும் இவரிடத்திற்கே வரலாயின. மேன் மேலும் தொழிலில் பெருமை வளர்ந்து வரலாயிற்று மாதம் ஒன்றுக்கு ரூபாய் மூவாயிரத்துக்கு மேல் இவருக்கு ஊதியம் கிடைக்கலாயிற்று. அலகாபாத்தில் இவருக்கு மிஞ்சிய வக்கீல்களில்லை யெனப் பொது மக்கள் மதிக்கலாயினர். மோதிலால் சொரூபராணி யென்ற பெண்மணியை விவாஹம் செய்து கொண்டு, தங் குடும்பத்தைச் சீரும் சிறப்புமாகப் பராமரித்து வந்தார். பொதுஜனங்கள் தம்மை மதித்து வந்ததற் கேற்ப மோதிலாலும் பொது மக்களிடத்தில் அன்பைச் செலுத்தி யாவரையும் நேசிக்கலானார். பொதுஜன நன்மைக்கான பல விஷயங் களையுங் கவனிக்க முற்பட்டார். உயர்தனிப் பெருமை வாய்ந்த பிராமணர் குலத்திற் பிறந்தவ ராயினும், நந் தென்னாட்டு வைதீகப் பிடிவாதக் கிராக்கியைப் போலன்றி, சமய சமூகச் சீர்திருத்தங்களில் தாராளமான மனத்தை யுடையவரா யிருந்தார். அதற்கு உதாரண மாக அவர் ஒரு முறை யன்று நான்கு முறைகள் ஐரோப்பிய நாடு களுக்கு யாத்திரை போய் வந்தார். இரண்டு தடவைகள் தங் குடும்ப சகிதமாக இங்கிலாந்திற்குப் போயிருக்கிறார். அவ்வாறு அவர் குடும்பம் ஆங்கில நாட்டுக்குப் போய் வந்த படியால் தற்கால மேல் நாட்டு நாகரீகங்கள் பல அவரது குடும்பத்தில் நிலை பெற்றன. ஐரோப்பிய நாகரீக சாதனங்கள் அனைத்தும் அமையப் பெற்று அவரது மாளிகை ஓர் அரசனது அரண்மனை யெனத் திகழ்ந்த தென்றால் தவறாகாது. செல்வத்திற் செழித்தார். போக பாக்கியங் களைக் குறைவற நுகர்ந்தார். ஜவஹர் லால் நேரு என்ற ஒப்பற்ற ஓர் ஆண் மகனைப் பெற்றார். அம்மகனும் இங்கிலாந்து சென்று கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிற் படித்துப் பட்டம் பெற்றார். மோதிலால் நேருக்கு இரு புதல்விகளுளர். அவர்களில் மூத்த குமாரியும இங்கிலாந்து சென்றுள்ளார். இத்தகைய அவரது குடும்பத்தில் ஐரோப்பிய நாகரிகம் பரவியதில் அதிசயமொன்றில்லை.

அவ்வாறு மேல் நாட்டு நாகரீகங்களை அக்குடும்பத்தார் ஆதரித்து வந்த போதிலும் அவர்கள் மனதில் தாய் நாட்டுப் பற்றுச் சிறிதுங்



குறையவே யில்லை. மோதிலால் அவர்களுக்கே யன்றி அவரது குடும்பத்தா ரனைவருக்குமே தேசாபிமான மென்பது இயற்கையாக விருந்தது. பொது ஜன நன்மைக்கான பல விஷயங்களிலும் மோதிலால் கலந்து வேலை செய்தாராயினும், தேசியப் போராட்டத்தில் வெகுநாள் கலந்து கொள்ளாமலே இருந்தார். 1907-ம் ஆண்டில் வங்காளப் பிரிவினையால் நாட்டில் எழுந்த சுதேசி இயக்கத்தின் போதும் அவர் ஒரு மிதவாதியாகவே யிருந்து உழைத்து வந்தார். அப்பொழுது மிதவாதிகளுக்குத் தலைவரா யிருந்த காலஞ்சென்ற கோகலே அவர்களிடத்தில் இவர் மிகுந்த அன்பு பூண்டிருந்தார். அச்சமயத்தில் நாட்டில் எழும்பிய பஹிஷ்கார வியக்கத்தையும் இவர் கண்டிக்க லானார். ஆயினும் நாளடைவில் சுதேசியத்தை யாதரிக்கவே முற்பட்டார்.

## காங்கிரஸ் பிரசாரமும் கன சமூகச் சேவையும்

நீண்ட நாளாகப் பண்டிதர் மிதவாதியாகவே காங்கிரசினிடத்தில் சம்பந்தம் வைத்துக்கொண் டிருந்தார். 1907-ம் ஆண்டில் அலகாபாத்தில் நடந்த மாகாணக் காங்கிரஸ் மகா சபைக்கு இவர் தலைமை வகித்தார். அச் சமயத்தில் மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் காங்கிரசில் பெரும் போட்டி யிருந்து வந்தது. அம் மாகாணக் காங்கிரஸ் மகா சபை பிளவுபட்டுப் போய்விடுமோ வென்றும் பலர் அஞ்சினர். அந்த நிலையில் நம் பண்டிதர் அச் சபைக்குத் தலைமைப் பூண்டு யாதொரு வேற்றுமைக்கும் பிளவுக்கும் இடமின்றி அச் சபையைத் திறம் படச் சமாசமாக நடத்தி முடித்தார். 1909-ம் ஆண்டில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு இவர் அங்கத்தின ராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். பின்னர் ஆக்ரா நகரில் நடைபெற்ற ஆசார சீர்திருத்த மகாநாட்டுக்கும் மோதிலால் அவர்கள் தலைமை வகித்தார். வெறும் வாய் பேச்சுப் பேசும் வீரர்களைப்போ லன்றி இவர் உண்மையில் ஆசார சீர்திருத்தக் கொள்கைகளைத் தானே நடத்திக் காண்பிக்க முற்பட்டார். ஆடவர்களோடு பெண்களுக்கும் சம சுதந்திரமளிக்க வேண்டுவது நியாயமென்பதை அவர் வற்புறுத்தினார். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந் நாட்டுப் பெண்களின் முன்னேற்றமும் இன்றி யமையாததென வாதித்தார். பெண்கள்

உலகம்அறிவுடையதா யிருந்தாலன்றி ஆடவர்கள் முன்னேற முடியா தென்பதை விளக்கிக் கூறினார். இக் கொள்கைகளினாலேயே இவர் படேலின் விவாக மசோதாவைப் புகழ்ந்து அதை ஆதரித்ததோடு, டில்லியில் நடைபெற்ற படேலின் விவாக மசோதா மகா நாட்டில் தலைமை வகித்து, அம் மசோதா நாட்டின் வளர்ச்சிக்கு அத்தியாவசிய மானதெனக் கூறினார்.

மோதிலால் நேரு அவர்கள் ஐக்கிய மாகாணச் சட்ட சபையில் 1909-ம் ஆண்டு முதல் அங்கத்தினரா யிருந்து வந்தார். சட்ட சபையி லிருந்த இந்திய அங்கத்தினரோடு ஆங்கிலேய அங்கத்தினர்களும் பண்டிதரை நன்கு மதித்து வந்தனர். விஷயங்களை விவாதிப்பதிலும், நடு நிலை குன்றாது அரசாங்கத்தின் சார்பிலும், பொது ஜனங்களின் சார்பிலும் குறைகளை எடுத்துக் காட்டிக் கண்டிப்பதிலும் அவர் காட்டிய திறமையை யாவரும் புகழ்ந்தனர். நண்பர்களென்றுங் கருதாமல் பொது ஜனங்களின் சம்பந்தமான விஷயங்கள் விவாதத்திற்கு வந்தபொழுது பொது மக்களின் சார்பில் நின்று கண்டித்துப் பேசப் பின்னடையார். இதற்கு ஓர் உதாரணம் கொடுக்கின்றோம்.

அலகாபாத் முனிசிபாலிட்டியில் நம் பண்டித ரவர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக விருந்தார். அச் சமயத்தில் அம் முனிசிபாலிட்டியார் "ஜிகாங்கீபாத் முனிசிபல் திருத்தம்" எனப் பெயர் பெற்ற 'நகர சபையில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்வத்தை ஏற்படுத்துவதற்கான' ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். அதனால் முகம்மதியர்களுக் கென சில புதிய ஸ்தானங்கள் முனிசிபாலிட்டியில் ஏற்படலாகும். எனவே அவ்வாறு முஸ்லிம்களுக்குத் தனி ஸ்தானங்கள் ஒதுக்குவது கூடாதென பண்டித மாளவியா, சிந்தாமணி முதலியோர் அதைக் கண்டித்தனர். ஆனால் நமது பண்டித நேரு அத் திருத்தத்தால் ஹிந்து முஸ்லிம் விவாதம் நீங்கி ஒற்றுமை ஏற்படுமெனக் கருதினார். எனவே மேற் கூறிய தமது நண்பர்கள் அத் தீர்மானத்தைக் கண்டித்தபோதிலும், தாம் அதை ஆதரிப்பதாகப் பகிரங்கமாகக் கூறினார். பண்டித நேருவுடன், தேஜ் பகதூர் சாப்ரூவும் ஒன்றாய்க் கூடினார். ஆகவே இரு தரப்பி



லும் விவாதங்கள் எழும்பின. மாளவியா அவர்கள் பிரசங்கங்களின் வாயிலாகவும், சிந்தாமணி யவர்கள் தமது "லீடர்" பத்திரிகையின் வாயிலாகவும் அத் திருத்தத் தீர்மானத்தைப் பலமாகக் கண்டித்து வந்தனர். ஆயினும் நம் பண்டிதர் பின் வாங்காது தமது கருத்தை வலி யுறுத்தியே வந்தார். அதனால் இந்திய மக்களில் பலர் பண்டிதரைக் கண்டிக்கவும், அவரைத் தூஷிக்கவும் முற்பட்டனர். ஆனால் முகம்மதிய சமூகத்தார் நம் பண்டித நேருவை ஓர் உத்தமத் தலைவராகப் பாராட்டிப் புகழ்ந்து அவரை யாதரித்தனர். அவ்வாறு முனிசிபாலிட்டியில் அபிப்பிராய பேதம் வலிமை யடையவே, நம் மோதிலால் அவர்கள் அம் முனிசிபாலிட்டியி னின்றும் நீங்கிக்கொண்டார். இவர் நீங்கியதால் பொது மக்கள் மனோ சாந்தமின்றி மிகவும் வருந்தினர்.

மோதிலால் நேரு அவர்கள் ஆத்ம கௌரவம் வாய்ந்தவர். தம் சுய மரியாதைக்குப் பங்கம் வருங் காலத்தில் அதைச் சிறிதும் பொறுக்கமாட்டார். அதற்கும் ஓர் உதாரணங் கூறுவோம். 1917-ம் ஆண்டில் ரூர்க்கி கலாசாலைத் தலைவரான உட் என்பவர் இந்தியர்களின் கௌரவத்தைப் பற்றியும், நடத்தையைப் பற்றியும் கேவலமாய்ப் பேசினார். அதுபற்றி இந்தியப் பத்திரிகைகள் வன்மையாகக் கண்டித்தன. எனினும் நம் மோதிலால் நேரு அவர்கள் அவ்வளவோடு விடாது, ஐக்கிய மாகாணச் சட்ட சபையிலும் அது பற்றிக் கண்டிக்க ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். அதை யறிந்த அச் சட்டசபைக் காரியதரிசியார் ஷெ உட் என்பவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாரென்று சமாதானங் கூறினார். அச் சமயத்தில் சட்டசபைத் தலைவரா யிருந்த கவர்னர் ஸர். ஜேம்ஸ் மெஸ்டன் துரை அதுவே பரிகாரமெனக் கொண்டு பண்டித நேருவுக்கு மறுபடியும் பதில் கூறச் சந்தர்ப்பங் கொடாமலேயே வேறு விஷயங்களைக் கவனிக்கத் தொடங்கினார். அதை யறிந்த மோதிலால் அவர்கள் 'சட்ட சபைக் காரிய தரிசி கூறிய வார்த்தைகளுக்கு நான் பதில் கூற வேண்டியவனா யிருக்கிறேன்; ஆகவே நான் பேசுவதற்கு இடமளிக்க வேண்டும்" என்று கேட்டார். அதைச் சபைத் தலைவர் மறுத்துவிட்டார். அதைக் கண்ணுற்ற பண்டிதர் 'சுய மரியாதையைக் காக்கத் துணை

புரியாத அச் சட்ட சபையில் வீற்றிருப்பதினும் எழுந்து வெளிச் செல்லுவதே உத்தமம்' எனக் கடிந்து கூறிச் சபையை விட்டு வெளியேறினர். பண்டிதரின் சினத்தைக் கண்ட கவர்னர் இந்திய அங்கத்தினர் சிலரையும் அனுப்பிப் பண்டிதருக்குச் சமாதானங் கூறி மீண்டும் சபைக்கு அழைத்துவர வேண்டிக்கொண்டார். அதன்மேல் பண்டிதர் தமது ஆப்த நண்பர்கள் சிலரது கட்டாயத்தின்மேல் மீண்டும் சபைக் கேகினார்.

## தேசாபிமானமும் தேசத் தொண்டும்

அலகாபாத்தில் பண்டிதரின் சம்பந்த மில்லாத பொது ஸ்தாபனங்களே கிடையாதெனக் கூறலாம். அந் நகரிலுள்ள சேவா சமிதியென்ற பரோபகாரச் சங்கத்திற்கு இவர் உப தலைவரா யிருந்தார். அச் சங்கத்தார் க்ஷாமம், தொத்து நோய்கள், கலகம், எதிர் பாராத ஆபத்து இவைகளால் பொது மக்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படுங் காலத்தில் அங்கு சென்று துன்புறும் மக்களுக்கு ஏற்ற உதவிகள் புரிவார்கள். அச் சங்கத்திற்கு நம் பண்டிதர் ஏராளமான பண உதவி புரிந்து வந்தார். 1919-ம் ஆண்டில் பஞ்சாப்பில் நடைபெற்ற ஜாலியன்வாலா பாக் கலகத்தில் அவஸ்தை யுற்ற மக்களுக்கு அச் சங்கத்தார் செய்த உதவிகள் பல. கல்வி யபிவிருத்தியில் பண்டிதருக்குக் கவலை யதிகம். இவரது உதவியினால் அலகாபாத்தில் பகற் பள்ளிக்கூடங்களும், இராத்திரிப் பாடசாலைகளும் ஏராளமாக நடந்து வருகின்றன. பெண் பாடசாலைகள் பல தோன்றுவதற்கு உதவி புரிந்துள்ளார். அலகாபாத்தி லிருக்கும் வித்யா மந்திரக் கல்விச் சாலையை மிகவும் ஏழ்மையான ஸ்திதியிலிருந்த காலத்தில் அதற்கு வேண்டிய பொருளுதவி புரிந்து அதை மேலோங்கச் செய்தார். அலகாபாத் ஹைக்கோர்ட்டு நியாயவாதிகளின் சங்கத்திற்கும் மோதிலால் நேரு தலைவராக விருந்தார். எனினும் அதுவரையில் அவர் தேசீய முயற்சிகளில் மிதவாதியாகவே இருந்து வந்தார். 1917-ம் ஆண்டில் துரைத்தனத்தார் டாக்டர் பெசண்டு முதலிய ஹோம்ரூல் இயக்கத் தலைவர்களைக் காவற்படுத்தியது முதல், மேன்மேலும் அரசாங்கத்தார் காட்டி வந்த அடக்கு முறைச் செயல்கள் பறவற்றாலும் மோதிலால் நேரு மிதவாதக் கொள்கையி



னின்றும் நழுவிச் சிறுகச் சிறுக அமிதவாதக் கொள்கையைத் தழுவலானார். மாண்டேகு சீர் திருத்தங்கள் வந்த காலத்தில் பாரத மக்களின் நோக்கத்திற்கு அஃது ஒரு சிறிதும் தகுதி யற்றதென்று வன்மையாகக் கண்டித்தார். 1919-ம் ஆண்டில் அமிர்தசரசில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸின் தலைமைப் பதவியை இந்திய மகா ஜனங்கள் நம் பண்டித நேருக்குக் கொடுத்துக் கௌரவித்தனர். அதுகாலை அவர் தமது தலைமைப் பேருரையில் மாண்டேகு சீர் திருத்தங்களின் பயனற்ற தன்மையை விளக்கமாக எடுத்துரைத்தார். இந்தியரின் கருத்துக்கு முரணாகச் செய்யப்பட்ட ரௌலட் சட்டத்தை நம் மோதிலால் அவர்கள் வன்மையாகக் கண்டித்தார். ஐக்கிய மாகாண மெங்கும் ரௌலட் சட்டத்தின் கொடுமைகளைப் பொது மக்களுக்கு எடுத்துக் கூறி அதைக் கண்டிக்க வேண்டி வெகு முயற்சிகள் செய்தார். துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார். உபந்நியாசகர்களைத் தயாரித்தார்.

அதுகாலைத் தமது கருத்துக்களை உள்ளவாறு வெளியிடுவதற்காக வேண்டி "இண்டிபெண்டெண்ட்" என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். ஏற்கெனவே சிந்தாமணி யவர்களால் நடத்தப்பட்டு வந்த "லீடர்" பத்திரிகையின் அதிகாரிகளுள் பண்டித நேரும் ஒருவரா யிருந்திருப்பினும் "லீடர்" பத்திரிகை மிதவாதத்தையே தழுவி நின்றபடியால், தமக்கெனத் தனியாக "இண்டிபெண்டெண்ட்" பத்திரிகையைத் தீவிரக் கட்சியின் சார்பாகப் பிரசுரிக்க லானார். அப் பத்திரிகை தேசீயக் கொள்கையைத் தீவிரமாக நாட்டில் பிரசாரம் செய்து வந்ததும், துரைத்தனத்தாரின் அடக்கு முறைகளுக்கு அஃது ஆளானதும், ஒரு சமயம் கையால் எழுதப்பெற்று அப் பத்திரிகை வெளி வந்ததும் பிறவும் பத்திரிகா நேயர்கள் அறிந்த விஷயங்களே யாம். நாட்டின் விவசாயம், கைத்தொழில் முதலியவற்றில் பண்டிதருக்கு அபிமானம் அதிகம். எனவே நாட்டில் பல விவசாயச் சங்கங்கள் தோன்றவும் கைத் தொழிற் பாங்கிகள் பல ஏற்படுவதற்கும் அவர் காரணரா யிருந்தார்.

அவ்வாறு மோதிலால் நேரு அவர்கள் பொது மக்களின் சார்பில் நின்று அமிதவாதியாக வேலை செய்தாராயினும் உண்மையும், நியாயமுமான விஷயங்களில் சர்க்காருடன் ஒத்துழைப்பதிலும் பின் வாங்கியவரல்ல. துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்ட பிரசாரக் கூட்டத்தில்

பண்டித நேரும் ஒருவரா யிருந்தார். ஐரோப்பிய யுத்த காலத்தில் நந் துரைத்தனத்தாருக்கு உதவியாக இந்தியப் பாதுகாப்புப் படைக்கு ஆட்களைச் சேகரிக்கவும் இவர் முன்னின்று உழைத்தார். அவ்விதம் துரைத்தனத்தாருடன் ஒத்துழைக்க வேண்டிய காலத்தில் ஒத்துழைத்தும், அவர்கள் செய்கையைக் கண்டிக்க வேண்டிய காலத்தில் வன்மையாய்க் கண்டித்தும் வந்தார். நந் நாட்டில் அதிகார வர்க்கத்தினரின் அக்கிரமச் செய்கைகளை அவ்வப்போது பகிரங்கமாகவும், பலமாகவும் கண்டித்தவர்களில் நம் பண்டிதரும் முதன்மையானவராகும்.

## ஒத்துழையா இயக்கமும் உறுதியான தியாகமும்

மகாத்மா காந்தி யடிகளாரால் நாட்டில் சத்தியாக்கிரக இயக்கம் தோற்றுவிக்கப் பட்ட ஆரம்ப காலத்தில் பண்டித நேரு அதில் முற்பகுதியை ஒப்புக் கொண்டு, பிற்பகுதியைத் தாம் ஒப்புக் கொள்ள முடியா தென்று மகாத்மாஜியின் முன்னிலேயே கூறினார். ஆயினும் தம்மாலியன்ற வரையில் சத்தியாக்கிரக இயக்கத்திற்குத் துணை புரிந்தே வந்தார். பஞ்சாப் கலக நிகழ்ச்சியின் போது காயமுற்றவர்களுக்குச் சிகிச்சைகள் புரிய வைத்திய சாலைகளை யேற்படுத்தியும், ஏழை மக்களுக்குப் பண வுதவி புரிந்து ஆதரித்தும், பிற வகைகளில் துன்புற்றவர்களுக்கு ஏற்ற உதவிகள் செய்தும் பண்டிதர் புரிந்த ஊழியம் என்றும் மறக்கற் பாலதன்று. அச் சமயத்தில் காய முற்றவர்களையும், மரண மடைந்தவர்களையும் கணக் கெடுத்து உலகுக் கறிவிக்க வேண்டித் தக்காரை ஒரு சங்கமாக நியமித்தார். இவ்வாறு பண்டிதர் செய்த வேலைகள் பலப் பல. அந்த நிலையில் அவரது திருக்குமாராகிய ஜவஹர்லால் நேரு ஒத்துழையாமை இயக்கத்திற் சேர்ந்து உழைக்க ஆரம்பித்தார். ஜவஹர்லால் அவர்களின் வேலைகள் யாவும் உருக் கொண்டு அவரது தந்தையாரையும் ஒத்துழையாமை யியக்கத்தில் பங்கு பெறுமாறு செய்து விட்டன. எனவே மோதிலால் நேரு அவர்களும் ஒத்துழையா யியக்கத்திற்குத் தலைவராயினார். அவ் வியக்கத்தி லிறங்கியது முதல் அவரது வாழ்க்கையில் புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. ஐரோப்பிய நாகரீக இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த மோதிலால் அவர்கள் அவ் வாழ்க்கையினை உதறித் தள்ளிப்



பண்டை இந்தியாவின் ஆடம்பரமற்ற புனித வாழ்க்கையை மேற்கொண்டார். ஆயிரக் கணக்காய் வருவாய் வந்துகொண் டிருந்த தமது வக்கீல் தொழிலை 1921-ம் ஆண்டு டிசம்பர்மீ 6௳ தேச சேவையின் பொருட்டு விட்டொழித்தார். முற் காலத்திய முனிபுங்கவர்கள் காடுகளில் பர்னக சாலைகளில் வதிந்து நடாத்திய வானப்பிரஸ்தாச்சிரம வாழ்க்கையைத் தமக்கு ஆதர்சமாகக் கொண்டார். மஞ்சத்தின் மீது பூந்துகிற் படுக்கையிற் படுத்ததை விட்டு நிலத்தில் படுத்துறங்கலானார். பதினைந்து நாட்களுக் கொரு முறைப் பாரிசி னின்றும் வெளுத்து வந்துகொண் டிருந்த மெல்லிய ஆடைகளுக்குப் பதிலாகக் காடு முரடான கத்தர் ஆடைகள் அவரது உடலை அழகு செய்தன. திராட்சை ரசம் போன்ற ஐரோப்பிய இனிய பான வகைகளுக்குப் பதிலாகத் தெளிந்த நீரை உயர் பானகமாகக் கொண்டார். மற்றும் பல போக பாக்கியங்களைத் துறந்து எளிய வாழ்க்கையில் நடக்கப் புகுந்தார். மாடமாளிகையில் வசிப்பதை விடுத்துச் சிறு குடிலில் வசிக்கத் துணிந்தார். அவரது தியாகத்தின் உயர்வைக் கவனியுங்கள். உண்ண உணவில்லாத ஒருவன் உபவாச மிருப்பதும், தங்க வசதி யில்லாதவன் வீடின்றித் தவிப்பதும், கையில் துட்டில்லாதவன் சுக போகங்களை வெறுப்பதும் ஒரு போதும் தியாக மெனக் கூறப்பட மாட்டாது. சகல போக பாக்கியங்களையுங் குறைவறப் பெற்ற ஒருவர் அச் சுகங்களை யற்ப மெனத் துறந்து எளிய வாழ்க்கையை மேற் கொள்வதே உண்மையில் தியாக மெனப் படும். அவ் வகையில் நம் பண்டித நேருவின் தியாகம் ஒப்பற்று விளங்குவதை யாரால் குறை கூற முடியும்? தியாகத்தில் பெயர் பெற்ற ததீசி, வீஷ்டுமர் முதலிய புராண புருஷர்களுக்கு நமது நேருவும் ஒப்பாவா ரன்றோ?

அவ்வாறு பண்டிதர் சத்தியாக்கிரக விரதத்தைப் பூண்டு ஒத்துழையா யியக்கத்தில் விரைந்து வேலை செய்து வருகையில் 1920-ம் ஆண்டில் இராஜாங்க விரோதமான செயல்களுக்கு இவர் துணை நின்றாரென்ற காரணத்தைக் காட்டி ஐக்கிய மாகாண துரைத்தனத்தார் மோதிலால் அவர்களுக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதித்தார்கள். இவருடன் இவரது புத்திராகிய ஜவஹர்லால் நேருவும் அதே சமயத்தில் அரசாங்க விருந்தினரானார். தந்தைக்கும் தனயனுக்கும் ஏக

காலத்தில் ஏற்பட்ட சிறைவாச தண்டனை யானது நாட்டில் தீவிரக் கிளர்ச்சியை யுண்டாக்கியது. பின்னர் மகாத்மா காந்தி யடிகளார் பார்டோலியில் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்கத் தீர்மானித்தார். அதன் பின் சர்க்காரார் மகாத்மாவையும் சிறையிலிட்டனர். அந்த நிலையில் பண்டித மோதிலால்ஜி சிறையி னின்று வெளி வந்தார். அச் சமயத்தில் நாட்டில் சட்ட மறுப்பைப் பற்றி விசாரணை செய்ய தேசீயக் கமிட்டி யொன்று ஏற்படுத்தப்பட்டது. அதிலும் நேரு அவர்கள் கலந் துழைத்தார். அக் கமிட்டி யங்கத்தினரில் சிலருக்குக் காங்கிரஸ் வாதிகள் சட்ட சபைகளுக்கு உள்ளேயும் சென்று முட்டுக் கட்டை போட வேண்டு மென்ற எண்ணம் உதித்தது. அக் கருத்தை மற்ற அங்கத்தினர்கள் மறுத்தனர்.

## சுய ராஜ்யக் கட்சியும் சட்டசபை யாட்சியும்

அந்த நிலையில் கயாவில் காங்கிரஸ் மகா சபைக் கூடியது. அச் சபைக்குக் காலஞ் சென்ற சித்த ரஞ்சன தாசர் தலைமைப் பூண்டார். அவர் சட்ட சபைப் பிரவேசத்தை ஆதரித்துப் பேசினார். ஆயினும் அக் காங்கிரஸ் மகா சபை அக் கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது. அதன் பின் சித்தரஞ்சன ருள்ளிட்ட சிலர் ஒன்று கூடி காங்கிரசிலேயே சட்ட சபைப் பிரவேசத்தை யாதரிப்பதற் கென "சுயராஜ்யக் கட்சி" யென்ற பெயரால் ஒரு சங்கம் நிறுவினர். அதற்குத் தாசர் தலைவராகவும், மோதிலால் நேரு காரியதரிசியாகவும் அமர்ந்தனர். அவ் விருவரும் செய்து வந்த பிரசாரத்தின் பயனாய் நாளடைவில் சுயராஜ்யக் கட்சிக்குப் பலம் அதிகரித்து வந்தது. அதனால் 1923-ம் ஆண்டில் நாட்டில் நடை பெற்ற சட்ட சபைத் தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சியினர் பெரும்பாலாராகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். சித்தரஞ்சனர் வங்காள மாகாண சட்ட சபைக்கும், மோதிலால்ஜி இந்தியா சட்ட சபைக்கும் தேர்தலில் நின்று வெற்றி பெற்றனர். இந்தியா சட்ட சபையில் சுயராஜ்யக் கட்சியாருக்கு அதிக பலமில்லாமற் போயினும், வேறெக் கட்சியினரையும் விட இவர்களே அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றி யிருந்தனர். எனவே அச் சட்ட சபையில் எதிர் கட்சியாக வமைந்த சுயராஜ்யக் கட்சிப்



பிரதிநிதிகளுக்கு நம் பண்டித நேரே தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். சட்ட சபையில் நேரு அவர்கள் செய்த வேலைகள் பல. துரைத்தனத்தாரின் எதேச்சாதிகாரத்தை அவர் ஒவ்வொரு படியிலும் தடுத்து மடக்கி வந்தார். என்ன செய்து மென்ன! சட்ட சபை இயந்திரம் வழக்கம் போல் இயங்கிக் கொண்டுதா னிருந்தது. எனினும் சட்ட மறுப் பியக்கம் நிறுத்தப்பட்டதி னின்றும் ஓய்ந்து நின்ற பாரத மக்களுக்குச் சுயராஜ்யக் கட்சியினரின் சட்ட சபை வேலை ஒரு புதிய உற்சாகத்தைக் கொடுத்து வந்தது.

1924-ம் ஆண்டில் இந் நாட்டின் தேசீயக் கோரிக்கைகளை விவாதித்து முடிவு செய்வதற்காகச் சர்வ கட்சி மகா நாடொன்றைக் கூட்டுவிக்க வேண்டு மென்ற தீர்மான மொன்றைப் பண்டித நேரு இந்தியா சட்ட சபையிற் கொணர்ந்து நிறைவேற்றினார். ஆயினும் அத் தீர்மானத்தை அதிகாரிகள் அலட்சியம் செய்தனர். அதனிடையில் தேச பந்து தாசர் காலமாகவே அதன் பின்னர் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிக்கு நமது பண்டிதரே தலைவரானார். மீண்டும் 1926-ம் ஆண்டின் பொதுத் தேர்தல்களிலும் நாடெங்கும் சுயராஜ்யக் கட்சியினர் பெருந் தொகையினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பழைய படி மீண்டும் இந்தியா சட்ட சபையில் பண்டித நேரே எதிர்க் கட்சித் தலைவராக விருந்தார்.

அதன் மேல் மாஜி இந்தியா மந்திரியின் சவாலுக்குப் பதிலாக தேச மக்களால் இந்தியாவில் சர்வ கட்சிக் கமிட்டி யொன்று ஏற்படுத்தப் படவே, அவர்களால் இந்தியாவுக்குரிய புதிய அரசியல் திட்டமொன்று வகுக்கப்பட்டுப் பிரசித்தம் செய்யப்பட்டது. அக் கமிட்டிக்கும் பண்டித நேரு அவர்களே தலைவராக விருந்து உழைத்தார். அதனாலேயே அவ் வரசியல் திட்டத்திற்கு இன்று நேரு திட்டம் (யாதாஸ்து) என்ற பெயர் வழங்கி வருகிறது. அத் திட்டத்தை நிருமிப்பதில் பண்டிதர் காட்டிய அரசியல் ஞானம் மேல் நாட்டு மேதாவிகள் பலராலும் வியந்து போற்றப் படுகிறது. சைமன் கமிஷனாரும், சமீபத்தில் லண்டனில் நடை பெற்ற வட்ட மேஜை மகா நாட்டுக்காரரும் தங்கள் விசாரணையில் நேரு திட்டத்தையும் ஆதாரமாகக் கொண்டன ரென்பதை நாம் கவனிக்க வேண்டும்.

## சுயேச்சைத் தீர்மானமும் சுதந்திரப் போரும்

1928-ம் ஆண்டில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபைக்கு (இரண்டாவது முறையாக) மோதிலால் நேரு தலைமை வகித்தார். அதற்கடுத்த ஆண்டாகிய 1929ல் லாகூரில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு அவரது புத்திரராகிய ஜவஹர்லால் நேரு தலைமைப் பூண்டார். தந்தையும், தனயனும் முறையே இரண்டு ஆண்டுகளில் ஒரு நாட்டின் உயர்தனிச் சிறப்பு வாய்ந்த காங்கிரசின் சிங்காதன மேறும் ஒப்பற்ற பாக்கியத்தை நேரு குடும்பத்தாரன்றி உலகில் யாரே பெற்றார்? மகாத்மா காந்தி யடிகளாருடன் கூடிய லாகூர் காங்கிரஸ் மகா சபையானது பூர்ண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றியதுடன் அதைப் பெறுவதற்கான வழிகளையும் வகுத்தது. அவை யனைத்திற்கும் நம் மோதிலால்ஜி முழு ஆதரவைக் காட்டி வந்தார். மகாத்மாஜி தொடங்கிய சுதந்திரப் போரில் அவருக்குப் பண்டிதர் வலது புஜமாக நின்றார். அலகாபாத்தில் தாம் வசித்து வந்த, லக்ஷக் கணக்கான செலவில் நிருமிக்கப்பட்ட "ஆனந்த பவன்" என்ற ஒப்பற்ற பிரம்மாண்டமான தமது மாளிகையை தேச நலத்திற்கென வினியோகிக்கக் கருதி, அகில இந்தியக் காங்கிரசுக்கு அர்ப்பணஞ் செய்து விட்டார். அஃது இன்று "சுயராஜ்ய பவன்" என்று பெயர் சூட்டப் பெற்றுக் காங்கிரஸ் காரியாலயமாக உபயோகிக்கப் பட்டு வருகிறது.

காங்கிரசின் பெயரால் உப்புச் சட்ட மறுப் பியக்கம் நாட்டில் தொடங்கப் பெற்ற சமயம் மகாத்மாவுடன் லாகூர் காங்கிரஸ் தலைவராகிய பண்டித ஜவஹர்லால் நேரும் சிறை புகுந்தனர். அதன் பின் காங்கிரஸ் தலைமைப் பதவியைத் தாற்காலிகமாகப் பண்டித மோதிலால் நேரு ஏற்று சுதந்திரப் போரை நடத்தி வந்தார். அதனால் மோதிலால் அவர்களையும் துரைத்தனத்தார் கைதி செய்து அவருக்கு ஆறு மாத சிறைவாசம் விதித்தனர். அதன் பின்னர் நாட்டில் எழுந்த எழுச்சியின் வேகத்தை யாரே அளவிட்டுக் கூற முடியும்? பதினாயிரக் கணக்கான மக்கள் சாத்வீகச் சட்ட மறுப்புப் போரில் இறங்கிச் சிறைச் சாலையை நிரப்பலாயினர். அதில் நமது மோதிலால் நேருவின்



மருமகளும், ஜவஹர்லால் நேருவின் மனைவியாருமாகிய ஸ்ரீமதி. கமலா நேருவும், அக்கமலா நேருவின் தாயாரும், மோதிலாலின் இளைய குமாரியும், நேருவின் மருமகனாகிய ஆர். எஸ். பண்டிதரும் சிறை சென்றவர்களே யாவர். மோதிலால்ஜி யவர்களின் மனைவியாரும், அவரது மூத்த குமாரியும் சிறைவாசத்திற்குத் துணிந்து இயக்கத்தில் தீவிரமாக வேலை செய்து வந்தார்களாயினும், ஏனோ அதிகாரி இன்று வரையில் அவர்களைக் கைதி செய்யாது விட்டனர்! எனவே மொத்தத்தில் நேரு குடும்பத்தாரனைவரும் சுயேச்சைப் போரில் முன்னணியில் நின்று சிறை புகுந்தனரென்றால் அவர்களின் பண்டைப் பெருமை மற்றொரு முறை உலகில் ஒளி வீசுகிறதன்றோ?

## உடல் மெலிவும் உயிர் நீக்கமும்

முன்னர்க் கூறியவாறு மாட மாளிகையில் இன்ப வாழ்வில் சுக மெய்தி னின்ற மோதிலால் நேரு அவர்கள் சிறை வாசத்தில் தம் உடல் நலங் கெடவே அசௌகரியத்திற் குள்ளானார். பண்டிதரின் உடல் நிலை கவலைக் கிடமா யிருந்ததை யுணர்ந்த அதிகாரிகள் வைத்தியர்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து யாதொரு நிபந்தனையு மின்றி யுடனே அவரை விடுதலை செய்தனர். சிறையினின்றும் வெளி வந்த பின்னரும் உடல் நலத்திற் குரிய சிகிச்சைகள் செய்து கொண்டு வந்தார். அதற்காகவே அவர் சென்னைக்குஞ் சென்றார். அதே சமயத்தில் அவரது புதல்வர் ஜவஹர்லால் நேரு ஆறு மாத சிறைவாச நாள் கழிந்தமையின் சிறையினின்றும் வெளிப் போந்தார். அவர் வெளி வந்த பின்னரும் அதிகாரிகள் அவருக்குப் பற்பல தடை யுத்தரவுகள் போட்டு வந்தனர். அதற்குள் மோதிலால் நேரு தமது பிரயாணத்தினின்றும் திரும்பி அலகாபாத்திற்கு வந்து சேர்ந்தார். தந்தையார் வீடுற்ற செய்தியைக் கேட்டு ஜவஹர்லால் நேரு அவரைக் காண வேண்டி ஒரு கூட்டத்தினின்றும் திரும்பி வந்துகொண்டிருந்தார். அச் சமயத்தில் வழியிலேயே அவரைப் போலீசார் கைதி செய்து சிறைக்குக் கொண்டு சென்றனர். அவ்வாறு தமது புதல்வரைக் காண முடியாமற் போன சம்பவம் மோதிலால் நேரு அவர்களின் உடல் நிலையைப் பின்னும் அதிகமாகத் தாக்கியதெனலாம். எனினும் கர்ம வீரராகிய மோதிலால்ஜி மனங் கலங்கியவரன்று. தம்

செய்து அங்கேயே வாழ்வாராயின், அவருக்குப் பிறக்கும் புத்திரர் ஆங்கிலேயரை யொத்து மிகுந்த வெளுப்பு நிறமுள்ளவராகவே யிருப்பர். ஒரு தேசத்தார் வெளுப்பு நிறத்தாராயும் மற்றொரு தேசத்தார் கறுப்பு நிறத்தாராயு மிருப்பது முக்கியமாக அவ்வத் தேசங்களின் சீதோஷ்ண நிலைமையைப் பொறுத்ததேயாம். ஒருவருடைய நடை உடை பாவனைகளைப் பற்றி அவருடைய சுதேசம் இன்னதெனக் கொள்ளலாமோ வெனின் இந்தியர் ஒருவர் இந்தியருடைய நடை, உடை, பாவனைகளையும் ஆங்கிலேயர் ஒருவர் இந்தியருடைய நடை, உடை, பாவனைகளையும் கைக் கொள்ளக் கூடுமாதலின், அதுவும் பொருந்தா தென்க.

பின்னர் ஒருவருக்குச் சுதேசம் இன்னதெனக் கொள்ளுமாறு தான் யாங்ஙன மெனின், ஒருவருடைய உற்பத்திக்கு அவருக்குத் தெரிந்த வரையிலும் முற் காரணரா யிருந்த முப்பாட்டன் முப்பாட்டி முதலிய முன்னோர் பிறந்த தேச மெதுவோ அதுவே அவருக்குச் சுதேசமெனக் கொள்ளற் பாலதாம். ஒருவருடைய உற்பத்திக்குக் காரணரா யிருந்த ஸ்திரீ புருஷர்களில் ஸ்திரீயின் தேசம் எதுவோ அதுவே அவருக்குச் சுதேசம் எனச் சிலரும், புருஷர் தேசம் எதுவோ அதுவே அவருக்குச் சுதேசம் எனச் சிலரும் கூறு நிற்பர். அவ் விருவர் கொள்கையும் பொருத்த முடைத்தே யாம்.

## அபிமானம்

அபிமானம், அன்பு என்பன ஒரே பொருளைக் குறிக்கும் வட மொழி, தென் மொழிச் சொற்கள். இனி அன்பு என்பது யாதோ வெனின், அது குடத்தினுள் விளக்குப் போலும் உறையினுள் வாள் போலும் மனத்தின் கண் நிகழும் ஒருவித நெகிழ்ச்சி. நெகிழ்ச்சி யென்பது குறைதல், இளகுதல் எனப் பொருள்படும். அன்பின் உண்மையை அனுபவமாக அறியலாம், அல்லது அது வெளிப்படுங்கால் அறியலாம். அதனை அனுபவமா யறிதலாவது நாம் நீடித்த நாளாகப் பிரிந்திருக்கும் நம் உற்றார் ஒருவரைப் பார்க்க வேண்டு மென்று நம் மனத்தி லுதிக்கும் பிரியம் நாம் அவர் மீது கொண்ட அன்பின் வழித்தென் றுணர்தலாம்



அதனை வெளிப்படுங்கால் அறிதலாவது "ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்" என்றபடி நமக்குரியார் ஒருவருக்குத் துன்பம் நேரிடுங்கால் நம்பால் தோன்றும் கண்ணீர் முதலிய குறிகளால் அறிதலாம். சுருக்கிச் சொல்லின், அன்பு என்பது தொடர்புடையார் மாட்டுத் துன்பம் கண்ட வழி துக்கிக்கவும் சுகம் கண்ட வழி சுகிக்கவுங் காரணமாக நிற்குமோர் அக நெகிழ்ச்சியாம்.

## இயற்கைக் குணம்

சுதேசாபிமான மில்லாத மாந்தர் உலகினில் ஒருவருமே யிலர் ஒருவருக்குச் சுதேசாபிமானம் உண்டென்றும் மற்றொருவருக்குச் சுதேசாபிமான மில்லையென்றுங் கூறுதல் அவ் விருவரும் முறையே சுதேசத்தின் மீது கொண்டிருக்கும் அன்பின் மிகுதியையும் குறைவையும் குறித்தே யன்றி வேறன்று. பெற்ற பிள்ளை யிடத்து அன்பிலார் உளரெனக் கூறினுங் கூறலாம். பெற்ற அன்னைபால் அன்பிலார் உளரெனக் கூறினுங் கூறலாம். சுதேசத்தின்மீது அன்பிலார் உளரெனக் கூறொணாது. என்னை? ஒருவருடைய சுதேசம் என்பது அவருடையவும் அவருடைய முன்னோருடையவும் பிறப்புக்கும் வளர்ப்புக்கும் மற்றவற்றுக்கும் ஆதாரமா யிருப்ப தாதலின். ஒருவருக்கு நெடுங் காலம் பால் கொடுத்து வந்த ஒரு பசுவின் மீதும் ஒருவருக்கு நெடுங் காலம் வசிக்கு மிடமா யிருந்த ஒரு கட்டிடத்தின் மீதும் அன்பிருப்பது பிரத்தியட்சானுபவம். அங்ஙன மிருந்தும் சுதேசாபிமானம் சிற்சிலரிடம் வெளிப்படக் காணவில்லையே யெனின், அவருக்கு மிக நெருங்கி யுள்ள சில பொருள்களின் மீதுள்ள அபிமானத்தால் அது உள்ளடங்கிக் கிடக்கின்றது. இதனை ஒரு உதாரண முகத்தால் விளக்குகின்றேன்.

மதுரைவாசி ஒருவர் இங்கிலாந்து தேசத்துக்குச் சென்று அங்குப் பலநாள் வசித்திருந்து பின்னர் இந்தியாவுக்கு வருகின்றார். அவர் வருங் கப்பல் இந்தியாவை அணுகுவதற்கு இரண்டு நாள் ஒருநாளைக்கு முன்னர் அவர் இந்தியாவை நாளைக் கழித்துப் பார்ப்போம் நாளைப் பார்ப்போம் என ஒவ்வொரு நிமிஷமும் அதி ஆவலுட னிருப்பார்; இந்தியாவின் கரையைத் தூரத்திற்

காணவே மிகுதியுஞ் சந்தோஷம் அடைவர். பின்னர் அவர் பம்பாய்த் துறை முகத்தில் இறங்கி ரயில் வண்டியில் பிரயாணமாகி வருங்கால் இந்தியாவைப் பார்க்கவேண்டு மென்றிருந்த ஆவல் நீங்கி மதுரை ஜில்லா எல்கை அணுகுவதை ஆவலுடன் எதிர் பார்த்திருப்பார். மதுரை ஜில்லா எல்கையை அடைந்த பின்னர் அந்த ஆவல் நீங்கி, மதுரை நகர் அணுகுவதை ஆவலுடன் எதிர் பார்த்திருப்பர் இவ்வித அநுபவம் நம்மில் ஒவ்வொருவருக்கும் பிரத்தியட்சம். இதனால் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சுதேசாபிமானம் இயற்கையிலேயே உண்டெனவும், ஆனால் அவ் வபிமானம் அவரவர்க்கு நெருங்கிய மற்றொரு பொருளின் மீதுள்ள அபிமானத்தால் வெளிப்பட்டு விளங்குவதில்லையெனவும் தெரிகின்றது.

## வெளிப்படுத்தும் சமயம்

சுதேசாபிமானம் ஒவ்வொருவருடைய மனத்திலும் உண்டென்பது உண்மையாயினும் சமயம் வாய்ந்துழி அதனை வெளிப்படுத்தி அதற்குரிய செயல்களைச் செய்யவேண்டும். இன்றேல், சுதேசாபிமானத்தால் யாரொருவருக்கும் யாதொரு பயனுமிலதாம். சுதோசாபிமானத்தை உபயோகப்படுத்த வேண்டுவது சுதேசத்தாருக்கு அன்னமின்மை, ஆடையின்மை, நோய் முதலிய இடுக்கண்கள் நேர்ந்தபோதும் தெய்வ சிந்தனை, கல்வி யறிவு, செல்வச் சிறப்பு முதலியன குன்றியபோதும், சுதேசத்தார் சுதந்திரம் இழக்கவும் அடிமைத்தனம் பெறவும் நேர்ந்தபோதுமேயாம். ஒருவர் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்தவள் அவருக்குத் தாயென்றால் அவரும் அவருடைய முன்னோரும் பிறப்பதற்கு ஆதாரமாயிருந்த தேசம் அவரைப் பெற்ற தாயினும் மேலென்பதற்குத் தடை யென்னை? ஆகவே, சுதேசத்தாருக்கு நேர்ந்த வறுமை, துன்பம், அடிமைத்தனம் முதலியவற்றை ஒவ்வொருவரும் தத் தம்மை பெற்ற தாய்க்கே வந்ததாகக் கொள்ளல் வேண்டும். பெற்ற தாய் உண்ண அன்ன மில்லாமலும், உடுக்க வஸ்திர மில்லாமலும், அன்னியருக்கு அடிமைப்பட்டும், வருந்தப் பார்த்து மனஞ் சகித்திருக்கும் புத்திரனாய் உலகின்கண் உண்டோ? சுதேசத்தார் சுதேசத் தாயின் பல அவயவங்களே யாவர். அவளுடைய சில அவயவங்களுக்கு நேர்ந்த தீங்குகள் நாளடைவில் அவருடைய மற்றைய அவயவங்களாகிய மற்றவரையுந் தொடர்ந்து மற்றவரும் வருந்த நேரிடு மென்பதை நினைந்து, 'வெள்ளம் வருமுன்னர் அணை கட்டிக்கொள்வது' அறிவிற் சிறந்த மாந்தரது கடமையாம். அன்றிச் சுதேசம் முழுவதும் வறுமை வாய்ப்பட அல்லது அடிமை வாய்ப்பட நேருமானால், பின்னர் அதனை மீட்கவே வழியிரா தாகலின். சமயம் கண்டுழி ஒவ்வொருவரும் அவரவர் சுதேசாபிமானத்தை வெளிப்படுத்தல் வேண்டும்.



## வெளிப்படுத்தும் மார்க்கம்

சுதேசத்தார்க்கு அன்ன மின்மை, ஆடை யின்மை, சுக மின்மை முதலிய வறுமை நேருங்கால் சுதேசாபிமான முள்ள ஒவ்வொருவரும் தத் தம்மால் இயன்ற வரையில் அன்னம், ஆடை, மருந்து முதலிய வற்றை யுதவி அவ் வறுமைகளை நிவர்த்திப்பதுடன் சுதேசத்தார் அவ் வறுமைகளைப் பின்னரும் அடையாது வாழும்படியான செயல்களைத் தேர்ந்து செய்யவும் வேண்டும். சுதேசத்தில் கடவுள் ஞானம், கல்வி யறிவு, பொருளுடைமை முதலியன குறைந்த போது ஒவ்வொருவரும் தத் தம்மால் இயன்ற வரையில் கடவுள் ஞானம், கல்வி யறிவு, பொருள் முதலிய வற்றைச் சுதேசத்தார்க்கு அளிக்க வேண்டும். பலர் கூடி அன்ன சாலை, ஆடை சாலை, வைத்திய சாலை, ஞான சபை, பள்ளிக்கூடம், கைத் தொழிற் சாலை முதலியன ஏற்படுத்திச் சுதேச வறுமைகளைப் பின்னர் வாராது நீக்கவும் வேண்டும். ஆனால், சுதேசத்தார் சுதந்திரம் இழந்து— அன்னியர்க்கு அடிமைப்பட நேருமானால், அவ் வடிமைத்தனத்தி னின்றும் அவரை நீக்கிச் சுதந்திரம் பெறுதற்குச் சுதேசத்தா ரெல்லாரும் ஒன்றுகூடி ஒற்றுமை யுடன் உழைக்க வேண்டும். வறுமையினும் வியாதியினும் சகிக்கொணாக் கொடியது அடிமைத் தனமே. என்னை? ஒருவர் மற்றொருவர்க்கு அடிமையாக விருப்பின் அவர் மற்றவர்க்கு அடிமைத் தொழில் செய்வதையன்றி அவர்தம் சொந்த வறுமையாதிகளை நீக்கிக் கொள்ளுஞ் செயல்களைச் செய்ய வலியில்லாராக வருந்துவ ராதலின். சுதேசாபி

மானச் செயல்களெல்லா வற்றினும் மேம்பட்டதும் முக்கியமானதும் அவசியமாகச் செய்ய வேண்டுவதும் சுதேசத்தார் அடிமைத்தனத்தி லிருப்பின் அதனின்றும் அவரைக் கரை யேற்றுதலே யாம். அடிமை என்ற பெயர் அவருக் கிருப்பதும் இல்லாததும் பொருளல்ல. அடிமைக் கொப்பந்தம ஒவ்வொருவரும் தத் தமக்கு நன்மையையுஞ் சுகத்தையுங் கொடுக்கும் செயல்களைத் தாம் தாமே சுதந்திரமாகச் செய்து கொள்ள வியலாத நிலைமையி லிருப்பதே அடிமைத்தனமாம்.

## ஜாதி மதம்

சுதேசத்தார் ஒன்று சேர்வதற்கும் ஒற்றுமையாக விருப்பதற்கும் முக்கிய தடைகள் ஜாதி பேதம் மத பேதங்களே. உலகத்தில் தாழ்ந்த நிலைமையை யடைந்த ஒவ்வொரு தேசத்தின் சரித்திரத்தையும் கவனிப்போமாயின், சுதேசத்தாருள் ஜாதி பேதம் மத பேதம் ஏற்பட்டுச் சுதேசத்தார் ஒற்றுமையையும் பேதப் படுத்திச் சுதேச நிலைமையையும் பேதப் படுத்தினதாகத் தெரிய வரும். சுதேசத்தா ரெல்லோர்க்கும் பொதுவாயதோர் நன்மையைப் பயக்கும் செயல்களைச் செய்ய வேண்டுங்கால் சுதேசத்தார் ஒவ்வொருவரும் தத் தம்முள் நிகழா நிற்கும் சொந்த வேற்றுமைகளைப் பாராட்டல் கூடாது. மேலும் ஜாதி என்பது தொழில் பற்றியே ஏற்படுத்தப்பட்ட தென நூல்களெல்லாம் கூறுகின்றன. ஒவ்வொரு ஜாதிப் பெயரின் பொருளை உற்று நோக்குவோமாயின், ஜாதிகளெல்லாம் தொழில் பற்றியே உண்டானவை யென்பது நன்கு விளங்கும். இனி ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் தோன்றிய ஒவ்வொரு பெரியவருடைய அறிவு விளக்கமே யன்றி வேறன்று. ஒருவர் அறிவுக்கு மற்றொருவர் அறிவு எல்லா விஷயங்களிலும் பொருத்தமுடையதா யிருக்குமா? சில விஷயங்களிற் பொருத்த மின்றித் தானே யிருக்கக் கூடும். அது பற்றிச் சுதேசத்தாருள் சகோதர வாஞ்சையைக் குறைப்பது நியாயமாகுமா? சுதேசத்தின் நன்மையைக் கருதும் ஒவ்வொருவரும் தத் தம் ஜாதி மதாபிமானங்களை தத் தம் சொந்த விஷயங்களில் மாத்திரம் கவனித்துக் கொண்டு சுதேசப் பொது விஷயங்களிற் பாராட்டாது



பலரும் ஒன்று கூடி ஒரே மனத்துடன் சுதேச அடிமைத் தனத்தை நீக்கிச் சுதந்திரம் பெற வுழைக்க வேண்டும். சுதேச நன்மைக்காக ஒவ்வொருவரும் சமயம் வாய்ந்துழி அவரவர் உடல், பொருள், ஆவிகளைத் தத்தம் பண்ணவும் தயாரா யிருக்க வேண்டும்.

## அடையும் பயன்

சுதேசம் சுகமாக வாழ நாமும் சுகமாக வாழ்வோம். மேலும் அன்ன மில்லாமல் இறந்து படும் அல்லது வருந்தும் சுதேசத்தவருக்கு அன்னம் கிடைக்கும்படி செய்து அவர்களை மரணத்தின் அல்லது பசிவாயினின்று நிவிர்த்திப்போமாயின்,

“ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்”

என்ற முதுமொழிப்படி தவத்தினது வலிக்கு மேற்பட்ட வலியை யெல்லாம் பெறுவோம். தவத்தின் வலியோ,

“வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்”

என்றபடி தவத்தினர் எவற்றை யெல்லாம் அடைய வேண்டுமென்று நினைப்பரோ, அவற்றை யெல்லாம் அந்த நிமிஷமே அடையும்படிச் செய்யும். பிறர் பசியை மாற்றுதல் அத் தவத்திற்கு மேற்பட்ட வலியைத் தருமென்றால், அதனால் நாம் அடையும் பயன்கள் இன்ன வெனக் கூறவும் வேண்டுமோ? இன்னும், அன்புடையவர்,

“அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு”.

என்றபடி அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் அடைந்து வீட்டையும் அடைவர் என்னின், சுதேச அன்பையுடையவர் அடையும் பயன்களை யாவர் தாம் எடுத்துக் கூற வல்ல

ராவர்? சுதேசத்தின் வறுமையை நீக்குவ தென்னில், நம்முடைய வறுமையையும் நம்முடைய பின்னோர் வறுமையையும் நீக்கிய வாறேயாம். வறுமையின் கொடுமையோ,

"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின்
இன்மையே யின்னா தது."

"இன்மை யெனவொரு பாவி மறுமையும்
இம்மையு மின்றி வரும்."

"நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது"

என்று கூறப்பட் டுள்ளபடியால் சுதேசத்தின் வறுமையை நீக்குவதால் எத்தனையோ பேர்களுடைய இம்மை மறுமைச் சுகங்களை யெல்லாம் கொடுக்கிறவ ராகின்றோம். சாதாரணமான தொரு பொருளை ஒருவர்க்கு அளிப்பதால் இம்மையிற் புகழும் மறுமையிற் சுவர்க்க வின்பமும் முடிவில் முத்தி யின்பமும் கிடைக்குமென ஆன்றோர் பலருங் கூறி யுள்ளார். ஆகவே, இம்மை யின்பங்களையும் மறுமை யின்பங்களையும் சுதேசத்தா ரெல்லோர்க்குங் கொடுப்பவர் இம்மைப் புகழையும் மறுமைச் சுவர்க்க வின்பத்தையும் பெற்று முடிவில் முத்திப் பேற்றையும் பெறுவ ரென்பது சத்தியம். ஆதலால் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தத்தம் சுதேசத்திற்கு வறுமை யாதிய நேர்ந்த பொழுது தத்தம் தாய்க்கும் தமக்கும் நேர்ந்ததாகக் கொண்டு அவற்றை நீக்குதற்குரிய செயல்களை யெல்லாம் ஒன்று கூடி ஒற்றுமையுடன் செய்வாராக.



# ஸ்ரீ விவேகானந்தர் போதம்.

திரு. A. சுருளியாண்டி அவர்கள்.

## I

1. நீ எதை நினைக்கிறாயோ, அதுவே யாகிறாய்.

2. சமுதாய, சாஸ்திர வழக்கங்களைக் கடந்தவனே சந்யாசி.

3. தைரியமாயும், உண்மையாயும், சிரத்தையுடனும் எம்மார்க்கத்தையும் பின் பற்றிச் செல். நீ பரிபூரணத் தன்மையை அடைவது நிச்சயம்.

4. உலகில், தாதாவினது நிலைமையை எப்பொழுதும் எடுத்துக்கொள்; எல்லாவற்றையும் ஈய்ந்துவிடு. பதிலை எதிர் நோக்காதே.

5. நன்மை, சத்தியத்தின் அருகே யுளது.

6. நமது துன்பங்களிலும் துயரங்களிலும், உலகமானது மிகவும் பயங்கரமானதோர் இடமாகத் தோன்றுகிறது.

7. அன்பெனும் சூரியன் வானத்தின்கண் உதயமாக ஆரம்பிக்கும்பொழுது, நாம் நமது கர்மங்களனைத்தையும் ஈச்வரார்ப்பணம் செய்ய விழைகின்றோம்.

8 அன்பு, கர்மங்களையும் யோகத்தையும் அறிவையும் பார்க்கினும் பெரிது.

9 அத்தியந்த அன்பும் உத்கிருஷ்ட ஞானமும் ஒன்றே.

10. உண்மையான அன்பிலே, பயமென்பது இருக்க வியலாது; ஏனெனின், பரிபூரண அன்பு பயத்தை நீக்கிவிடும்.

11. சோம்பலையும், உனது கதி என்னவாகு மென்பதையும் பற்றிய சகல சஞ்சலங்களையும் கடந்து அப்பால் செல்வாயாக.

12. பக்தியானது, கால தேசங்களைக் கடந்தது; அகண்டமானது.

13. நீ செய்ததின் பலனைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு பொழுதும் திரும்பிப் பார்க்காதே; எல்லாவற்றையும் ஈச்வரனிடத்துச் சமர்ப்பித்துவிட்டு மேலே செல்வாய்.

14. ஒவ்வொரு சுகத்திற்கும் பின்னே துக்கம் உண்டாகிறது; நமக்கு வேண்டியது சுகமுமன்று, துக்கமுமன்று. ஏனெனின், அவை யிரண்டும் நமது உண்மை நிலையை நாம் மறந்துவிடுமாறு செய்கின்றன.

15. நமது ஆனந்தம் எவ்வளவுக் கெவ்வளவு உள்ளேயுளதோ, அவ்வளவுக் கவ்வளவு ஆத்ம ஞான முள்ளவர்களாக நாமிருக்கிறோம்.

16. ஜீவிதம், தீமையினால் பின் தொடரப் பெறுகிறது; பின் தொடரப் பெறத்தான் வேண்டும்.

17. எனக்காக உலகம், நான் உலகத்திற்காக வன்று. நன்மையும் தீமையும் நமது அடிமைகளே; நாம் அவற்றிற்கு அடிமைகளல்லோம்.

18. தேடாதே, தள்ளவும் செய்யாதே, வருவதை எடுத்துக் கொள்; எதனாலும் பாதிக்கப் பெறாமலிருத்தலே சுதந்திரம்.

19. பொறுமையா யிருந்தால்மட்டும் போதாது. பற்றற்றிரு.

20. உன்னையே நீ ஜயித்துவிடு. உலகம் முழுவதும் உன்னுடையதே.

21. பரிசுத்தத் தன்மையினின்றும், மௌனத்தினின்றுமே சக்தியுள்ள வார்த்தை பிறக்கின்றது.

22. வேற்றுமையைக் கடந்து செல்; அப்பொழுது நீ ஜீவிதத்தையும் மரணத்தையும் ஜயித்து, நித்திய ஒற்றுமையை யடைந்து ஈச்வரனில் லயித்துவிடுகிறாய்; ஈச்வரனே யாகிவிடுகிறாய்.

23. நரகத்தின் மூலமாகவேனும், சத்தியத்தினிடம் வரத் துணிந்துவிடு.



24. உனது சுதந்திரம் பிறரைத் துன்புறுத்துமாயின், நீ சுதந்திர னல்லன்.

25. வேலை செய்வதற்கே உனக்கு உரிமையுண்டு; அதன் பலன்களில் இல்லை.

26. பிரபஞ்சத்திலுள்ள சகல நல்ல நினைப்புகட்கும் நம்மைத் திறந்துகொடுத்துக் கொள்ளின், நாம் அவற்றிற்கு உரிமையாளராகின்றோம்.

27. மதம் ஒன்றே; ஆயின், நாம் வடிவங்கள், அறிகுறிகள், திருஷ்டாந்தங்கள் இவற்றுடன் போராடுகின்கிறோம்.

28. கொடூர முயற்சியினால், ஒருக்காலும் சீர்திருத்த இயலாது.

29. எல்லாத் தேசங்களிலும், வைதீகர்கள் ஒரு பெருந் தீமையா யிருக்கிறார்கள்.

30. கீதையை எழுதியவரது மூளை போன்று ஒரு மூளையை, மனித ஜாதி மறுமுறை ஒரு காலத்திலும் பார்க்கப் போவதில்லை.

31. ஒரே சக்திதான் நன்மை, தீமைகளாக வெளிப்படுகின்றது.

32. உன்னுள்ளே இல்லாத ஒன்றை, நீ வெளியே பார்க்க இயலாது.

33. கண்டனம் செய்தலினால் ஒன்றையும் செய்து முடிக்க முடியாது.

34. சாஸ்திரம் அபிவிருத்தியாக ஆக, சண்டை குறையும்.

35. ஒவ்வொரு நிமிஷமும் மாறுதலடையத் தயாரா யிருந்தாலொழிய, நீ சத்தியத்தை ஒருக்காலும் பார்க்க வியலாது.

36. அழுக்கைத் துடை, உனது மனதை சுத்தம் செய்துகொள்; நீயே பிரஹ்ம வஸ்து வென்பதை ஒரு நிமிஷத்திலே அறிந்துகொள்வாய்.

37. ஆத்மாவிற்கு ஜாதி கிடையாது; அதற்கு ஜாதி யுண்டென நினைப்பது ஒரு மாயையாம்.

38. எல்லா மாயைகளையும் இழந்துவிடுதலே சுதந்திரம்.

39. பேத தர்சனமே எல்லாத் துக்கங்கட்குக் காரணம்.

40. ஞானம், ஒருபொழுதும் சிருஷ்டிக்கப் பெறமுடியாதது; அது கண்டுபிடிக்கப் பெறத்தான் முடியும்.

41. ஜாதியை ஒப்புக் கொள்ளாத, பெரிய இந்திய ஞானி புத்தர் ஒருவரே.

42. அனுபவமே பெரிய உபாத்தியாயர்.

43. பயமில்லாம லிருத்தலே வாழ்க்கையின் ரகஸியம்.

44. எந்தச் சட்டமும் உன்னை முக்தனாக்க முடியாது. ஆயின், ஞானம் ஒன்றினால் மட்டுமே உன்னை முக்தனாக்க முடியும்.

45. சத்தியம் அசத்தியத்தைத் துரத்தி யடித்து விடும்.

46. நீ பலஹீனன் என நினைத்துக்கொள்வதே மிக மிகப் பெரிய பாபம்.

47. ஈஸ்வரன், சத்தியமாயும் அறிவாயும் அகண்டமாயு மிருக்கின்றார்.

48. பகவத் கீதையே, வேதாந்தத்திற்கு மிக மிகச் சிறந்த பிரமாணமாம்.

49. பிரஹ்ம வஸ்துவை ஒரு தரம் அறிந்துவிட்டால், அதற்குப்பின், நீ ஒருபொழுதும் கவலையுடனிருக்க முடியாது.

50. நீ, கர்மத்தினாலே முக்தி யடைய விரும்பினால், ஆசையின்றியும், பலனை எதிர் பாராமலும் வேலை செய்.

# வேளாண்மையில் மின்சார உபயோகம்.

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)

விவசாயப் பெருக்கையும், விவசாயச் சிறப்பையுமே இந்தியாவின் பிரகாசம் பெரும்பாலும் தழுவி நிற்கிறது. இந்தியாவின் 32 கோடி ஜனத்தொகையில் சுமார் 28 கோடிப்பேர் விவசாயிகளா யிருக்கின்றனர். இப்பொழுது பயிராகும் நிலம் சுமார் 22½ கோடி ஏக்கர். இன்னும் பயிர் செய்யக் கூடியது 15 கோடி ஏக்கர் நிலம். தற்போது கிராமங்களில் வேலைகள் செய்யத் தகுந்த ஆட்கள் சொற்பக் கூலிக்குக் கிடையாததால் அநேக நிலங்கள் தரிசுகளா யிருக்க ஏற்படுகிறது. ஆதலால் மனிதராலாகும் வேலையை மாற்றி இயந்திரங்களால் செய்து முடிக்க வேண்டியதா யிருக்கிறது. மேனாடுகளில் நீராவி, எண்ணெய் முதலியவைகளால் இயங்கும் சாதாரண இயந்திரங்களைக் கொண்டு விவசாய வேலைகளை நடத்தி வருகின்றனர்.

விவசாயக் கைத் தொழில் மற்றக் கைத் தொழில்களைப்போலல்ல. இத் தொழிலின் விருத்திக்குக் காலங்களை எதிர் பார்க்க வேண்டி யிருக்கிறது. ஆகவே ஒரு பெரிய ஜமீன்தார் தனக்குள்ள ஏராளமான நிலங்களை வருஷத்தில் சில மாதங்களுக்கு மாத்திரம் உபயோகப்படுத்தி மற்றக் காலங்களில் உபயோகப்படுத்த முடியாமல் போகிறது. ஆகவே செலவுக்குத் தனக்குக் கிடைக்கும் தானியம் முதலிய உணவுப் பொருட்களை அதிகமாக விற்று இலாபம் பெற முடியாமல் பெரும்பாலும் தன் உபயோகத்திற்குச் சேர்த்து வைக்க வேண்டி யிருக்கிறது. அப்படி யல்லாமல் வருஷ முழுதும் பலவித விவசாயங்களைச் செய்து கொள்ள முடியுமானால் செலவுக்குக் கொஞ்சம் போக மீதியான அதிக பாகத்தை விற்று இலாப மடையலா மல்லவா? மேலும் தன் தொழிலாளர்களுக்கும் மற்ற ஆடு மாடுகளுக்கும் விவசாய மில்லாக் காலங்களில் வீண் செலவுகள் செய்து கொண்

டிருக்கவு மேற்படுகிறது. ஆதலால் வருஷ முழுவதும் எளிதில் விவசாய விருத்தி ஏற்பட்டால் எவ்வளவோ அனுகூலங்க ளுண்டு என்பது பிரத்தியட்சம். இதற்காக மேனாடுகளைப் போல இயந்திரங் களை உபயோகப்படுத்த வேண்டும். இவ் வியந்திரங்களுக்கு மின்சார சக்தியை உபயோகித்தால் காரியங்கள் வெகு சீக்கிரத்தில் அதிகச் செலவின்றி நடை பெறுகின்றன. மின்சாரம், விவசாய இயந்திரங் களுக்காவ தன்றியும், விளக்குகளுக்கும், உஷ்ணப் படுத்துவதற்கும், சமைப்பதற்கும் இன்னும் ஏராளமான வகைகளில் உபயோகப் படுகி றது. விவசாயக் கைத் தொழில்களில் மின்சார இயந்திர உபயோ கத்தை விட எண்ணெய், நீராவி இயந்திர உபயோகம் $2\frac{1}{4}$ பங்கு அதிகமாயும், குதிரை முதலியவைகள் உபயோகம் 6 பங்கு அதிகமா யும், மனிதர்களின் உபயோகம் 17 பங்கு அதிகமாயும் செலவாகிற தெனக் காணப்படுகிறது. ஆதலால் வேளாண்மையில் மின்சார உப யோகத்தால் குறைந்த செலவில் மிகுந்த பிரயாசையின்றி, சின்னாட் களில் தகுந்த இலாபம் கிடைக்கு மென்பதை நிரூபித் திருக்கின்றனர்.

### மின்சாரம் பெறுவதெப்படி?

மின்சார சக்தி வெகு சுலபமாக அருகிலிருந்து கிடைக்கா விட் டால் சொந்தமாக "டைனமோ" * வென்ற மின்சாரம் உண்டாக்கும் இயந்திரத்தைத் தங்கள் நிலங்களுக் கருகில் அமைத்துக் கொள்ள வேண்டும். இந்த டைனமோவைச் சுழலச் செய்வதற்கு நிலக்கரி, எண்ணெய், நீர்வீழ்ச்சி, காற்று முதலியவைகளி லொன்று முக்கியமாய் வேண்டியதா யிருக்கிறது. எண்ணெய் (பெட்ரோல்)க்கு அதிகச் செலவு ஏற்படுவதால் அதை உபயோகப் படுத்துவதில் நஷ்டம் ஏற் படும். ஒரு உயரமான விடத்தில் (இரண்டு இலேசான, நீண்ட, உறுதியான தகடுகளைக் குறுக்காக அமைக்கத் தானாகக் காற்றினால் சுழலும்) பெரிய காற்றாடியைக் கொண்டு டைனமோவைச் சுழலச் செய்யலாம். ஆனால் நாம் எப்பொழுதும் காற்றை எதிர் பார்த்த வண்ணமா யிருக்க நேரிடும். மேலும் காற்று ஒரே விதமான விசை யுடன் வீசிக்கொண் டிராது. நீர் வீழ்ச்சி மிகவும் உபயோகமானது. மைசூர் இராஜ்யத்தில் காவேரி நதியின் நீர் வீழ்ச்சியால், சுழலும்

* K. G. கிருஷ்ணன், "மின்சாரம்"—'பாரதி,' பிப்ரவரி 1930 விவரம்.



சக்கரங்களைக் கொண்டு அநேக டைனமோக்களை நடத்தி வேண்டிய அளவு மின்சாரம் கிரகித்து வருகின்றனர். ஆனால் நமது வேலைக்கு (வேளாண்மைக்கு) டைனமோவை நடத்த எக்காலத்திலும் நீர் வீழ்ச்சி தேவையா யிருக்கிறது. இது முடியாத காரியம். கோடை காலத் தில் ஆற்று நீர் வற்றிப் போகும். ஆகவே நீர் வீழ்ச்சியாலும் நம் வேலைக்கு அதிக உபயோக மில்லை. நிலக்கரி, மரக் கட்டைகளைக் கொண்டு நீராவி இயந்திரத்தால் டைனமோவைச் சுற்ற மேலே குறித்த கஷ்டங்க ளேற்படாது. ஆதலால் நிலக்கரி, மரக் கட்டை களை உபயோகித்து எக் காலத்திலும் வேண்டிய அளவு டைனமோவி லிருந்து கிடைக்கும் மின்சாரத்தால் அநேக இயந்திரங்களை நடத்தி வேளாண்மைக் குரிய பல வேலைகளைச் செய்து கொள்ளலாம்.

### மின்சார உழவு


மற்றெல்லா வேலைகளை விட ஓர் நிலத்தை உழுது பண்படுத்து வது மிகக் கஷ்டமான வேலையாயினும் அது நலந்தரத் தக்கதான வேலையாம். மேனாடுகளில் மிருகங்களுக்குப் பதிலாகப் பெட்ரோல் இயந்திரங்களைக் கொண்டு உழவு நடந்து கொண்டு வருகிறது இத னால் பல கஷ்டங்களுண்டு. ஏனெனில் இவ் வியந்திரங்கள் வெகு கனமா யிருப்பதால் உழுது கொண்டு போகும் போதே உழுத பாகங் களை அவைகளில் சக்கரங்கள் அழுத்தி மறுபடியும் கடினமாக்கி விடு கின்றன. மேலும் எண்ணெயில் அதிகச் செலவும், திடீரென்று தீப்பற்றும் விபத்துக்களும் அதிக நஷ்டத்தைத் தருகிறது.

சில தேசங்களில், உழ வேண்டிய நிலத்தின் இரு புறங்களில் இரண்டு இயந்திர வண்டிகளை நிறுத்தி நீண்ட, கூர்மையும், உறுதியும், கனமு முடையதான ஓர் கலப்பையை இரு இயந்திரங்களுக் கிடையில் வடத்தால் பிணித்து விட்டு ஒருபுற இயந்திரத்தால் கலப்பையை நிலத்தில் நன்றாய்ப் பதிந்து வரும்படியாய் ஒரு புறத்தில் இழுத்துப் பின்பு மறுபுற இயந்திரத்தால் கலப்பையை மறு புறம் இழுக்கப்படு கிறது. இப்படிக் கலப்பை அங்கு மிங்கு மோடி நிலத்தை ஆழமாக வெட்டும் போதே இரு இயந்திர வண்டிகளும் மெதுவாக நகர்ந்து

செல்லுகின்றன. இப்படியாக நிலங்கள் பல முறை உழுது பண் படுத்தப் படுகின்றன.

இதில் இயந்திரங்களை "பெட்ரோல்" முதலிய எண்ணெய்களால் நடத்துவதைப் பார்க்கிலும் மின்சாரத்தால் நடத்துவது வெகு சுலபம். முதலாவது அதிகச் செலவில்லை. தண்ணீர் முதலியவைகள் தேவையின்றி அதிகச் சிரமமில்லாமல் உழுது விடலாம். இத்தாலி தேசத்தில் (1914) குதிரை உழவில் ஒரு ஏக்கர் நிலத்திற்கு 24 ஷிலிங்கும் நீராவி இயந்திர உழவில் 18 ஷிலிங்கும் மின்சார இயந்திர உழவில் $12\frac{1}{2}$ ஷிலிங்கும் (மற்றெல்லாச் செலவும் உள்பட) செலவாகிறது. ஆனால் மகா யுத்தத்திற்குப் பிறகு (1920) சகல செலவும் உள்பட மின்சார இயந்திர உழவுக்கு $10\frac{1}{2}$ ஷிலிங்கும் பெட்ரோல் இயந்திர உழவுக்கு 26 ஷிலிங்கும் செலவாகிற தென்றால் மின்சார இயந்திர உழவின் அநுகூலத்தை அதிகமாக விரித்துரைக்க வேண்டியதில்லை.

சில சமயம் இரண்டு மின்சார இயந்திரங்களைக் கொண்டு கலப்பையை அங்கு மிங்கும் இழுப்பதற்குப் பதிலாக ஒரே இயந்திரத்தை உபயோகப்படுத்தலாம். இங்கே இயந்திர வண்டியிலிருந்து வடம் புரப்பட்டு மறு பக்கத்தி லிருக்கும் சாதாரண ஓர் வண்டியின் மேலுள்ள ஓர் சக்கரத்தில் சென்று மறுபடியும் மின்சார இயந்திர வண்டியை வந்தடைகிறது. ஆகவே ஒரே இயந்திரம் வடத்தின் ஒரு பக்கத்தை இழுத்து மறு பக்கத்தைச் சோர விட்டு மறுபடியும் சோர விட்ட பக்கத்தை இழுத்து இழுத்த பக்கத்தைச் சோர விட்டு இப்படியாகக் கலப்பையை அங்கு மிங்கும் ஓடச் செய்கிறது.






1. கலப்பையை இழுக்கும் மின்சார இயந்திர வண்டிகள்.

2. கலப்பை.

3. சாதாரண வண்டி.

இரண்டு இயந்திரங்களுடைய கலப்பைக்கு வடம் அதிகம் தேவையில்லை. எவ்வித காடு முரடான நிலத்திலும் உபயோகப்படுத்தலாம். சுமார் 650 கெஜ தூரம் கலப்பையை இழுத்து உழுகலாம், ஆனால் இரண்டு இயந்திரங்களுக்கு அதிகச் செலவாகிறது. ஒரே இயந்திரத்தை யுடைய கலப்பையில் செலவு கொஞ்சமானாலும் வடம் அதிகம் வேண்டும். மேலும் மேட்டுப் பாகங்களில் உபயோகப்படுத்த முடியாது.

மின்சார இயந்திரக் கலப்பையை ஓய்வில்லாமல் உபயோகப் படுத்த வேண்டும். தனக்கு வேலை முடிந்துவிட்டாலும் மற்ற சில்லரைக் குடியானவர்களுக்கு வாடகைக்கு வேலை செய்து வர விட வேண்டும். அப்படி யில்லா விட்டால் இயந்திரத்தா லடையும் இலாபம் குறைந்து விடும். மின்சார இயந்திரத்தை மற்ற வேலைகளுக்கும் கதிர்களறுக்கவும், அடிக்கவும் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

| உழவின் ஆழம் | ஒரு மணிக்கு உழவாகும் நிலம் | ஒரு ஏக்கருக்கு மணிக்குச் செலவாகும். மின்சாரம். |
|---|---|---|
| 6 அங்குலல் | $2\frac{1}{2}$—3 ஏக்கர் | 14 கிலோவாட் " |
| 10 ,, | $1\frac{3}{4}$ ,, | 18 ,, |
| 13 ,, | $1\frac{1}{4}$ ,, | 24 ,, |

ஒரு மணிக்கு ஒரு "கிலோவாட்" (Kilowatt) மின்சாரத்திற்கு 1 பென்ஸி லிருந்து 3 பென்ஸ் வரை செலவாகும். ஒரு மணிக்கு 3 மைல் அங்கு மிங்கும் இழுக்கப்படும் 3 அடி அகலக் கலப்பையால் ஒரு நாளைக்குப் பத்து மணி நேரத்தில் குறைந்தது 8 ஏக்கர் நிலத்தை இலேசாய் உழுது பண்படுத்தி விடலாம்.

## மின்சாரத்தால் தாவர விருத்தி

பயிர்ப் பூண்டுகள் முளைத்திருக்கும் நிலத்திற்கு மேலே உலாவும் வாயுவில் மின்சார அலைகளைச் செலுத்தினால் விளைவு அதிகப்படுத்துவதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர். பயிர்களுக்கு மேலே சுமார் 2 அடி உயரத்தில் மின்சாரம் அங்கு மிங்கும் ஓடுவதற்கு நெடு நீளமாகக் கம்பிகளைச் சம தூரங்களில் அமைத்துப் பார்வைக்கு ஓர் பந்தலைப்போ லிருக்க வேண்டும். கம்பிகளைத் தாங்கி நிற்க நிலத்தின் சுற்றுப் புறங்களில் பருத்த இருப்புக் கம்பிகளை நிறுத்த வேண்டும். குறுக்காகக் கம்பிகள் செல்லக்கூடா. இக் கம்பிகள் வேண்டும் போது உயர்த்தவும் தாழ்த்தவும் பிரிக்கவும் கூடியதா யமைந்திருத்தல் வேண்டும். இப்பொழுது பலமான (அதிசமான) மின்சாரத்தைக் காலை மாலை இரு வேளையும் சில மணி நேரம்வரை இக் கம்பிகளில் செலுத்தி வர வேண்டும். இவ்விதம் அமைக்கப்படும் கம்பிகளுக்கு அதிகச் செலவில்லை. இவைகளை வருஷா வருஷம் உபயோகித்து விளைவை அதிகப்படுத்தலாம். மின்சார ஒழுக்கு காற்றைக் கடைந்து பயிர்களில் தாக்கிப் பூமியை நாடி ஓடுவதால் காற்றில் கலந்திருக்கும் உப்பு வாயுவைப் பயிர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதல்லாமல் மண், பயிர்களுக்காகப் பண் படுத்தப்பட்டுக் காற்று தண்ணீர் முதலியவை இலகுவில் கிரகிக்க நல்ல வசதிக ளேற்படுகின்றன. வெண்கலக் கம்பிகளை $4\frac{1}{2}$ கெஜம் சம தூரமாகப் பூமிக்கு மேல் 7 அடி தூரத்தில் அமைத்து 3 "ஆம்பியர்" அளவான மின்சாரத்தை மொத்தம் 848 மணி நேரங்களுக்கு உபயோகப்படுத்தியதில் தானியத்தில் 100-க்கு 88 வீதம் அதிகமாகத் தானியம் கிடைக்கப்பெற் றிருக்கின்றது. மேலும் வருஷா வருஷம் விளைவு அதிகமாவதாகவும் தெரிகிறது. இவ்விதமாய் வெள்ளரிக்காய், உருளைக் கிழங்கு முதலிய தோட்டங்களிலும் மின்சாரத்தை உபயோகித்துப் பலனடைகின்றனர்.

விதைப்பதற்கு முன் விதைகளை உப்புத் தண்ணீரில் ஊற வைத்து மின்சாரத்தை அவைகளுக்குள் செலுத்திப் பின்பு காய வைத்து விதைப்பதினால் விளைவு அதிகப்படுவதாகக் கூறுகின்றனர். ஆனால் இம் முறையை அதிகமாக இன்னும் உபயோகப்படுத்த வில்லை.



மின்சார வெளிச்சத்தைச் சூரிய வெளிச்சத்திற்குப் பதிலாகப் பயிர்களுக்கு உதவி விளைவை இரண்டு பங்கு அதிகப்படுத்தி யிருக்கின்றனர். சில (தோட்டப்) பயிர்களை மின்சார வெளிச்சத்தால் அதன் சரியான காலத்திற்கு முன்னதாகவே புஷ்பிக்கச் செய்து அதிக விலைக்கு விற்று இலாபம் பெறுகின்றனர். ஏனெனில் காலந் தவறி விளையும் விளைவு அருமையும் அபூர்வமாகையினால் அதிக விலை கொடுக்க வேண்டு மல்லவா?

இரசாயன சாஸ்திரப்படி நிலங்களுக்கு "நைட்ரேட்" என்ற ஓர் உப்பு நல்ல உரமாகிறது. இது தென் அமெரிக்காவி லிருந்து அதிகமாய் வர வேண்டும். இதற்குப் பதிலாக "அம்மோனியா சல்பேட்" என்ற உப்பை உபயோகப்படுத்தலாம். இதற்காக உப்பு வாயுவும் வேண்டும். இந்த வாயுவை ஆகாயத்தி லிருந்து மின்சாரத்தால் வெகு இலகுவில் பிரித்துக் கிரகிக்கக் கூடும். ஆகவே நிலங்களுக்கு உப்பு வாயுவினலான உரத்தை உபயோகப்படுத்தலாம்.

முன்பு கூறியபடி உழவுக்கு வேண்டிய மின்சார இயந்திர வண்டியைக் கொண்டு கதிர்களை வெகு எளிதில் அறுத்துச் சேர்த்து அடித்துத் தானியங்களைக் குவித்து விடலாம். நீராவி இயந்திரங்களை விட மூன்றி லொரு பங்கு அதிகமாக மின்சார இயந்திரம் வேலை செய்யும். கதிர்களை அடித்து வைக்கோலையும் தானியங்களையும் பிரித்துக் குவிக்க மின்சார இயந்திரங்களை வெகு சுலபமாக உபயோகப் படுத்தலாம். மழை யில்லாக் காலங்களிலும் ஊற்றுகளி லிருந்து மின்சாரத் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தால் வேண்டிய தண்ணீரை 25 அடி ஆழத்திலிருந்து 100 அடி உயரம் வரை வேண்டும் போது தண்ணீர் இறைத்து வேளாண்மை செய்யலாம். மனிதரையும் மற்ற இயந்திரங்களையும் உபயோகப் படுத்துவதில் கால தாமதமும் வீண் செலவும் ஏற்படுகிறது.

## மின்சாரத்தால் பால் கறத்தல்

ஓர் சிறிய மின்சார "மோட்டாரை"க் கொண்டு பசுக்கள் வெகு சுலபமாகப் பால் கறக்கப்படுகின்றன. பசுக்களின் முலைக் காம்பு சரியாகப் பிடித்துக் கொள்ளும் ஓர் வித உலோகக் கூட்டை மின்சாரப்

பெட்டியில் பொருத்தி விட்டால் அக் கூடு பாலைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கிரகிக்கிறது. இந்த இயந்திரங்களால் பால் கறந்த வுடன் அந்தப் பால் சுத்தமாக அதற்கான பாத்திரத்தில் சென்று விழவும் அசுத்தம் சேரா வண்ணம் செவ்வையாக மூடவும் படுகிறது. கொசு முதலிய பூச்சிகள் விழுந்து கெடுக்க இடமில்லை. ஒரு குதிரைப் பவரை * (சக்தியை) யுடைய மின்சார இயந்திரத்தால் 10 பசுக்களை வெகு விரைவில் பால் கறந்து விடலாம். $8\frac{1}{2}$ குதிரைப் பவுரை யுடைய இரு இயந்திரத்தால் 70 பசுக்களை ஒரு நாளைக்கு இரண்டு தடவை பால் கறந்து வருகின்றனர். இப்படிக் கறப்பதற்கு மேல் பார்க்க ஒரே மனிதன் போதுமானது. கணக்குப் பார்க்கும் போது பால் கறக்கும் இயந்திரச் செலவு ஒரு பசுவுக்கு $\frac{1}{16}$ பென்ஸ்தானாகிறது. சுமார் ஒரு பைசா வென்று கூறலாம். வெண்ணெய் கடைந் தெடுக்கையில் இழுத்துக் கட்டப்படுவதைப் பார்க்கிலும் மின்சார இயந்திரத்தால் வெகு சீக்கிரத்தில் பாலைக் கடைந்து விடலாம்.

## மின்சாரக் குஞ்சு பரிபாலனம்

முட்டைகள் குஞ்சு பொரிப்பதற்கு உஷ்ணம் அத்யாவசியமா யிருக்கிறது. மின்சார சக்திக்கு உஷ்ணங் கொடுத்துத் தகிக்குங் குணமுடையதால், மின்சாரத்தைக் கொண்டு முட்டைகளி னின்று குஞ்சு பொரிக்கச் செய்யலாம். மரக் கட்டைகளால் இரண்டு அறைகள் ஒன்றின்மே லொன்று யமைத்து கீழறையில் முட்டைகளைப் பரப்பி மேலறையில் மின்சார இயந்திரம், கப்பி முதலியவைக ளமைத்து உஷ்ண முண்டாக்கி முட்டைகளைத் தகிக்கின்றனர். சுமார் 50 அல்லது 60 'டிகிரி' உஷ்ணம் போது மென்கின்றனர். நியூ யார்க் பட்டணத்தில் ஒரே தடவையில் 20,000 முதல் 25,000 வாத்துக் குஞ்சுகளைப் பொரிக்கச் செய்கின்றனர். இவ் வாத்துக் குஞ்சுகளுக்கு ஆகாரங்களை மின்சார இயந்திரத்தாலேயே ஒன்று சேர்த்துப் பாகு படுத்திக் கொடுக்கின்றனர். தண்ணீர் இறைக்கவும் வெளிச்சங் கொடுக்கவும் உபயோகப் படுத்திக் கொள்ளுகின்றனர்.

* குதிரைப் பவர்—500 பவுண்டை ஒரு விநாடியில் ஒரு அடி தூரம் உயர்த்தும் ஒன்றின் சக்தி—746 "வாட்ஸ்" (மின்சார அளவில்).



பகலை அதிகப்படுத்தினால் பறவைகள் அதிக உணவு உண்டு தேகாப்பியாச மெடுத்து அதிக முட்டைக ளிடுகின்றன. ஆதலால் பகலை அதிகப்படுத்துவதற்கு மின்சார விளக்குகளை ஆங்காங்கு அமைத்து இரவைப் பகல்போலாக்கி மேனாடுகளில் அதிக முட்டைகளைப் பெற்று வருகின்றனர். ஒரு வருஷத்திற்கு ஒரு பறவைக்கு $\frac{3}{4}$ பென்ஸ் மின்சார விளக்குக்காகச் செலவிட்டு 100-க்குக் குறைந்தது 25 முட்டைகளை அதிகமாகப் பெறுகின்றனர். முட்டைகளைப் பரிசோதிப்பதற்கு ஒரு துவாரமுடைய பெட்டிக்குள் மின்சார விளக்கிட்டு அத் துவாரத்தில் முட்டையை வைத்து நோக்கினால் முட்டையின் உட் பாகம் தெளிவாகத் தோன்றும். அத் தோற்றத்தால் நல்ல முட்டைகளைத் தேர்ந் தெடுக்கலாம். சமையல் செய்யவும், குளிர் காலத்தில் வீட்டை உஷ்ணப் படுத்தவும் துணிகளைக் கசக்கி வெளுக்கவும் இது போன்ற பல வேலைகளை மின்சார உபயோகத்தால் எளிதில் சீக்கிரத்தில் அதிகச் செலவின்றி செய்து கொள்ளலாம்.

## முடிவுரை

மின்சாரத்தை உபயோகப் படுத்தி யறியாத நம் நாட்டு விவசாயிகளைத் திடீரென்று மின்சாரத்தைத் தங்கள் வேலைகளுக்கு உபயோகப் படுத்தச் சொல்லுவது கூடாத காரியம். அவர்களுக்கு மின்சாரத்தை உபயோகப் படுத்தும் வழி தெரியாமலும், மின்சார இயந்திரம் முதலியவைகளை வாங்க சக்தி யற்று மிருப்பது யாவரும் தெரிந்த விஷயம். ஆகவே மேனாடுகளைப் போல கவர்ன்மெண்டாரின் உதவியால் ஓர் மின்சார வேளாண்மை சங்கம் (Electrie Agricultural Board) ஏற்பட வேண்டும். இச் சங்கத்தின் பொறுப்பால் மின்சாரம் உண்டு பண்ணி வேளாளர்களுக்கு வெகு குறைந்த விலைக்கு விற்று வருவதோடும் அப்பொழுதுக் கப்பொழுது இயந்திரங்களை உதவி அவைகளின் உபயோகங்களைப் பற்றி யெடுத்துக் காட்டவும் வேண்டும். ஆனால் நம் எளிய விவசாயிகள் இவ் வழியில் கவர்ன்மெண்டாரின் உதவியைப் பெற முடியுமா வென்னும் சந்தேகம் மேற்படுகிறது. சுதந்திரமுடைய நாடுகளில் இவை போன்ற அநேக காரியங்கள் பல கவர்ன்மெண்டாரால் நடை பெற்று வருகின்றன. நம் நாட்டின் ஏக்கர் ஒன்றின் சராசரி விளைவு, மேற்சொன்ன சுதந்திரமும் இயந்திரமு முடைய

# இந்தியர்களின் வறுமை.

திரு. A. நடேச பிள்ளை அவர்கள்.

இந்தியா வாசிகள் நன்னிலைமைக்கு வரமுடியா திருப்பதற்கு முக்கிய காரணங்கள் இவர்கள் கிருஷிக் கைத் தொழில், வர்த்தகம் இவைகளை நவீன நாகரீகப்படி செய்யாதிருத்தல். அத் தொழில்களினால் கிடைக்கக் கூடிய இலாபங்களில் நாலிலொரு பாகங்கூட இவர்களுக்குக் கிடைக்க வில்லை. அதற்குரிய காரணங்கள் அடியிற் கண்டபடி 8 வகைகளாகப் பிரிக்கப்படலாம். அவையாவன: (1) பற்பல ஜாதி வேற்றுமைகள், (2) தேக திடமில்லாமை, (3)

---

நாடாகிய இத்தாலியா தேசத்தின் விளைவில் பாதியும், பிராஞ்சு தேசத்தின் விளைவில் ஐந்தி லொரு பங்கும், எகிப்து தேசத்தின் விளைவில் மூன்றி லொரு பங்கும், ஜப்பான் தேசத்தின் விளைவில் கால் பங்குமாகத் தெரிகிறது. ஆகவே சுதந்திரமற்ற நாட்டி லிருக்கும் எளிய குடியானவர்களுக்கு பெரிய ஜமீன்தார்களே உதவி செய்ய வேண்டும். இவர்களுக்கு ஏராளமான நிலங்க ளிருப்பதால் மின்சார வேளாண்மையா லதிக அனுகூலங்க ளிருக்கின்றன. தங்கள் காரியங்களை முடித்துக் கொள்ளுவதோடு எளிய வேளாளர்களுக்கும் குறைந்த வாடகைக்கு இயந்திரங்களை உதவி இந்தியாவின் விளைவை முன்னிலும் பதின் மடங்கதிக மாக்குவார்க ளென்பது திண்ணம். இந்தியாவில் ஐந்து குடும்பங்களின் விளைவு சுமார் எட்டு குடும்பங்களுக்கு மாத்திரம் உணவாகிறது. ஆனால் வட அமெரிக்காவில் ஐந்து குடும்பங்களின் விளைவு 50 குடும்பங்களுக்குப் போதிய உணவாகிற தென்றால் நமது தேசத்தின் விவசாய க்ஷீண திசையைச் சற்று யோசித்துப் பாருங்கள்.



தரித்திரமும் வியாதிகளும், (4) படிப்பில்லாமை—அனுபோகமில்லாமை, (5) மதக் கோட்பாடுகளினா லுண்டாகிய கெடுதிகள், (6) ஜாதி மதக் கட்டுப்பாடுகள், (7) அன்னிய ராஜாங்கத்தாரால் ஆளப்படுதல், (8) கைத் தொழில்களில் தேர்ச்சி யில்லாமை.

## I பற்பல ஜாதி வேற்றுமை

இவ் விந்தியாவின் பூர்வ குடிகள் இன்னவர்க ளென்று தெரியவில்லை. மலேயா, ஆஸ்திரேலியா தீவுகளிலுள்ள காட்டு மனிதர்களைப்போ லிருந்திருக்கலாமென யூகிக்க வேண்டியதா யிருக்கிறது. இந்த ஐந்து கண்டங்களிலும் ஆதியில் மிகுந்த நாகரீக முடையவர்களா யிருந்தவர்கள் தமிழர்கள் என்பது முது நூல்களினால் தெரிகிறது. சென்னை கிறிஸ்தியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதரா யிருந்த திரு. சூரியநாராயண சாஸ்திரிகள் "தமிழ் மொழியின் வரலாறு" என்றோர் புத்தகம் பிரசுரித்திருக்கிறார். அதில் இந்தியா தேசம் முழுவதும் தமிழர்களால் ஆளப்பட்டு வந்ததாகவும், அவர்கள் கிருஷித் தொழில் செய்பவர்கள், தொழிலாளிகள் என்ற இரு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட் டிருந்ததாகவும், கிருஷித் தொழில் செய்பவர்கள் அரசர்களாகவும், வர்த்தகஞ் செய்பவர்களாகவு மிருந்து வந்ததாகவும், மைனர் பர்மா தேசங்களி னின்றும் துரானியர் என்ற வகுப்பினர் இந்தியாவின் வட நாடுகளில் பிரவேசித்துத் தமிழர்களுடன் போர் புரிந்து ஜெயமடைந்து தமிழர்களைத் தென் தேசங்களுக்கு ஓடிவிடும்படி செய்து வட தேசங்களை அவர்கள் அரசாட்சி செய்து வந்ததாகவும், இதற்குச் சில காலங்களுக்குப் பிறகு ஆசியா, துருக்கி, பெர்ஷியா முதலிய வட மேற்குத் தேசங்களி லிருந்து இவ் விந்திய ஆரியர் என்ற வகுப்பினர் வட தேசங்களில் பிரவேசித்து இந்தத் துரானியர்களுடன் பலத்த யுத்தங்கள் செய்து வென்று அத் தேசங்களைக் கட்டிக் கொண்டு, அரசு புரிந்து வந்ததாகவும் சொல்லப்பட் டிருக்கிறது. ஆரியர்களின் ருக்கு வேதத்திலும் இது விபரங்கள் சொல்லப்பட் டிருக்கிறது.



198535

வட தேசங்களில் ஆரியர், துரானியர், தமிழர் இம் மூவகுப்பினர்களும் சேர்ந்தபின் பற்பல ஜாதி வகுப்புகளும், பற்பல பாஷைகளும் ஏற்பட்டன. ஆரியர்களின் ஜனத் தொகை மிகுந்து அவர்கள் தென் தேசங்களிற் குடியேறிய பின்தான் இங்கே பற்பல ஜாதி வகுப்புகளும் பாஷைகளு முண்டாயின.

இவ் விந்திய வட நாடுகளிலுள்ள சிற்சில கிராமங்களில் தமிழ் பேசும் ஜனங்கள் இப்போதும் இருந்து வருவதால் இவ் விந்தியா முழுவதும் தமிழர்களால் ஆளப்பட்டிருக்க வேண்டு மென்பது ஒருவாறு புலனுகின்றது. தஞ்சை நகரிலிருந்து காலஞ் சென்ற திரு. ஆப்ரகாம பண்டிதர், ஒரு பெரிய புத்தகம் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். இந்த ஐந்து கண்டங்களிலும் பற்பல விடங்களில தமிழில் கல் வெட்டுகள் இருப்பதற்குப் பிரதிகள் எடுத்து அச்சிட்டு இவ் வுலகத்தில் தமிழ்ப் பாஷை ஒன்றே ஆதியில் இருந்து வந்ததாகச் சொல்லி யிருக்கிறார்கள்.

தமிழிலுள்ள நூல்களின்படி மகரிஷிகள், இவ் வுலகம் முழுவதும் சஞ்சாரம் செய்ததாகவும், ரோம் நகரில் ரோமரிஷி அடைந்ததால் ரோமன் ஜாதியார் ஏற்பட்டதாகவும், சைன தலை நகரில் ஓர் மகா ரிஷி அடைந்திருப்பதால் பவுத்த மத மேற்பட்ட தென்றும் சொல்லுகிறார்கள்.

மிகவும் உன்னத ஸ்திதியி லிருந்த தமிழர்களின் தற்கால நிலைமை மிகவும் பரிதபிக்கக் கூடிய நிலைமையி லிருக்கிறது.

மேலே சொன்னபடி இவ் விந்தியாவில் பற்பல ஜாதிகளும் பற்பல மதங்களு மேற்பட்டு விட்டதால் இவர்களுக்குள் ஒற்றுமை யேற்படமாட்டா தென்றும் அதனுல் ஆங்கிலேயரின் அரசாட்சியே இத் தேசத்துக்குப் பொருத்தமான தென்பதும் ஆங்கிலேயர்கள் பெரும்பாலாருடைய அபிப்பிராயம். அவர்களின் அபிப்பிராயம் பிசகென்பதையும் இவர்களுக்குள் மிகுந்த ஒற்றுமை யேற்படக் கூடிய காலம் சமீபித்து விட்ட தென்பதையும் மற்றொரு முறையில் வரைகின்றேன்.



## II திரேக திடமில்லாமை

சீதளம் உஷ்ணம் இவ் விரண்டும் சமமாயுள்ள இடங்களில் வசிப்பவர்கள் மிகுந்த திரேக பலமுடையவர்களாயும், புத்தி கூர்மையுடையவர்களாயு மிருப்பார்கள். இவ் விந்தியாவில் இண்டஸ், யமுனை, கங்கை முதலிய பெரிய நதி தீரங்களில் வசிப்பவர்களுக்கு திட சரீரமும் மிகுந்த புத்திக் கூர்மையு மிருந்து வருகிறது. இதனுல் கிருஷி, கைத் தொழில்கள் தகுந்த விதமாகச் செய்வதற்கு இவ் விந்தியாவாசிகளில் பெரும்பாலார் தகுதியுடையவர்கள் என்பதற்குச் சந்தேக மில்லை. இவர்களுக்குத் தகுந்த கல்வி, முக்கியமான தொழிற் கல்வி கற்பிக்கப்படாததால் இவர்கள் தரித்திர ஸ்திதியிலிருந்து வருகிறார்கள்.

## III தரித்திரமும் வியாதிகளும்

இந்தியா வாசிகள் திடசரீரர்களா யிருப்பதற்கு வருடம் 1-க்கு 8 கோடியே 10 இலக்ஷம் டன் ஆகாரங்கள் வேண்டும். இவர்கள் தற்காலம் சாப்பிட்டு வருவது 4 கோடியே 80 இலக்ஷம் டன்தான். இதற்கு வறுமைதான் முக்கிய காரணமாகச் சொல்ல வேண்டும். இவர்கள் கிரமமாகச் சாப்பிடுவதற்கு மூன்றி லொரு பாகம் குறைவாகவே சாப்பிடுகிறார்கள். இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு விஷயம் எடுத்துச் சொல்லுகிறேன். சென்னை கைதி ஒருவருக்குச் சராசரி வருஷம் 1-க்கு 741 பவுண்டாகிறது. அமெரிக்கா ஐக்கிய அரசாங்கக் கைதி ஒருவருக்கு வருஷம் 1-க்கு 2664 பவுண்ட் வேண்டியதா யிருக்கிறது.

இவ் விந்தியாவில் மலை ஜுரத்தா லிறப்பவர்கள் வருஷம் 1-க்கு 13 இலக்ஷம் பேர்கள். பிறக்கும் பிள்ளைகளில் 15 வயதுக்குட்பட்டுச் சாகிறவர்கள் வருஷம் 1-க்கு ஒரு கோடியே இருபது இலக்ஷம் பேர்கள். அதாவது பாதிக்கு மேற்பட்டவர்கள் 15 வயதுக்குள்ளாகவே இறந்து விடுகிறார்கள். இவ் விந்திய தேசத்தின் குழந்தை மரணத்தை மொத்தமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் பிறந்த பிள்ளைகளில் 100-க்கு 19 பேர்கள் ஒரு வருஷத்திற்குள் இறக்கின்றன. மற்ற தேசங்களில் அப்படிக் கில்லை. ஆங்கில

நாட்டில் 100-க்கு 7 பேர்கள், பிரான்ஸ் தேசத்தில் 100-க்கு 8, ஜெர்மனியில் 100-க்கு 10 பேர்கள். இந்தியாவில் வியாதிகளும் மரணங்களும் வர வர விருத்தியாய்க் கொண்டு வருவதற்குக் காரணம் தரித்திரந்தான்.

## IV படிப்பில்லாமையும் அனுபோகமில்லாமையும்

சென்ற 1921 ௵த்தில் ஏற்பட்ட சென்ஸஸ் கணக்கின்படி இவ்விந்தியாவில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 100-க்கு 92 பேர்கள். மற்ற தேசங்களில் இவ்வாறில்லை; பெல்ஜியத்தில் 100-க்கு 8 பேர்கள், பிரான்ஸ் தேசத்தில் 100-க்கு 4 பேர்கள், ஹாலெண்டு தேசத்தில் 100-க்கு 1, ஜெர்மனி தேசத்தில் 100-க்கு வீசம் $\frac{1}{16}$ கூட இல்லை. ஐரோப்பாவின் பெரும்பாலான தேசங்கள் கட்டாயப் படிப்புகளை யனுசரித்து வருகின்றன. இவ்விந்தியாவில் அம்முறை யில்லை. நம் இந்தியாவில் 5 வயது முதல் 10 வயதுக்குட்பட்டவர்களுக்குக் கட்டாய பிரதமக் கல்வி கற்பிக்கப் பட்டால் 4 கோடியே 70 லக்ஷம் பிள்ளைகள் படிக்க வேண்டும். இப்போது படித்து வரும் பிள்ளைகள் 60 இலக்ஷந்தான். பாக்கி 4 கோடியே 10 இலக்ஷம் பிள்ளைகளுக்குப் படிப்பில்லை. செகண்டரி ஸ்கூல்களில் 10 முதல் 15 வயது வரையில் வாசிக்கக் கூடிய பிள்ளைகள் 3 கோடியே 70 இலக்ஷம் பிள்ளைகளிருக்கிறார்கள்.

இவர்களில் வாசிப்பவர்கள் சற்றேறக் குறைய 10 இலக்ஷம் பேர்கள்தான். 5 முதல் 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் சங்கை மொத்தம் 8 கோடியே 40 இலக்ஷம் பேர்களுக்கு இந்தப் பள்ளிக்கூடங்களில் வாசிப்பவர்களின் மொத்தம் 70 இலக்ஷம் சொச்சம் பேர்கள்தான்; பாக்கி 7 கோடியே 70 இலக்ஷம் பேர்கள் படிப்பில்லாதவர்கள். பெரிய பள்ளிக்கூடங்களில் வாசிப்பவர்களையும் கணக்கெடுத்து பார்த்தால் 100-க்கு 3½ பேர்கள்தான் இவ்விந்தியாவில் வாசிக்கிறார்கள். யுனைடெட் ஸ்டேட்ஸ் அமெரிக்காவில் 100-க்கு 17 பேர்களும், பெல்ஜியத்தில் 100-க்கு 16 பேர்களும், பிரான்ஸ் தேசத்தில் 100-க்கு 15 பேர்களும் பள்ளிக்கூடங்களில் வாசிப்பவர்கள்.



சென்ற 1926-ம் வருஷத்திலேற்பட்ட கணக்கின்படி இவ்விந்தியாவிலுள்ள பள்ளிக்கூடங்கள் 11,227. அவைகளில் வாசிப்பவர்களின் சங்கை 2,82.384.

தொழிற் கல்விச் சாலைகள் இந்தியாவில் மிகவும் குறைவு. சென்ற 1925–26-ம் வருஷக் கணக்கின்படி இஞ்சினியரிங் சர்வே பள்ளிக்கூடங்கள் 9. இவைகளில் 1404 பிள்ளைகள்தான் வாசிக்கிறார்கள். தொழிற் கல்விச் சாலைகள் 396; இவைகளில் 20,843 பிள்ளைகள் வாசிக்கிறார்கள். இதே வருஷத்தில் ஜெர்மனியில் 10 தொழிற் கல்விச் சாலைகள் ஏற்பட்டு அவைகளில் 21,683 பேர்கள் வாசித்தார்கள். பாரிஸ் டவுனில் மட்டும் 13 பள்ளிக்கூடங்களிருக்கின்றன. இவைகளில் 1385 பேர்கள் வாசித்தார்கள் இதே வருஷத்தில் லண்டன் டவுனில் 370 பள்ளிக்கூடங்களில் 92,000 பேர்கள் வாசித்தார்கள்.

மேலே சொன்னபடி இவ்விந்தியாவில் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் 70 இலக்ஷம் மாணாக்கர்களில் 20 இலக்ஷம் மாணாக்கர்களுக்காவது தொழிற் கல்வி கற்பிக்கப்பட்டால் ஒருவாறு இந்தியா வாசிகள் நன்னிலைமைக்கு வரமுடியும். ஆங்கிலத்தில் தொழிற் கல்வி கற்பிப்பது அசாத்தியமான விஷயம் என்பது யாவருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம். தொழிற் கல்வி அவரவர்கள் பேசும் பாஷையில் கற்பிக்கப் பட்டாலன்றி சாஸ்திர விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ள முடியாது. ரஸாயன சாஸ்திரத்தில் மிகத் தேர்ச்சி பெற்ற சர். பி. ஸி. ராய் (Sir. P. C. Roy) அவர்கள் சென்னையில் செய்த உபன்னியாசம் சென்ற ௵ ஜுலை௴ 19௳ யுள்ள 'சென்னை மெயில்' பத்திரிகை 12-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

அதில் வித்தியா பட்டம் (B. A) பெற்றவர்களில் அநேகர் மாதம் 1-க்கு ரூ 25., 30 கூடச் சம்பாதிக்க முடியாமல் மிகுந்த கஷ்டப்படுவதாகவும், இவர்களுக்குத் தகுந்த புத்தி கூர்மையிருக்குமாதலால் பூமியின் சத்துக்களை ஆராய்ச்சி செய்து எந்தெந்த மண்ணுக்கு எந்தெந்த எருப் போட்டு எந்தெந்தப் பயிர்

செய்யலா மென்பதைத் தெரிந்து கொண்டு கிருஷித் தொழிலைச் செய்தால் தற்போதுள்ள மாசூலை விட மூன்று மடங்கு அதிகமாக வுற்பத்தி செய்யலா மென்றுஞ் சொல்லி யிருக்கிறார்கள்.

உயர்தர பரீட்சை கொடுத்தவர்களுக்குத்தான் ஆங்கிலத்திலுள்ள கிருஷி கைத் தொழில் சாஸ்திரக் கல்வி கற்க முடியும். இவ் விந்தியா வாசிகளில் பெரும்பாலோர் மிகுந்த ஏழைகளாகையால் மூவாயிரம் ரூபாய் செலவழித்து அந்தப் பரீட்சைக்கு வாசிக்க முடியாது. ஆங்கிலத்திலுள்ள கிருஷி கைத் தொழில் சாஸ்திரங்களைச் சுதேச பாஷைகளில் மொழிபெயர்த்து முதல் வகுப்பு முதல் 6-வது வகுப்பு வரையிலுள்ள மாணாக்கர்கள் அவரவர்களின் புத்தி நுட்பங்களுக்குத் தக்கபடி வாசிக்கத் தக்கதாகப் பற்பல வகைப் புத்தகங்களாக அச்சிட்டு அவைகளை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயப் படிப்பாக்க வேண்டும். வாரம் ஒன்றுக்கு ஏழெட்டு மணி நேரம் மற்றப் பாடங்களுடன் கற்பிப்பதே போதுமானது. இக் கல்வி கற்பிக்கப்படும் பட்சத்தில் ஸ்கூல் பைனல் பரீட்சை கொடுக்க முடியாத பேர்களும், அவரவர்கள் கற்றுத் தெரிந்து கொண்ட விஷயங்களை பரீட்சித்துப் பார்த்து கிருஷி கைத் தொழில்களை நவீன நாகரீகப்படி செய்வார்கள். ஒன்றுக்கு நான்கு மடங்கு மகசூல்கள் உற்பத்தி செய்வார்கள். அன்னிய நாடுகளி னின்றும் நம் தேசத்தில் இறக்குமதி செய்யப்படும் எல்லாவற்றையும் நம்மவர்களே நாளடைவில் செய்து விடுவார்கள். நம் தேசக் கைத் தொழில் சாமான்கள் அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அபரிமிதமான இலாபங்களை அடையலாம். நம் தேசத் திரவியங்களை அன்னிய நாட்டார் அபகரிக்கும்படியாக இடங் கொடுக்க இடமிராது. நம் தேச விளை பொருள்களில் நம் தேசத்தவர்களின் ஆகாராதிகளுக்கும் கைத் தொழில் சாமான்களுக்கும் உபயோகப்பட்டது போக, மிகுதியை தகுந்த விலைக்கு விற்றுவிடலாம். நம்மவர்கள் குபேர சம்பத்துடையவர்களாகி விடுவார்கள். நம்மவர்களுக்கு சுயராஜ்யம் அதிக சுலபமாக வலுவில் கிடைத்து விடும். ஆதலால் தொழிற் கல்வி சுதேச பாஷைகளில் கற்பிக்கும் படிக்கும், பிரதம பாடசாலை கல்வி 3-வது வகுப்பு



வரையிலாவது ஆண், பெண் இருவரும் 12 வயது வரையில் பள்ளிக்கூடங்களில் வாசிக்க வேண்டு மென்றும் சட்ட திட்டங்கள் ஏற்படுத்த, நம்மவர்கள் தகுந்த ஏற்பாடுகளும் கட்டுப்பாடுகளும் செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

சமாச்சாரப் பத்திரிகைகள் மென்மேலும் அபிவிருத்தி செய்பட்டு ஒவ்வொரு கிராமத்துக்கும் பற்பல வகை பத்திரிகைகள் தருவிக்கப்பட வேண்டும். எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு அவைகள் வாசித்துக் காட்டப்பட வேண்டும். கல்வி கற்பதைப் பார்க்கிலும் கேட்டுத் தெரிந்து கொள்வது விசேஷ மென்று திருவள்ளுவநாயனார் சொல்லி யிருக்கிறார்கள்.

சென்ற (1926–27)ல் நம் தேசத்தில் நடைபெற்ற சமாச்சாரப் பத்திரிகைகள் 5111. இவ் விந்தியாவின் ஜனத் தொகையில் மூன்றி லொரு பாகத்துக்குங் குறைவான ஜனத் தொகையுள்ள அமெரிக்க ஐக்ய ராஜ்யத்தில் 20,694 பத்திரிகைகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு பத்திரிகைக்கும் இலக்ஷக் கணக்கான சந்தாதார்க ளிருக்கிறார்கள். இவ் வுலகத்தில் அவர்களைப் போல ஐஸ்வரிய முடையவர்கள் எவருமில்லை. ஆங்கில நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நூலில் மூன்றி லிரண்டு பாகம், அத் தேசத்துப் பஞ்சு; மோட்டார் வண்டிகள், மண்ணெண்ணெய் இவைகளில் பெரும் பாகம் அந் நாட்டி லுற்பத்தி யாகின்றன. இதனால் சமாசாரப் பத்திரிகைகள் குக்கிராமங்களிலும் மிகுந்து பாவி கிராமவாசிகள் இவ் வுலக விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். இந்தப் பத்திரிகைகள் மூலமாகத்தான் நம்மவர்கள் நாகரீகத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

## மதக் கோட்பாடுகளினா லுண்டாகிய கெடுதிகளும் ஜாதி மதக் கோட்பாடுகளும்

இவ் விந்தியாவிலுள்ள மதங்களில் இந்து மதமே பெரிதென்றும், அது மிகுந்த மேன்மை யுடையதென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்களே யன்றி மற்ற மதஸ்தர்களைப் போல ஒற்றுமையாய் வாழும்படியான மார்க்கங்களைத் தேடவில்லை.

மகம்மதிய மதம் நபி என்ற மகாத்மாவாலும், கிறிஸ்து மதம் ஏசு கிறிஸ்து என்ற மகாத்மாவாலும் ஏற்பட்டிருக்கின்றன. அன்னிய மதஸ்தர்கள் எந்த ஜாதியாரா யிருந்தாலும் அவர்களை தங்கள் மதத்தில் சேர்த்துக் கொண்டு தங்களுக்கு சமமாகப் பாவித்து நடத்தி மிகுந்த அன்பா யிருக்கிறார்கள். புத்த மதஸ்தர்களும் அதே விதமாகத்தான் சமத்துவம் சகோதரத்வம் கொண்டாடி எவரையும் தங்கள் மதத்தில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இந்து மதத்தை அனுசரிப்பவர்களுக்குள் இந்த சமத்துவம் சகோதரத்வம் இல்லாததால் இவர்களுக்குள் ஒற்றுமை யேற்படாமல் பலவித கெடுதிகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். இவர்கள் எல்லோரையும் ஒற்றுமைப் படுத்துவதற்காகப் பிரத்தியேகமாக வேலை செய்தா லன்றிச் சாத்திய மில்லை. தீரமும் தீவிரமும் தியாகமும் மிக்க இளைஞர்களினால்தான் இந் நற் காரியம் நிறைவேற்றப் போகின்றது. அதற்குரிய நல் வேளை சமீபித்து விட்ட தென்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய அவஸ்ய மில்லை. காற்றோடு கலந்து விஷயங்கள் மூலை முடுக்குகளையும் பிளந்து காலத்தின் வேகத்தால் நிறம்பி யிருக்கிறதினால் யாவரும் அறிவர்.

கடவுள் ஒருவர் இருக்கிறார். நாம் பாவ கருமங்களைச் செய்தால் நமக்கு கஷ்ட யஷ்டங்களை யுண்டு பண்ணுவார். நாம் நற் கருமங்களையே செய்ய வேண்டும்; நாம் யாவரிடத்திலும் ஜீவ காருண்யமா யிருக்க வேண்டும்; நம்மைப் போன்ற மானிடர்கள் எந்த ஜாதியாரா யிருந்தாலும் எந்த மதக் கொள்கைகளை யுடையவரா யிருந்தாலும் அவர்களுக்கு நம்மா லியன்ற திரேக சகாயம், திரவிய சகாயங்களைச் செய்ய வேண்டும் என்ற வைராக்கியம் இருந்தால் போதுமானது. அதுவே நம்மவர்களை ஒற்றுமைப் படுத்துவதற்கு ஆணி வேராகும். மூடத் தனமான பழக்கங்கள் வழக்கங்களை விட்டொழிக்க வேண்டும். மத பக்தியில் மகம்மதியர்கள் மிகுந்த பிடிவாத முள்ளவர்க ளென்பது யாவருக்கும் நன்றாகத் தெரிந்த விஷயம். கிலாபத்துக்குத் தலைமை ஸ்தானமா யிருந்த ஐரோப்பிய துருக்கியில் அரசு புரியும் கமால் பாட்சா அவர்கள், அவர்கள் மதக் கொள்கைக்கு விரோதமாகத் தனது



பிரஜைகள் ஐரோப்பியர்களைப் போல தொப்பிகள் வைத்துக் கொள்ள வேண்டு மென்றும், ஸ்திரீகள் கோஷா முக்காடுகளை எடுத்து விட்டு வெளியில் வரவேண்டு மென்றும், ஸ்திரீகள் வாசிக்க வேண்டு மென்றும், ஆண் மக்கள் தாடிகளை இவ்வளவு அங்குலந்தான் வளர்க்க வேண்டு மென்றும், அதற்கு மேற்பட்டதை வெட்டிவிட வேண்டு மென்றும் சட்ட திட்டங்கள் ஏற்படுத்தி விட்டார்கள். புத்த மதத்தை யனுசரிக்கும் சைனா, ஜப்பான் தேச ஸ்திரீகள் வீட்டை விட்டு வெளியே போகாதபடி பெண் குழந்தை பிறந்த வுடனே அதன் கால்கள் வளராதபடி கட்டி விடுவது வழக்கம். அந்தக் கால்களால் ஸ்திரீகள் சரியானபடி நடக்க முடியாமல் சுவர்களைப் பிடித்துக் கொண்டு நடக்க வேண்டியதா யிருந்தது. அந்தக் கொடிய வழக்கங்கள் நிறுத்தப்பட்டுப் போய் விட்டன. அவர்கள் யாவரும் வெளியில் வந்து பல தொழில்களைச் செய்கிறார்கள். ஆண் மக்கள் ஐந்து ஆறு கெஜம் தலையுச்சியில் மயிர் வளர்த்து சடை பின்னி கட்டிக் கொள்வது மாமூல் வழக்கமா யிருந்தது. தற்காலம் யாராவது ஒருவர் அவ்விதம் சடை வைத்திருந்தால் உடனே அதை, மற்றவர்கள் நறுக்கி யெறிந்து விடுவார்கள். சைனா, ஜப்பான் தேசத்து ஜனங்கள் ஐரோப்பியர்களைப் போல உண்ணவும் உடுக்கவும் பழக்கங்கள் செய்து கொண்டு விட்டார்கள். கிறிஸ்தவர்களுக்குள்ளும் முன்னிருந்த கடவுள் பக்தியில் நாலிலொரு பாகங் கூட இப்போதில்லை. ஜெர்மனி தேசத்து சக்ரவர்த்தியா யிருந்த கெய்சர், பகவத் கீதையை ஜெர்மன் பாஷையில் மொழி பெயர்த்து தனது சிப்பாய்கள் ஒவ்வொருவரும் அதை வாசிக்கச் செய்து உயிர் ஒன்றுதான் எப்போதும் அழியாத வஸ்து, திரேகம் நாமுடுத்திக் கொள்ளும் ஆடைகளைப் போன்றது. இந்தத் திரேகம் ஒழிந்தால் வேறு திரேகத்தில் இந்த உயிர் புகுந்து கொள்ளும். அரச நீதியில் ஒருவரைக் கொல்வது பாபமல்ல; அது இராஜ தர்மமாகும் என்று போதித்து விட்டார். இதனால்தான் மகா யுத்தம் நடந்து படு கொலைகள் ஏற்பட்டன. பகவத் கீதையின் உண்மையின்னதெனத் தெரிந்து கொள்ளாமல் கொடிய கொலைகள் நடந்தன.

ஆரிய பிராமணர்கள் தங்களின் நன்மைகளை யுத்தேசித்து தாங்கள் தான் உயர் குலம் மற்றவர்கள் தாழ்ந்த குலம்; சூத்திரர்கள் என்பவர்கள் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன் இம் மூவகுப்பினர்களுக்கும் அடிமை செய்யக் கடமைப்பட்டவன் என்று சட்ட திட்டங்கள் ஏற்படுத்தி விட்டதினால்தான் இந்து மதஸ்தர்களுக்குள் ஒற்றுமையே இல்லாமற் போய்விட்டன. இதனாலே இவர்களின் அரச குடும்பங்கள் நாஸ்தியாயின. இவர்களின் சுபாசுபக் கிரிகைகள் தகுந்த திட்டத்தில் செலவுகள் செய்ய வேண்டுமென்ற கெட்ட வழக்கங்களை ஒழிக்க வேண்டும். இவர்கள் கடவுளை பக்தி செய்வதில் எந்த வழக்கங்கள் வைத்துக்கொண்டிருந்த போதிலும் அவைகளை வீடுகளுக்குள்ளேயே செய்து கொள்ள வேண்டும். வீட்டுக்கு வெளியில் வந்து விட்டால் ஆதி திராவிடர்களும் தன்னுடன் பிறந்த சகோதரர்களாகப் பாவித்து அவர்களிடம் அன்டி பாராட்டி நமது தேச நன்மைகளுக்குப் பாடுபட வேண்டும். ஜாதி மதக் கட்டுப்பாடுகளை அடியோடே ஒழித்துவிட வேண்டும். அவ்விதஞ் செய்தால் மட்டில் நம்மவர்கள் நன்னிலைமைக்கு வர முடியும்.

## 7 அன்னிய ராஜாங்கத்தாரால் ஆளப்படுதல்.

இதனாலுண்டாகிய கெடுதிகளை நான் சொல்ல வேண்டியதவசியமில்லை. ஆங்கில அரசாங்கத்தார் இந்தியர்களின் நன்மைக்கு, ஸைமன் கமிஷன் அனுப்பியதும் அந்தக் கமிஷனர்கள் செய்த ரிப்போர்ட்டும் இதற்குப் போதுமான சாக்ஷியமாகும்.

## 8 கைத் தொழில் தேர்ச்சி யில்லாமை

இது விஷயமாகப் படிப்பில்லாமை என்ற தலையங்கத்தில் விஸ்தாரமாகச் சொல்லி விட்டேன். மேலே கண்டபடி கிருஷிக் கைத் தொழில் சாஸ்திரங்கள், சுதேச பாஷைகளில் 6-வது வகுப்பு வரையில் வாரம் 1-க்கு ஏழெட்டு மணி நேரம் கற்பிக்கப்படும் பட்சத்தில் நம்மவர்கள் நன்னிலைமைக்கு வந்து விடுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

---

# ‘பாரதி’யின் மறு மலர்ச்சி.

ரா. சுப்ரமண்யம்.

தமிழ் நாட்டின் விருத்திக்கும் தாய் நாட்டின் விடுதலைக்குமாகத் தோன்றித் தொண்டாற்றி வந்த நம் ‘பாரதி’ சென்ற 1930-ம் வருடம் ஆகஸ்டு மாதம் முதல் வெளிவராது நின்ற விஷயம் யாவரும் அறிந்ததே யாகும்.

காந்தி—இர்வின் உடன்படிக்கையால் தேச பக்தர்களின் சிறை வாழ்வு நீக்கப்பெற்றதில், நம் ‘பாரதி’யின் ஆசிரியரவர்களும் ஒருவராகும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

‘பாரதி’ சில மாதங்களாக வெளி வராமற் போயினதேனும், ‘நவீன பாரதி’ என்ற பெயர் கொண்டு தங் கடனைப் பழுதற வாற்றி வந்ததைத் தமிழுலகு நன்கறியும்.

நாட்டுத் தொண்டே நலமிக்க தொண்டு; அதிலும் அது பற்றியே நடந்தேறும் பத்திரிகைத் தொண்டே பலன் மிக்க தொண்டென்பதை ‘பாரதி’யின் ஆசிரியரவர்கள் கருதி உழைத்து வந்த தொப்பவே, கஷ்டங்கள் அபரிமிதமாகவும் நஷ்டங்கள் மலைபோலும் தோன்றிய அச்சமயத்திலும் மனந் தளராது ஊக்கங் குன்றாது கொள்கையில் மாற்றமில்லாது பத்திரிகையை நடத்திவர அருள் புரிந்து, அன்பர் பணி செய்யக் காத்து வளர்த்த தேவி பாரதியை வணங்கா நிற்கின்றோம்.

‘நவீன பாரதி’ இம் மதியுடன் ‘பாரதி’யில் அடங்கி ஐக்கியப் பட்டுவிடுகின்றது. அடுத்த சஞ்சிகை—ஏப்ரல் மாஸிகை—4-ம் மணி ‘பாரதி’ யாகவே வெளிவந்து, நேயர்களை முன்னிலும் தீரத்துடனும் வீரத்துடனும் புத்தம் புதிய விஷயங்களுடனும் களிப்பிக்குமென் ஆனந்தத்துடன் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

‘நவீன பாரதி’யில், ‘பாரதி’ அன்பர்கள் விரும்பிய பல விஷயங்கள் வெளிவர முடியாமற் போயினதிற்கு மிகவும் வருந்தவேண்டியிருக்கின்றது. தேசத்திலுற்ற எதிர் பாரா நெருக்கடியாலும் பிற அசௌகரியங்களாலும் இவ்விதக் குறைபாடுகளுடன் எப்படியோ நடந்தேறிவிட்டது. இவைகளால் வாசக நேயர்களுக்குச் சிறிது திருப்தி குறைவிருக்கலாமெனவே யெண்ணுகின்றோம். இருப்பின் அடுத்த மதியிலிருந்து ‘பாரதி’யாக வெளி வந்து பூரண திருப்தியைக் கொடுக்குமென்ற திட நம்பிக்கையினால், அன்பர்களுடன் சேர்ந்து நாமும் இன்புறுகின்றோம். மாதா பாரதி ‘பாரதி’யையும், சிறை சென்று வந்த ‘பாரதி’யின் ஆசிரியர் திருவாளர். ரா நாராயணஸ்வாமி அவர்களையும் முன்னிலும் நன்கு காத்து வளர்த்து போஷித்து வருமாறு நேயர்கள் சார்பில் சார்ந்து போற்றித் துதிக்கின்றோம்.

வந்தே மாதரம்.

# கடவுள் எங்கிருக்கிறார்?*

## திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள், ஆசிரியர், "பாரதி."

ஓ சன்னியாசியே! இருளடைந்த கோவிலின் கதவுகளையெல்லாம் அடைத்துவிட்டு, தன்னந் தனியே ஓர் மூலையில் உட்கார்ந்து ஜெப மாலையை உருட்டிக்கொண்டு, இன்னும் புஷ்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், மந்திரங்களாலும் பூசை செய்கிறாய். இப்படிச் செய்வதன் மூலம் கடவுளிடம் செல்லலாம் என்று நினைத்துச் செய்கிறாய். கடவுள் உனக்கு முன்னாலா இருக்கிறார்? அவர் உனது கோவில்களில் மட்டுமா இருக்கிறார்? விழித்து யோசனை செய்துபார்!

கெட்டியான நிலத்தைக் கஷ்டப்பட்டு உழுதுகொண்டிருக்கும் உழவனிடத்திலும் கற்களைச் சிரமப்பட்டு உடைத்து வழிகளை உண்டாக்கிக்கொண்டிருக்கும் வேலை செய்பவனிடத்திலும் அவர் அதோ இருக்கிறார். அவர்களோடு அவர் வெயிலிலும் மழையிலும் கூடவே இருக்கிறார். அவருடைய ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உனது தூய வஸ்திரத்தை எடுத்துவிட்டு அவர்களைப்போல நீயும் மண்ணிலும் சேற்றிலும் நடந்து வருக. கஷ்டங்களுக்குப் பயந்துகொண்டு வாழ்விலிருந்து ஓடாதே. துன்பப்படுகிறவர்கள் மத்தியிலும் எளியவர்கள் மத்தியிலும் அவர் சதா நிர்த்தனம் செய்துகொண்டிருக்கிறார். உலகத் தினசரி வாழ்வில் நீயும் கலந்துகொள்வதே கடவுளிடம் கலந்ததாகிறது. வாழ்வில் அவர் சர்வ சக்தராயும் சர்வ வியாபகராயுமிருக்கின்றார். எங்கு உழைப்பும் உண்மையும் எளிமையும் இருக்கின்றதோ அவர் அங்கு பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். அவரைக் காண வேண்டினால், வெளியில் வந்து பொது வாழ்வில் கலந்துகொள்ளுக. வாழ்வே கடவுள்; கடவுளே வாழ்வு.

மோட்சம் எங்கேயிருக்கிறது? வாழ்வில் கலந்துகொள்ளாமல் எங்கேயாவது ஓடிப் போவதால் மட்டும் மோட்சம் கிடைப்பதாக நினைக்கிறாயா? ஜகத் பிரபு, தன்னை எல்லாவிதப் பந்தங்களுடனும் சம்பந்தங்களுடனும் சிருஷ்டித்திருக்கின்றார். அவர் எப்பொழுதும் எல்லாக் காரியங்களிலும் கூடவேயிருக்கிறார்.

ஓ துறவியே! புஷ்பங்களையும் சுகந்த தூபங்களையும் விட்டுவிட்டு, உனது தியானத்தை மட்டுப் படுத்திக்கொண்டு வெளியே வா. தைரியத்துடன் வாழ்வை நன்றாயும் சுத்தமாயும் நடத்து. துன்பத்திலும் துயரத்திலும் ஏழ்மையிலும் அவரைக் கண்டறிந்து அநுபவி.

---

* கவிச் சக்ரவர்த்தி தாகூரது அருமைப் பாக்களில் ஒன்றைத் தழுவி மொழிபெயர்க்கப் பட்டது.

# காந்தியும் வில்லியம் வோர்ட்ஸ்வொர்த்தும்.

## திரு. வெர்ரியர் எல்வின் அவர்கள்.

மகாத்மா காந்தியை சமீப காலமாகப் பற்பல மகான்களுடனும் சமய குரவர்களுடனும் ஒப்பிட்டுப் பேசுவது சகஜமாயிருக்கிறது. ஆயினும் ஒருவராவது மகாத்மாவின் உபதேசத்தை வில்லியம் வோர்ட்ஸ்வொர்த்தின் உபதேசங்களுடன் ஒப்பிட்டதில்லை. எனினும் இவ்விரு பெரியார்களுடைய வாழ்க்கையும் கொள்கைகளும் விசேஷமாக ஒன்றுபட்டிருப்பதைக் காணலாம். இவ்விருவரும் விடுதலையினிடம் அதிகப் பற்றுக்கொண்டவர்கள். இருவரும் ஏழை மக்களின் நிலைமையை அறிந்து அவர்களை நேசிக்கின்றார்கள். இருவரும் எளிய வாழ்க்கையில் அதிக நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறார்கள். இருவருமே சமய அறிவின் அவசியத்தையுணர்ந்து அதைப் போதிக்கின்றனர். மேலும் வோர்ட்ஸ்வொர்த்தும் காந்திஜியைப்போலவே அவ்வளவு அதிகமாக இல்லாவிட்டாலும், கைராட்டினத்தைப் பாராட்டினர். காந்திஜியைப் போலவே வோர்ட்ஸ்வொர்த்தும் பெரிய ஒழுக்க போதகராயிருந்தார் என்பதை கிளாட்ஸ்டனும் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஜான்ஸ் டூவர்ட்மில் போன்ற பலர் வோர்ட்ஸ்வொர்த்தின் கவிகளை அறிந்ததும் தாங்கள் சிறந்தவர்களாகவும், சந்தோஷமானவர்களாகவும் மாறியிருப்பதை உணர்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது நாம் இவ்விரு பெரியாரிடையிலுமுள்ள ஒற்றுமைகளை ஒவ்வொன்றாகக் கவனிப்போமாக.

மகாத்மா காந்தி கைராட்டினமே எளிய வாழ்க்கை, தன்னம்பிக்கை, தன்னடக்கம், பொது மக்களுக்கிடையில் பரஸ்பர ஒத்துழைப்பு இவற்றைத் தோற்றுவிக்கச் செய்யும் காமதேனு என்று கூறியுள்ளார். அதுபோலவே வோர்ட்ஸ்வொர்த்தும் கைராட்டினம் ஒவ்வொருமுறை சுற்றும்போதும் அது சமாதானத்தையும், அன்பையும், நல்லெண்ணத்தையும் தோற்றுவிக்கின்றது என்று பாடியுள்ளார். அவருடைய பல கவிகளிலும் சர்க்காவின் மேன்மை

விளக்கப்பட்டிருக்கின்றது. அதில் அவர் குடி மக்களின் அமைதியான வாழ்க்கைக்குக் கைராட்டினம் இன்றியமையாததென வற்புறுத்தியுள்ளார். ‘மைக்கேல்’ என்னும் கவியிலும் அவர், எவ்வாறு ஒரு தந்தையும் அவர் மகனும் மாலை நேரங்களில் சர்க்காவில் தங்கள் நேரத்தைக் கழித்தார்களென்பது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. மகாத்மாவுக்குக் கிராமவாசிகளிடம் எத்தகைய அன்பு நிலவுகின்றது என்பதுபற்றி அதிகம் விவரிக்க வேண்டியதில்லை. அவர் பிரிட்டிஷ் சர்க்காரின்மீது குறை கூறுவதெல்லாம் அது, கிராம வாசிகளைப் பொருக்க முடியாத வறுமையில் ஆழ்த்திவிட்டதென்பதேயாகும். அவர் இந்தியாவின் பெரும்பான்மை மக்களான கிராமவாசிகளைக் கண்ணியப் படுத்துகின்றார். அவ்வாறே வோர்ட்ஸ்வொர்த்தும் கிராம வாசிகளை மேன்மைப்படுத்தி அவர்களைப் பற்றியே ஒரு கவியும் இயற்றியுள்ளார். ‘மிரிகல் பாலெட்ஸ்’ என்னும் கவிக்கு முகவுரை கூறுகையில், கிராமவாசிகளுடைய நிலைமையில்தான் மன அடக்கம் ஏற்படுகிறதென்றும், கள்ளங் கபடமற்றதும் ஆனால் உறுதியானதுமான மனோநிலை ஏற்படுகிறதென்றும், அப்பொழுதுதான் மனித வாழ்வு இயற்கையோடமைந்த அழகுள்ள வாழ்க்கையாயிருக்கிறதென்றும் கூறியுள்ளார். ஸ்ரீ வோர்ட்ஸ்வொர்த் தமது மற்றொரு கவியில், விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், சர்க்காரும் சமூகத்திலுள்ள உயர்தர வகுப்பாரும் தாழ்ந்தவர்களிடம் உண்மையுடனும் அனுதாபத்துடனும் நடந்துகொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தியிருப்பது மகாத்மாவின் மணிவாக்கே போல் காணப்படுகின்றது.

மகாத்மா காந்தி ‘எளிய வாழ்வு வாழ்வதும், உயரிய விஷயங்களைச் சிந்திப்பதுமே இந்தியாவின் ஆன்மார்த்திக வழக்கமாகும்’ என்று கூறியுள்ளார். அவர் தமது வாழ்க்கையாலும் பிரசங்கத்தாலும் மக்கள் அப் பண்டை கால எளிய வாழ்வையே பின்பற்ற வேண்டுமென்று வற்புறுத்துகின்றார். இவ்வாறே வோர்ட்ஸ்வொர்த்தும் துறவறத்துக்கேற்றதும், எளிமை வாய்ந்ததுமான வாழ்க்கையையே நடத்தி வந்தார். தற்கால நாகரிகத்துக்கும், அளவுக்கு மிஞ்சிய போகத்துக்கும் பெரிய எதிரியாக இருந்தார். மகாத்மா காந்தி ‘இந்தியாவைப்



பிரிட்டிஷ் ஜனங்கள் ஆள்வதில்லை, ஆனால் நவீன நாகரீகமே அதன் தந்திகளாலும், டெலிபோன்களாலும், ரயிலாலும் இதர வகைகளாலும் நம்மை ஆளுகின்றது. பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பதிலாக இந்திய ஆட்சியானது நவீன முறைகளைத் தழுவியே ஏற்பட்டால் அதனாலும் ஒன்றும் நன்மை விளையாது. இகலோக இன்பங்களைப் பெறுவதினாலேயே ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக மாட்டோம் என்று கூறியுள்ளார். இந்த கருத்தைத்தான் வோர்ட்ஸ்வொர்த்தும் தம் பாடலில் புகுத்தியுள்ளார். 1884-ம் வருஷத்தில் அவர் வசித்து வந்த இடத்துக்கு ரயில்வேயை அமைக்க முயன்றபோது, அதனால் தமது அமைதியும் இதர சௌகரியங்களும் குலைந்துவிடுமெனக் கருதி ரஸ்கினுடன் சேர்ந்துகொண்டு பலமாக எதிர்த்தார். சமீபத்திலுள்ள ஒரு இடத்துக்கு ஜனங்கள் ரஸ்தாவின் வழியாக வண்டிகளில் போகையில் இடையிலுள்ள இயற்கை அழகுகளையெல்லாம் பார்த்துக்கொண்டே வராமல், ரயில் போட முயற்சிப்பதானது, சிறு குழந்தை சத்தம் எங்கிருந்து வருகிறதென்பதை அறியும் பொருட்டு தப்பட்டையையே கிழித்துப் பார்ப்பதுபோலிருக்கிறதெனக் கூறினார். காந்திஜியைப் போலவே அவரும் தேக உழைப்புத் தொழிலை மிகப் போற்றினார்.

மகாத்மா, சமயத்தினின்றும் பிரிந்து நிற்கும் அரசியல் பொருளற்றது என்று கூறி இந்தியாவின் அரசியலைச் சிறந்த பாரமார்த்திக கொள்கையுடையதாகச் செய்துவிட்டார். அதுபோலவே வோர்ட்ஸ்வொர்த்தும், ‘ஆத்மாவின் மூலமே ஒரு தேசம் சிறப்பானதாகவும் சுதந்திரத்துடனும் விளங்க முடியும்’ எனக் கூறியுள்ளார். அவர் மற்றும் பல பாடல்களில், எல்லாத் துறைகளிலும் சமய உணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்தியுள்ளார். வோர்ட்ஸ்வொர்த்தும் மகாத்மாஜியைப் போலவே; ஒரு மனிதன் ஆகாரத்துக்காக அலைவது போல் சுதந்திரத்துக்காக அலைந்தார். அவர் தமது வாலிபப் பருவத்தில் பிரான்சுக்குச் சென்றபோது அங்கு நடந்த புரட்சியைக் கண்டு சிறந்த காலம் உதயமாவதை உணர்ந்தார். அவர், தம் ஆயுள் முழுதும் விடுதலையை நேசிப்பவராகவே இருந்தார். அவரது வாழ்நாளின்போது விடுதலைக்காக யுத்தம் செய்த பற்பலரைப்

பற்றியும் பேசியுள்ளார். ஒவ்வொரு தேசமும் சுதந்திரத்துடன் இருக்க உரிமை பெற்றிருக்கிற தென்பதே அவருடைய கருத்து. மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாத பல சௌகரி யங்களைப் பெற வேண்டுமாயின் ஒவ்வொரு தேசமும் சுதந்திர முடையதா யிருக்கவேண்டு மென்பதையும் அவர் ஒப்புக்கொள்கிறார். ஒருவரை யொருவர் அடக்குவதை வோர்ட்ஸ்வொர்த் அதிகம் வெறுத்தார்.

இவ்வாறாக ஆங்கிலேயர்களுக்கு ஒழுக்கத்தைப் போதித்த பெரிய மகானாகிய வோர்ட்ஸ்வொர்த்துக்கும்; இந்தியர்களின் புத்துணர்வுக்குக் காரணரான மகாத்மா காந்திக்கு மிடையில் ஒற்றுமைகள் பல காணப் படுகின்றன. உள்ள கருத்தைத் தக்க மொழிகளால் வெளியிடுவதில் வோர்ட்ஸ்வொர்த் சிறந்தவராக இருந்தா ரென்றாலும், தாம் கொண்ட கொள்கையை அப்படியே நடத்திக் காட்டி உலக மக்களின் இருதயத் தைக் கவரக் கூடிய மகாத்மாவின் சக்தி அபாரமானது. வோர்ட்ஸ் வொர்த்தே பிழைத் திருப்பாரானால் இதை ஒப்புக்கொண் டிருப்பார். பிரான்சு தேச சர்க்கார் அடிமைத் தனத்தை மீண்டும் ஸ்தாபிக்க முயன்றபோது அதை எதிர்த்துப் போராடிய ஒரு மகான் சிறைபி டிக்கப்பட்டபோது வோர்ட்ஸ்வொர்த் அவரைப் பாராட்டிப் புகழ்ந்த கவியே, இப்போது ஏரவாடா சிறையில் காலங் கழித்த மகாத்மா வுக்குப் பொருத்தமானதாகும். அப் பாடலில் சிறையில் இருப்பதாக அவர் வருந்த வேண்டியதில்லை யென்றும், அவர் சிறை செல்லும் போது அவருக்காகக் காற்றும், பூமியும், ஆகாயமும் வேலை செய்யும் படியான சக்தியை வெளியில் விட்டுச் சென்றிருப்பதாகவும், அவரை யாரும் மறக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டதென்றும் கூறப் பட்டிருக்கின்றது.

"முன்னேற்றம்"

# சுதந்திர அயர்லாந்து.

திரு. ஸி. எ. பெருமாள் அவர்கள்.

சுதந்திர அயர்லாந்து தேசத்தின் உடன்படிக்கை 1922-ம் வருடம் ஜுன் மாதம் 16-ம் தேதி நிறைவேறியது. அவ் வுடன்படிக்கையின்படி அயர்லாந்து தேசம் இரு பாகமாகப் பிரிக்கப்பட்டு, தென் பாகமாகிய லீன்ஸ்டர் (Lienster) மன்ஸ்டர் (Munster) கானட் (Connaught) அல்ஸ்டர் (Ulster) ஆகிய மாகாணங்களைக் கொண்ட பெரும் பிரதேசங்களே சுதந்திர அயர்லாந்து என வழங்கப்படலாயிற்று. இதன் விஸ்தீரணம் 1.70,24,481 ஏக்கர். ஜனத் தொகை 29,71.992 மக்கள், விளைவாதிகள் பயிர் செய்யப்படு மிடங்கள் 1928-ம் வருட அறிக்கையின்படி தானிய மணிகள் 8.14.537 ஏக்கர்களும், கிழங்கு வகைகள் 6,99,029 ஏக்கர்களும், சணல் (Flax) 8,032 ஏக்கர்களும், பழ வர்க்கங்கள் 7,334 ஏக்கர் களும், புல் பயிர் 21,55,436 ஏக்கர்களுமாக மொத்தம் 36,84,368 ஏக்கர்களே யடங்கும. இந் நாடு செய்து வந்த வியாபார மதிப்பு அதே வருடத்தில் 5,98,52.122 பவுன் இறக்குமதிப் பொருள் களும் 4,63.04,758 பவுன் ஏற்றுமதிப் பொருள்களுமாகும். இவ் வியாபாரத்தின் பெரும் பகுதியும் இங்கிலாந்து தேசத்தோடேயே நடந்தேறி யுள்ளது.

அயர்லாந்து தேசம் சுதந்திரம் பெற்று எட்டு வருடங்களே யானாலும், அது சொற்ப காலத்திற்குள் அடைந்திருக்கும் முன் னேற்றம் மிகவும் பாராட்டத் தக்கது. அயர்லாந்து தேசத்தில் சுதந்திரப் போர் நடந்து கொண்டிருந்த அவ் வேளையில் பிரிட்டிஷ் அரசாங்கம் பலவிதமான காரணங்கள் கூறி சுதந்திரத்திற்கு முட்டுக் கட்டை யளித்து வந்தது. அரசாங்கமே தோல்வி யுற்று

நாடும் அழிந்து மக்களும் சிதறி விடுவார்களெனப் பகிரங்கமாகப் பிரிட்டிஷ் அரசியல் வாதிகள் கூறி வந்தனர். இவ்வாறு சாபமிடப் பட்டு சுதந்திர மடைந்த அயர்லாந்து தேசம் எட்டு வருடங்களில் எதிர் பாராத முன்னேற்ற மடைந்திருப்பது பற்றி, பாரத நாட்டு விடுதலைப் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ் வேளையில் ஒருவாறு வரையறுத்து விளக்குவது இந்திய மக்களுக்குப் பெருந் துணை செய்யுமென நம்புகிறோம்.

ஒரு தேசத்தின் அரசாங்க நியமனத்திற்கு மிகவும் முக்கியமானது பணமே யாகும். இங்கிலாந்தோடு அயர்லாந்து தேசம் தொடுத்திருந்த போரின் பலனால், அயர்லாந்து அளவற்ற பொருட் சேதத்திற் கிலக்காகியது. உயிரிழந்த மக்களும் பொருளிழந்து தவிக்கும் மக்களும் எண்ணிக்கையி லடங்காது. எங்கெங்கும் துன்பமும் வறுமையும் குடிகொண் டிருந்தன. கடைசியாக சுயராஜ்ய உடன்படிக்கையின்படி அயர்லாந்து தேசம் இங்கிலாந்துக்கு 4,00.00.000 பவுன் யுத்தக் கடன் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையும் கூறப்பட்டது. இப் பெருந் தொகை சின்னஞ் சிறிய அயர்லாந்து தேசத்திற்குப் பெரும் பாரமாக முடிந்தது. இதனைத் தவிர்த்து தனது நாட்டின் சீர்குலைவைச் சரிப்படுத்துவதற்கும், இராணுவத்தைப் புதுப்பிப்பதற்கும், நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதற்கும் வேறான பணமும் அவசியமாக விருந்தது. எனவே பணமில்லாக் குறையால் அயர்லாந்து தனது இராணுவ பலத்தைக் குறைவு படுத்தி நாட்டின் பொருளாதார நிலைமையைச் சிறுகச் சிறுக சீர்திருத்தி வருவதில் கண்ணுங் கருத்துமா யிருந்து, தற்போது வருமானத்திற்குத் தகுந்த செலவு செய்து வருவதென்ற கொள்கையின்படி நாட்டின் ஒவ்வொரு துறைகளிலும் மெதுவாகப் புதுப்பித்து வருகிறது. இவ்விதமான கஷ்டங்களினிடையில் அயர்லாந்து தேசம் அபிவிருத்தி யடைந் திருப்பது ஆச்சரியகரமானது. புதிய அரசாங்கம் ஸ்தாபனமான காலத்தில், அங்கு பொருளாதாரச் சீர்கேடே மிகக் கவலையளித்து வந்தது. ஐரோப்பிய மகா யுத்தம் முடிவடைந்த அக் காலத்தில் ஒவ்வொரு நாடும் அரசியலைவிடப் பொருளாதாரத்தில் பெருங் கவலை யெடுத்து வந்தன. அதே போன்று அயர்லாந்து தேசத்திலும் தேசத் தலைவர்கள் முதன் முதலில் பொருளாதார சாம்ராஜ்



யத்தைத் தேடுவதற்காகவே முனைந்து நின்றனர். உலக மகா யுத்தத்திற்கு முன்னால் அந் நாட்டிலுள்ள அனைவரும் அரசியல் மாற்றத்தை யிட்டுச் செய்து வந்த அரிய தியாகங்களைப் போன்று தற்காலம் அம் மக்களில் ஆடவரும் பெண்டிரும் அரசியல் விவாதங்களையே ஒரு புறம் ஒதுக்கி வைத்து சமூகப் பொருளாதார நிலைமைகளைச் சரிப்படுத்துவதில் கருத்தை மிகச் செலுத்தி வருகின்றனர். புதிய அரசாங்க முறையில் எந்தவிதமான நிபந்தனைகளையும் நடை முறையில் கொண்டு வருவதற்கு நாட்டில் சமாதானமும் ஒழுங்கும் சட்டங்களின் பாரமரிப்பும் முதலில் அவசியமாகும். புதிய அயர்லாந்து தேசமும் தான் கொண்ட முதல் வேலையாகிய பொருளாதார சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்துவான் வேண்டி நாடெங்கும் அமைதியும் ஒழுங்கும் நிலவும் பொருட்டு அரசாங்க சட்ட திட்டங்களைப் பலப்படுத்தி வருவதில் அதிகமான ஊக்கங் காட்டி வரவே, அதில் எதிர்பாராத வெற்றியை யடைந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் முறிந்து போன தருவாயில் அந் நாட்டில் நியாய பரிபாலனம் சிதறி, வலிமை யுள்ளவர்கள் ஒவ்வொருவரும் ஆயுதப் பிரயோகம் செய்து குழப்பங்களுண்டு பண்ணி வரவே நாடெங்கும் அமைதி குலைந்து அல்லோல கல்லோலமா யிருந்தது. இப்பொழுதோ இந் நிலை யாவும் சரிப்படுத்தப்பட்டு எங்கணும் நீதியும் நியாயமும் நிலை நிற்க, மக்கள் தெருக்களில் யாதொரு பயமுமின்றி சர்வ சாதாரணமாய் உலாவித் திரிகின்றனர்.

தேச மக்களிடை அமைதி பரவி எங்கணும் சமாதானம் நிலை நிறுத்தப் பட்டதும், அரசாங்கம் தனது நாட்டுப் பொருளாதார நிலைக்கு அனுகூலமான விவசாய அபிவிருத்தியைக் கவனிப்பதில் தனது முழுக் கருத்தையும் செலுத்தி வந்தது. காலத்தைப் பாழாக்கி விடாது இத் துறையில் பிரமாண்டமான நிர்மாணத் திட்டங்கள் நிபுணர்கள் பலரால் வரையறுக்கப்பட்டன. அயர்லாந்து தேசத்தில் பொது மக்களது நிலங்களின் சட்ட திட்டங்கள் ஒழுங்கு பெறாது ஒவ்வோர் காலத்திலும் பெரும் இடைஞ்சல்களை விளைவித்து வந்ததானது, அத் தேச சரித்திரத்தை வாசிப்போர்க்கு நன்கு புலனாகும். இவ் விஷயத்தையே புதிய அரசாங்கமும் முதலில் கவனிக்க ஆரம்பித்து, 1923 முதல் 1927-ம் ஆண்டு வரை பலமான வாதங்கள் செய்து முடிவாக முதலாளிமார்களின் தனி

அதிக்கத்தை அடியோடு சட்ட பூர்வமாகத் தொலைத் தெறிந்து விட்டதால், தற்போது அயர்லாந்து தேசமே சாதாரண விவசாயிகளிடை ஒப்படைக்கப்பட்டு விட்டதெனக் கூறலாம். இம் முறையில் அங்கு 600 முதலாளிகள் வரை இப்பொழுது அதோகதியாகி விட்டனர். அவர்களுக்குப் பதிலாக அவர்கள் வசமிருந்த நிலங்கள் யாவும 3,00,000 விவசாயிகள் கையில் பாகுபடுத்திக் கொடுக்கப்பட் டிருக்கின்றன. அயர்லாந்து தேசத்திலுள்ள விவசாயிகளின் முக்காற் பகுதியினரும இம் முறையில் முன் வந்து விட்டனர். மீந்துள்ளவர்களும் கூடிய விரைவில் சரிப்படுத்தப்பட்டு விடுவார்க ளென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. எனவே அயர்லாந்து தேசத்தின் சீர் திருத்தங்கள் யாவும் ஏழை விவசாயிகளின் கையிலேயே யிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

விவசாய சீர் திருத்தத்தில் உலக நாடுகளை வெற்றி கொள்ள வேண்டு மென்ற ஒரே நோக்கத்திலேயே தற்கால அயர்லாந்து வாசிகள், விவசாயத்தில் புதிய முறைகளைக் கையாண்டு வருகின்றனர். எனவே விளைவாதிகளின் அபிவிருத்தி முறைகளிலும் விற்பனை முறைகளிலும் அவர்கள் புதிய சாஸ்திரீய வழிகளில் நிர்மாணத் திட்டங்கள் வகுப்பதற்குப் போதிய சிரமங்கள் எடுத்து வருகின்றனர். கிருஷி சாஸ்திரத்தில் பாண்டித்தியம் வாய்ந்த விவசாய மந்திரியாகிய மிர். ஹோகன் அவர்கள், இடைவிடாத ஊக்க மெடுத்து தனது நிர்மாணத் திட்டங்களை மிகத் தைரியமாக வகுத்து வருகிறார். இத் துறையில் சில வருடங்களுக்கு முன்னாலேயே புதிய திட்டங்களிட்டு வேலை செய்து வந்த அயர்லாந்து வாசியான ஸர். ஹோரேஸ் பளங்கட் (Sir Horace Plunkett) என்பவரைப் பின் பற்றியும் விவசாய நிபுணர்கள் ஒத்துழைத்து வருகின்றனர். நாடெங்கும் விவசாயிகள் தங்கள் பழைய முறைகளைக் கைவிட்டுவிட வேண்டு மென்றும் கூட்டுறவு முறைகளைப் பின் பற்றுவதற்கு யாவரும் ஒற்றுமைப்பட வேண்டு மென்றும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. அரசாங்கமும் புதிய முறையில் விவசாயத் தொழிலிலும் விவசாயத்தைச் சேர்ந்த இதர பல விதமான கைத் தொழில்களிலும் ஈடுபட் டுழைக்கும் விவசாயிகளுக்கு சமயா சமயத்தில் பண வுதவி செய்யும் பொருட்டாக 5 இலக்ஷம் பவுன் மூலதனம் கொண்ட விவசாய பாங்கு ஒன்று



நியமித்துள்ளது. அவசியப்படுகிறவர்களுக்கு தப் பாங்கிலிருந்து பணம் கடன் கொடுத்துத் தொழிலின் உபயோகத்திற்கான கட்டிடங்கள் கட்டிக் கொள்வதற்கும், கன்று காலிகள் ங்குவதற்கும், பண்ணைச் சீர் திருத்தங்களுக்கு வேண்டும் இதர செலவுகளுக்கும் உதவி செய்யப்படுகிறது. தவிரவும் அ பாங்கிலிருந்து பணம் கடன் பெற்று, விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் யமித்து கிருஷிச் செலவுக்குப் ணம் கொடுத்துதவவும், இயந்திரங்கள் விதைகள் முதலிய சாதனங்கள் உற்பத்தி செய்யவோ அல்லது அந்நிய நாடுகளி லிருந்து தருவிக்கவோ செய்து வரலாம். அத்துடன் விவசாயத்தில் தற்போது சீர் சிறந்து விளங்கும் ஹாலந்து, டென்மார்க்கு ஆகிய தேசங்களோடு போட்டி போடுவதற் கனுகூலமாக விவசாயப் பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு அரசாங்கம் பெருந் துணை செய்து வருகிறது. கன்று காலிகளை அதிகப்படுத்துவதற்கும், வெண்ணை உற்பத்தியை சீர் திருத்துவதற்கும், முட்டை வியாபாரத்தை நல்லவிதமாய் நடத்துவதற்கும், பாலின் அளவை நிரந்தரப்படுத்தி நாடெங்கும் கொண்டு போவதற்கும் தகுந்தசட்ட திட்டங்கள் அரசாங்கத்தில் நிறைவேறி யிருக்கின்றன. "அயர்லாந்து தேசத்து விவசாயிகள் விவசாய வளர்ச்சியிலும் வியாபார வளர்ச்சியிலும் வாழ்க்கையின் வளர்ச்சியிலும் கண்ணுடையவர்களா யிருந்து வரவேண்டும்" எனக் கூறிய ஸர். ஹோரேஸ் பளங்கட் அவர்களின் கொள்கை இப்பொழுது நாடெங்கும் பரவி அயர்லாந்திலுள்ள ஒவ்வொரு விவசாயிகளும் அதனையே தமது இலக்ஷியமாகக் கொண்டு நடக்கின்றனர்.

விவசாய அபிவிருத்திக்குத் துணையாக நீர்ப்பாசன வசதிகளும் பிரம்மாண்டமான அணைக்கட்டுகள் மூலம் செப்பனிடப் பெற்று, நிலப் பாங்குகள் யாவும் செவ்வையாக்கப்பட்டு வருகின்றன. "கார்லோ" என்னு மிடத்தில் அரசாங்க வுதவியில் பெரிய தோர் கரும் பாலை நியமிக்கப் பெற்று சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. ஐந்து இலக்ஷம் பவுன் செலவில் தொழிலாளர்களுக் கவசியமான வீடுகள் சுகாதார முறைப்படி கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. "தால்டாக்ட்" என்னு மிடத்தில் இரண்டு இலக்ஷத்து ஐம்பதினாயிரம் பவுன் இத் துறையில் அதிகப்படியாகச் செலவு செய்வதற்கும் ஆலோசனை நடந்து வருகிறது.

போக்குவரத்துப் பாதைகள் எங்கணும் புதிதாய்ச் செப்பனிடப் பெற்றும், இராஜ பாதைகள் ஐரோப்பிய நாடுகளிலுங் கூட அமைந்திராவாறு அவ்வளவு அழகாயும் பெரிதாயும் அமைக்கப்பட்டு விட்டன. அயர்லாந்தின் சுதந்திரப் போரின் போது அழிந்து போகும் நிலைமையில் சீர் குலைந்து கிடந்த நகர சபை நிர்வாக முறைகள் யாவும் ஒழுங்கு பெற அமைக்கப் பெற்று பொது ஜன சுகாதாரத் திட்டங்களும் ஏழைகளின் பாதுகாப்புச் சட்டங்களும் குறைவறக் கவனிக்கப்பட்டு இனிது நடைபெற்று வருகின்றன. சில வருடங்களுக்கு முன்னால் "ஷானன்" (Shannon) என்னுமிடத்தில் ஆரம்பிக்கப் பெற்ற மின்சார உற்பத்தி நிலையம் தற்போது முற்றுவிக்கப்பட்டு விட்டது. ஐரோப்பிய தேசங்களில் இதுவே மிகவும் பெரிதாக விளங்குமென ஏற்கனவே மதிக்கப் பெற்ற ஷானன் மின்சாரத் திட்டம் முதன் முதலில் அரசாங்கத்தாரால் அனாவசியமாகக் கருதப்பட்டு வந்தது. இப் பொழுது இவ் வேலை பூரணமாக முடிவுற்றதும், எங்கணும் மின்சார சக்தியினாலேயே சகலமும் நடந்தேறி வருகின்ற "டென்மார்க்" தேசத்தைப் பார்க்கினும் மிகவும் சிறப்பாக, அயர்லாந்து தேசம் ஒவ்வொரு ஏழைகளின் குடிசைகளும் மின்சார விளக்கிடப் பெற்றும், சிறு சிறு குடிசைக் கைத்தொழிலுக் கவசியமான இயந்திரங்களும் மின்சார விசையினால் ஓடச் செய்தும், மின்சார உபயோகத்தினால் ஒப்பற்ற தொழிலபிவிருத்தி தேசமாக விளங்கி விடுமென்ற நம்பிக்கை அந் நாட்டு மக்களிடைப் பிறந்து வருகிறது. இத் திட்டத்தினால் விவசாயிகளுக் கிடையிலும் பூரணமான திருப்தி ஏற்பட்டு விட்டது. விவசாயிகள் ஷானன் திட்டத்தால் நீர்ப்பாசன முறைகள், நிலச் சீர் திருத்தங்கள், சர்க்கரைக் கிழங்கு கிருஷி ஆகிய யாவும் மின்சார வசதியால் சீர் சிறந்து விளங்கி உலக தேசங்களின் போட்டியையும் இலகுவில் வென்று விடக் கூடுமென நம்புகின்றனர். எனவே இவ்வாறான முறைகளில் கைத் தொழிலபிவிருத்தியும் விவசாய சீர் திருத்தமும் நாளுக்கு நாள் சுதந்திர அயர்லாந்தில் பெருகி வருவதால் சிறிது காலத்திற்குள் பிரான்ஸ் தேசத்தைப் போன்று அங்கு வேலையில்லாமை அடியோடு அற்று விடுமென அரசியல் ஞானிகள் யாவரும் கருதி வருகின்றனர். முன்னாட்களில் ஆயிர மாயிரமாகப் பிழைப்பின் நிமித்தம் அமெரிக்காவுக்கு ஓடிச் சென்று கொண்டிருந்த அயர்லாந்து வாசிகள்,



இனி தமது நாட்டில் யாதொரு குறைவுமின்றி இனிது வாழ்ந்து வரக்கூடுமென்றும் சொல்லப்படுகிறது.

அயர்லாந்து மக்கள் பொதுவாக அரசியலில் பல திறப்பட்ட கருத்து வேற்றுமைகள் பூண்டிருப்பினும், கைத்தொழிலபிவிருத்தியில் யாவரும் ஒருமனப் பற்றுடையவர்களாய் ஒன்று போல் ஒத்துழைத்து வருகின்றனர். இதனைத் தவிர்த்து கல்விச் சீர்திருத்தத்தில் அந் நாடு கொண்டிருக்கும் கொள்கையும் செய்து முடித்திருக்கும் அரிய வேலைகளும் அதிசயிக்கத் தக்கது. ஐரிஷ் பாஷையான தேச பாஷை அங்கு இப்பொழுது கட்டாயப் படுத்தப்பட்டு பிரதம பாடசாலைகளில் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. மத்திய கலாசாலைகளும் அரசாங்கத்தாரால் வற்புறுத்தப்பட்டு அரசாங்க உத்தியோகஸ்தர்களை நாடுகிறவர்கள் ஐரிஷ் பாஷை கற்றவர்களாகவே யிருக்க வேண்டுமென்ற நியதிகளுண்டு பண்ணி அதன்படியே உத்தியோகங்கள் வழங்கி வருகின்றனர். சமீபத்தில் அயர்லாந்து சட்ட சபையில் வக்கீல் தொழிலி லிறங்குகிறவர்களும் ஐரிஷ் பாஷையைக் கற்றவர்களாகவே யிருக்க வேண்டுமென்ற ஓர் மசோதா கொண்டு போகப்பட்டு நிறைவேறியுள்ளது. துருக்கி தேசம் புதிய லத்தீன் எழுத்துக்களை தனது மக்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பொருட்டு நாட்டு மக்களையெல்லாம் ஒன்று போல் கலாசாலைகளுக் கனுப்பி வந்த அரிய செயலைப் பார்க்கினும், அயர்லாந்து தேசம் அழிந்து கிடந்த தனது ஐரிஷ் பாஷையைப் பல் வழிகளிலும் புதுக்கிப் பிரசாரப்படுத்தியதானது மிகவும் அற்புதமானது. அயர்லாந்து தேசத்தின் மேல்ப் பாகங்களில் அதாவது "கால்டாக்" என்னுமிடங்களில் ஐரிஷ் பாஷை அடியோடு நசித்து இருநூறு முன்னூறு வருடங்களாகி விட்டன. தவிரவும் அப்பிரதேசங்களில் வசித்து வரும் மக்கள் ஏழைத் தொழிலாளர்களும் விவசாயிகளுமே யாவர். அவர்களில் பெரும்பான்மையோரும் எழுத வாசிக்கத் தெரியாத அறிவிலிகள். அன்றியும் ஐரிஷ் பாஷையின் மேல் அவர்களுக்கு ஒருவிதமான விருப்பமேனும் உண்டாகுவதில்லை. ஏனென்றால் ஐரிஷ் பாஷையைக் கற்க முயற்சிப்பதைவிட பிரஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் ஒன்றைக் கற்றுக் கொண்டால் உலகத்தில் எங்கேயாவது சென்று பிழைப்புக்கோர் வழி தேடிக் கொள்ளக் கூடு

மென்பது அம் மக்களின் கருத்தாகும். எனவே சுதந்திர அயர்லாந்து தேச பாஷையை நாடெங்கும் பரவ வைப்பதற்கு எடுத்துக் கொண்ட சிரமம் மிகவும் அதிகம். தற்போது அரசாங்கம் செய்து வந்த விடா முயற்சியின் பயனால் பள்ளிக்கூடங்களில் ஜெர்மன் பாஷை முற்றிலும் மறைந்து விட்டது. பிரஞ்சு பாஷையும் கற்றுக் கொடுப்பாரில்லாது போய் விட்டது. ஐரிஷ் பாஷை அரசாங்கத்தால் கட்டாயப் படுத்தப்படவே, அம் மொழி இலக்கியத் துறையில் சிறந்தோங்கி வளர்வதுமன்றி விஞ்ஞானக் கலைகளிலும் இடம் பெற்று விட்டது. ஆங்கிலேயர்கள் இது கண்டு, அயர்லாந்து தேசம் அந்நிய பாஷைகளை அறவே யகற்றி தேச பாஷையை முதற் பாடமாகவும் ஆங்கிலத்தை இரண்டாம் பாடமாகவும் வைத்துப் போதிப்பதானது ஐரோப்பிய நாடுகளைப் புறக்கணித்துத் தனது நாட்டின் சொந்த மதிப்பை மட்டுமே தேடிக் கொள்வதாகுமெனக் கூறி வருகின்றனர்.

அயர்லாந்து தேசம் சுயராஜ்யப் பேற்றினால் ஒவ்வொரு நாளும் அடைந்து வரும் அபிவிருத்தியின் பலனால், ஆண்டாண்டு தோறும் ஆயிர மாயிரமாக அந்நிய நாடுகளுக்குக் குடியேறும் பொருட்டுச் சென்றுகொண்டிருந்த அயர்லாந்து வாசிகளின் தொகை மிக்கவாறும் குறைந்து விட்டது. 1925-ம் வருடம் அயர்லாந்தி லிருந்து அந்நிய நாடுகளைத் தேடிச் சென்ற மக்களின் தொகை 30,302 பேர்களாவர். சென்ற வருடத்திலோ அதாவது 1930ல் அத் தொகை 15,000-த்திற்கும் குறைந்து விட்டது. முன்னாட்களில் இவர்களின் தொகை ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 50,000-த்திலும் அதிகப்பட்டு வந்தது. வியாபாரம், நாட்டின் செல்வ நிலைமை, ஆகிய இதர துறைகளில் அந் நாடு அடைந்திருக்கும் அபிவிருத்தியைப் பற்றிய வரலாறுகள் புள்ளி விவரங்களுடன் சமீபத்தில் எமக்குக் கிடைக்காததால் இனியொரு சமயம் விரித் தெழுதலாமென்ற நம்பிக்கையின் பேரில் இக் கட்டுரை இத்துடன் முடிக்கப்பட்டு விட்டதற்காக வாசகர்கள் மன்னிப்பார்களாக.

# பத்திரிகை உலகம்.

## வியாபாரக் கல்வி

'மைசூர் எக்கனமிக் ஜெர்னல்' என்ற அரிய பத்திரிகையின் ஜனவரி வெளியீட்டில் "இந்தியாவில் வியாபாரக் கல்வி" என்பதாக ஸர், எம். விஸ்வேஸ்வரய்யா அவர்கள் வரைந்திருக்கும் ஓர் கட்டுரையின் ஓர்பகுதி வருமாறு:—

சென்ற நூற்றாண்டின் மத்தியில் ஐரோப்பிய தேசங்களில் வியாபாரக் கல்வி பல்கலைக் கழகங்களின் ஆதரவைப் பெற்ற போதிலும் இந்தியாவில் 18 வருஷங்களுக்கு முன்னால்தான் ஆதரவு பெற்ற இக் கல்லூரியும் (Sydenham College of Commerce & Economy) ஸ்தாபனமாக்கப்பட்டது. தொழிற் கல்வியும் வியாபாரக் கல்வியும் இந்த நாட்டில் வெகு காலத்திற்குப் பின்னாலேயே வந்தது. இன்னும் அவை நமது இந்தியப் பல்கலைக் கழகங்களின் பாடங்களில் குறைவான அந்தஸ்தையே பெற்று வருகின்றன. 1916-ல் 4 இன்ஜினியரிங் காலேஜ்களும் ஒரு வியாபாரக் கல்லூரியும் இருந்த, இப்பொழுது அவை 7 இன்ஜினியரிங் காலேஜ்களும் 14 வியாபாரக் கல்லூரிகளுமா யிருக்கின்றன. அவைகளில் மொத்தம் எத்தனை மாணவர்கள் கற்றுவருகிறார்க ளென்பதின் பூரண விவரம் கிடைக்காவிடினும் இந்தியா முழுமையும் அத் துறைகளில் படிப்பவர்கள் 2500-க்கு மேலிருக்கமாட்டார்க ளென்பது நிச்சயம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1924-ம் வருடம் ஏகதேசம் 100 பல்கலைக் கழகங்களும் காலேஜ்களும் 80,000 மாணவர்களுக்கு வியாபாரக் கல்வியை யூட்டி வந்தன. இந்தத் தொகை அமெரிக்காவின் கல்லூரி மாணவர்களில் பத்தி லொன்றாகும். ஜெர்மனி தேசத்திலோ 1924-25-ம் ஆண்டில் பல்கலைக் கழகங்களில் பொருளாதாரக் கல்வி பயின்று வந்த மாணவர்களின் தொகை 10,957 பேர்கள்; அதாவது அத் தேயத்துக் கல்லூரி மாணவர்களான 60,000 பேர்களில் இவர்கள் ஆறில் ஓர் பங்காவர். பிரிட்டிஷ் இந்தியாவிலோ 1927-28ல் எல்லாக் கல்லூரி மாணவர்களின் மொத்தத் தொகை 91,150. இவர்களில் வியாபாரக் கல்வி பயின்று வந்தவர்கள் 2500; அதாவது 1000-க்கு 27 பேர்கள். இந்த முடிவில் இலக்கிய பட்டங்களுக்காகக் கல்லூரிகளில் பொருளாதாரப் பாடத்தை நடு பாடமாகப் படித்துவரும் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை. ஒவ்வொரு தேசங்களிலும் கற்றுக் கொடுக்கும் கல்வி முறையும் அளவும் ஒன்றுபோ லிருப்பதில்லை. நாம் கொடுத்திருக்கும் எண்ணங்களின் தொகையும் முற்றிலும் சரியானவை யில்லை. என்றாலும் நமது நாட்டுப் பல்கலைக் கழகங்களில் வியாபாரக் கல்வியி லிருந்துவரும் தாழ்ந்த நிலைமையை விளக்குவதற்கு இவை போதுமானது.

தலைமை வகித்து நடத்தும் திறனையும் நடை முறைகளையுமே பெரிதென மதிக்கப்பட்டு வரும் இக் காலத்தில் நமது பல்கலைக் கழகங்கள் நாட்டுக் கவசியமான கைத்தொழில் வியாபாரம் இவைகளுக்குரிய சாமர்த்தியங்களையும் தலைவர்களையும் பழக்குவிப்பதற்குப் பதிலாக [illegible] வசியமான இலக்கிய வித்தியார்த்திகளை நமக் களித்துக்கொண்டேயிருக்கின்றன. நமது வியாபாரிகளில் சிலருக்குள், வியாபாரக் கலாசாலைகளுக்குப் போய்ப் படிப்பதில் ஒன்றும் விளையப் போவதில்லை யென்ற ஓர் கருத்துமிருந்து வருகிறது. நமது செல்வந்தர்களின் பிள்ளைகள் இலக்கியப் பரீட்சைகளுக்காகவே செல்லுகின்றனர். ஏனென்றால் அவர்கள் அதனால் தமது எதிர் காலத்தை நம்பி யிருக்கிறார்கள். ஆனால் சாமர்த்தியம் வாய்ந்த ஏழை மாணவர்கள் அவ்விதம் இழுக்கப்படுவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு அரசாங்கத்தின் உபகாரச் சம்பளங்களிலோ அல்லது பரீட்சை முடிவில் உத்தியோக வாக்குறுதிகளோ கிடைப்பதில்லை. இதற்கு நேர் மாறாக தொழில் வழியில் விருத்தி யடைந்த அமெரிக்காவைப் போன்ற தேசங்களில் பொது மக்கள் வியாபாரக் கல்வி பயிற்றுவிக்கும் கலாசாலைகளில் பெரிதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வழக்கறிஞர், வைத்தியர், என்ஜினீயர் ஆகிய தொழில்கள் போன்றே [illegible] தேர்ந்த வியாபாரிகள் பாங்கு மானேஜர்கள் ஆகிய தொழில்களை விரும்புகின்றனர்.

உயர்தர வியாபாரக் கல்வி ஜப்பான் தேசத்திலும் நன்கு மதிக்கப்பட்டு வருகிறது. ஜப்பான் தேசத்தில் விவசாயம் வியாபாரம் இலாகாவைச் சேர்ந்த மிர். "ஓய் ஷாஷிமா" என்பவர் 1919-ம் வருடம் ஜனவரி மாதம் என்னிடம் அறிவித்ததாவது:— இந்த நாட்டில் (ஜப்பான்) இக் காலத்தில் வியாபாரத்தைப் போன்று வேறொன்றும் மதிக்கப்படுவதில்லை. கைத்தொழில் இரண்டாவதாகும். வைத்தியம், சட்டம், இராணுவம், கப்பல் உத்தியோகம், அரசாங்க உத்தியோகம் ஆகிய யாவும் கீழ்தரமாகவே கருதப்பட்டு வருகின்றன. அரசாங்க உத்தியோகங்கள் பதவியையும் கௌரவத்தையும் அளிப்பதானாலும் தன லாபத்தைக் கொடுக்காததால், அவற்றில் மோகமே யில்லை. தற்போது எங்கள் மாணவர்கள் வியாபாரக் கல்விக்கே அதிக விலையும் மதிப்பும் கொடுத்து வருகின்றனர்."

The "Mysore EconomiJournal," Banglore.

## சமய போதனையும் சன்மார்க்க விதிகளும்

சென்ற டிசம்பர்மீ காசியில் கூடிக் கலைந்த அகில ஆசியா கல்வி மகா நாட்டில் நிறைவேறிய சன்மார்க்க விதிகளின் தீர்மானங்கள் "வெல்த் அண்ட் வெல்பேயர்" என்ற பத்திரிகையின் ஜனவரிமீ 30உ இதழில் காணப்படுவது கவனிக்கற்பாலது:—

அடியில் வரும் தீர்மானங்கள் ஆசியா மகா நாட்டில் நிறைவேறியவை.

1. நமது கல்வி முறையில் மக்களின் குணாபி விருத்தியையிட்டு அதிகமான கவனம் செலுத்த வேண்டுவது அவசியமென்று இந்த மகா நாடு அபிப்பிராயப்படுகிறது. கல்வியில் ஓர் நகரவாசியின் உயரிய குணங்கள் அமைவதற்கு ஜப்பானில் கல்வி சம்பந்தமாக அரச பெருமா



னின் கட்டளைப் புத்தகத்தில் காணப்படும் விதிகளை சில மாற்றங்களுடன் சுருக்க அமைத்துக் கொள்ளலாம். ஆசியாவின் வேத நூல்கள் எல்லாவற்றிலும் சிறந்த சன்மார்க்க விதிகளாக அவை விளங்குகின்றன.

உங்கள் பெற்றோர்களிடம் புத்திர வாத்ஸல்லியத்துடன் நடவுங்கள். உங்கள் சகோதரர்களிடமும் சகோதரிகளிடமும் அன்பு பாராட்டுங்கள். புருடர்கள் மனைவிகள் போன்று நீங்கள் பரஸ்பரம் அந்யோந்யமாயிருங்கள். நண்பர்களைப் போன்று சத்தியவந்தர்களாயிருங்கள். அடக்க ஒழுக்கங்களில் பொறுமையுடனிருங்கள். உங்கள் தர்ம சிந்தையை எல்லாவிடத்தும் பரவும்படி செய்யுங்கள். கற்பதற்கும் அறிவை வளர்ப்பதற்கும் ஆசைப்பட்டு அதனால் உங்கள் புத்தியை விசாலப்படுத்தி ஒழுக்க நிறைவைப் பூரணப்படுத்துங்கள். அத்துடன் பொது நலங்களையும் பொது ஜன அபிவிருத்திகளையும் அதிகப்படுத்துங்கள். ஜன சமூகத்திற் காதாரமளிக்கும் அரசிய லமைப்பையும் சட்ட திட்டங்களையும் கௌரவப்படுத்துங்கள். நெருக்கடியான சந்தர்ப்பங்கள் நேருமாயின், மனித சமூகத்திற்குக் குறை நேரா திருக்குமாயின், உங்கள் நாட்டி னிமித்தம் மிக்கத் தைரியத்துடன் உங்களையே அர்ப்பணஞ் செய்யுங்கள்.

இந்த மகா நாடு இக் கருத்துக்களை மனமுவந்து ஆதரிக்கின்றது மன்றி கல்விமான்கள் ஒவ்வொருவரும் அவற்றைப் பரிசீலனை செய்வதற்கு சிபார்சும் செய்கின்றது.

2. இந்த மகா நாடு இத் தர்மங்களைக் கையாளுவதற்காக அடியில் வரும் விதிகளை அனுஷ்டிக்க வேண்டுமாய் அபிப்பிராயப் படுகிறது.

(1) நமது பள்ளிக்கூடப் புத்தகங்களில் எல்லாச் சமயங்களையும் சார்ந்த பெரியோர்கள், ஞானிகள், ரிஷிகள், வீரர்கள் ஆகியவர்களின் ஜீவிய சரித்திரம் சேர்க்கப்பட வேண்டும்.

(2) அவர்களின் உருவப் படங்கள் மாணவர்களின் முன்னிலையில் வைக்கப்பட வேண்டும்.

(3) எல்லாச் சமயத்தையும் சார்ந்த பெரியோர்களின் வருடாந்த விழா கொண்டாட வேண்டும்.

(4) எல்லாக் கலாசாலைகளிலும் சமய போதம் கருதிய பாடல்களும் மந்திரங்களும் பாடவேண்டும்.

(5) ரிஷிகள், வீரர்கள் சரித்திரங்கள் நடித்துக் காண்பிக்கவேண்டும்.

(6) உண்மைத் தொண்டு செய்து மாணவர்கள் பொது நலவுணர்ச்சியை வளர்த்துவரப் படிக்க வேண்டும்.

(7) விளையாட்டுகளும் வேடிக்கைகளும் உற்சாகப் படுத்தப்பட வேண்டும்.

(8) இயற்கையோ டியைந்த மாணவர் கழகங்கள் சமீபத்திலுள்ள காடுகள் சோலைகள் நீரோடைகள் இவைகளைப் பார்ப்பதற்குச் செல்வதில் உற்சாக மளித்து வரவேண்டும்.

(9) விடுமுறை நாட்களில் மாணவர்கள் சிறு சிறு யாத்திரைகள் செல்வதற்கு உதவி யளித்துவர வேண்டும்.

(10) ஸ்கவுட் பயிற்சி யளிப்பதில் அதிகமான உற்சாகம் காண்பித்து வரவேண்டும்.

(11) தேகப் பயிற்சி கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

(12) கைப் பழக்கத்திற்கும் தொழி லபிவிருத்திக்கும் ஆதாரமான சிறு அளவில் கைப்பாடுள்ள வேலைகள் கொடுத்து வரவேண்டும்.

(13) கலாசாலைகளில் பரிசுகள் தனி மாணவனுக்கும் கூட்டு மாணவர்களுக்கும் அளித்துவர வேண்டும்.

(14) அரசாங்கத்தாரால் அங்கீகாரம் பெற்ற சிறு புத்தகங்கள் மூலம், அதிசயத்தை விளைவிக்கும் ஜனனேந்திரிய உணர்ச்சி உண்டு பண்ணாத விதத்தில், உடற் கூறு சாஸ்திரம் ஜனனேந்திரிய உறுப்பிலக்கணங்களுடன் கற்பிக்கப்பட வேண்டும்.

(15) சுத்த சன்மார்க்கம் வளர்வதற் கேதுவாய் கலாசாலைகள் யாவும் நகரங்களின் வெகு தூரத்துக் கப்பாலில்லாது ஆதிகால ஆசிரமங்கள் போன்று அமைக்கப்பட வேண்டும். கல்வி நிலயங்கள் குருகுல முறைகளைத் தழுவ வேண்டும். மாணவர்கள் சாதாரண எளிய வாழ்க்கையை அனுஷ்டித்து எதற்கும் தயாராக விருக்கவேண்டும். அவர்களின் உணவு லாகிரி யில்லாதவைகளா யிருக்கவேண்டும். அவர்கள் அதி காலையிலெழுந்து குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். அவர்கள் தங்கள் விடுதிகளில் வேலையில் பெரும்பாலானவற்றை அவர்களே செய்து முடிக்க வேண்டும். ஏழை பணக்காரர் என்ற வித்தியாச மில்லாது யாவரும் ஒன்றுபோல் எளிய உடைகளை யணிய வேண்டும். தன் னுதவியும் தன் கடமையும் வளர்வதற் கேதுவான பொறுப்புள்ள வேலைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். சுருக்கமாக எளிய வாழ்வும் உயரிய எண்ணங்களும் அவர்களது இலக்ஷியமாக விருக்கவேண்டும்.

The "Wealth & Welfare," Madras.

## வைத்தியத் தொழில்

வைத்தியத் தொழில் ஒரு நாட்டுக்கு மிகவும் நன்மையளித்து வருமாயின், அத் தொழிலில் முற்றிலும் பாண்டித்திய மாகாத வைத்தியர்கள் வைத்தியம் செய்து வருவதால் நாட்டுக்குப் பெருங் கேடு சூழ்வது மறுக்கொணாத விஷயம். அவ்வாறிருக்க இந்திய நாட்டில் பிழைப்பின் நிமித்தம் எண்ணற்றவர்கள் மக்கள் நம்பிக்கை கொள்ளும் விதத்தில் மனப் பூர்வமாக அத் துறையில் போதிய அனுபவமில்லா திருந்தும் வைத்தியர்களென்று பாசாங்கு செய்து மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதித்து வருகின்றனர். இதன் நுட்பங்களை நன்கறிந்து கல்கத்தா மருத்துவ கலாசாலைக்குத் தலைமை யாசிரியரா யிருந்து வரும் திரு. ஜே. ஸி. கோஷ் அவர்கள் ஜனவரிமீ "ஸைன்டிபிக் இந்தியன்" என்னும் பத்திரிகையில் எழுதுவதாவது.—

பிரிட்டிஷ் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டோ அல்லது உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டோ வரும் மருந்து வகைகளின்



குணக் கேடுகளைப் பற்றி ஆராய்ந் தறிவதற்காக அரசாங்கத்தார்களால் நியமிக்கப்பட் டிருக்கும் மருந்து வகைகளின் ஆராய்ச்சிக் கமிட்டி இந்த நாட்டுக்கும் வெளி நாடுகளுக்கும் வைத்தியத்தைப் பொறுத்தவரையில் மிகவும் உபயோகமானது. நாகரீக மடைந்த உலக தேசங்கள் எல்லாவற்றிலும் மிகவும் தாழ்ந்த தரத்து மருந்து வகைகளின் இறக்குமதி விஷயத்திலோ அல்லது உற்பத்தி விஷயத்திலோ அல்லது அவைகளை விற்பனை செய்வதிலோ உண்மையில் ஒருவிதமான கட்டுப்பாடுமின்றி யிருக்கும் நாடு இந்தியா ஒன்றே யாகும். இந் நாட்டில் வைத்தியத் தொழில் செய்வதற்கும் அத் தொழிலில் நிபுணர்களா யிருக்க வேண்டு மென்ற கட்டுப்பாடு மில்லை. இதனால் எய்தி யிருக்கும் பலனும் வெளிப்படை யாகும். இந்திய நாடு ஒன்றுக்கு முதவாத மருந்து வகைகளினால் நிறைந்து கிடக்கின்றது. இந் நாட்டில் வைத்தியப் பயிற்சி யில்லாத ஒருவன் வைத்தியம் செய்வதைத் தடுப்பதற்கோ அல்லது பிரயோஜனமற்ற மருந்துகளை மனம் போல் உண்டு பண்ணி நோயாளிகளுக்குக் கொடுப்பதைத் தடைபடுத்துவதற்கோ ஒருவிதமான சட்டமு மில்லை. நாகரீக தேசத்தில் ஒரு நிமிடம் கூடப் பொறுத்திருக்க முடியா தென்று சொல்லத் தகும் நிலைமை இந்தியாவில் இரண்டு காரணங்களை யிட்டு மட்டுப்படுத்தப்பட் டிருக்கிறது. ஏனென்றால் (1) ஏழைகளா யிருக்கும் மக்களில் பெரும் பகுதியினரும் சுகவீனமுற்ற போது சட்ட திட்டங்களுக்கோ அல்லது பரிசோதனைகளுக்கோ இலக்காகாத பாரம்பரையான வைத்திய சிகிச்சையே நாடுகின்றனர். (2) அவர்களைத் தடைப்படுத்த ஆரம்பித்தால் பலமான எதிர்ப்புகளும் தப்பபிப்பிராயங்களும் வெளிக் கிளம்புகின்றன. இது நிலைமையின் ஒரு புறமாகும். எனற போதிலும் இன்னொரு புறமும் இருந்து வருகிறது.

முன்னூறு வருடங்களுக்கு முன்னால் இந்தியாவில் கிழக்கிந்திய சங்கத்தினுதாவில் பிரிட்டிஷ் வர்த்தகர்களுடன் மேல் நாட்டு மருந்து வகைகளும் உள் நுழைந்ததும் இதர சாஸ்திரங்கள் பெருகி வந்தது போன்று மேல் நாட்டு வைத்திய சாஸ்திரமும் வளர்ந்தோங்கி வந்தது. ஆனால் யூனானி, ஆயுர் வேத வைத்திய முறைகள் ஒருவிதமான சட்ட திட்டங்களுக் குட்படாது அநேக இடங்களில் மூட வைத்தியர்களால் பழக்கம் செய்யப்பட்டு வரலாயிற்றெனக் கூறப்படவே யூனானி வைத்தியம் முன்னூறு வருடங்களாகவும், ஆயுர் வேதம் ஆயிரத்தி யிருநூறு வருடங்களாகவும் அரசாங்க ஆதரவு பெறாமலிருந்தன. சென்ற மூன்று நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் டாக்டர்கள் "ஆலோபதிக்," என்னும் (Allopathic) என்னும் வைத்திய முறையை அரசாங்கத்தார்களின் ஆதரவைப் பெற்று இந்தியாவில் நிலை நிறுத்தினார்கள். மேல் நாட்டு வைத்திய முறைகளில் "ஹோமியோபதிக்," (Homeopathic) என்னும் வேறொரு முறையுமுளது. இம் முறையானது அரசாங்க ஆதரவை அவ்வளவாய்ப் பெறவில்லை. ஆலோபதிக் முறையின் மருந்துகளும் வைத்தியர்களும் அரசாங்கத்தின் விசேஷ உதவியைப் பெற்று வந்ததால் ஆயுர்வேத வைத்தியர்கள், யூனானி வைத்தியர்கள், ஹோமியோபதிக் டாக்டர்கள், வைத்திய சன்னியாசிகள் ஆகியவர்கள் வைத்திய கலாசாலைகளில் படித்துப் பட்டங்கள் பெறாததால் மூட வைத்தியர்களென்றே கருதப்படலாயினர். இந்த விதமான மூட வைத்தியர்கள் எல்லா நாடுகளிலு மிருக்கின்றனர். ஆனால் நாகரீகமடைந் திருக்கும் இக் காலங்களில் மூட வைத்தியர்கள் பரிசோதனை செய்யப்படாது

உயரிய டாக்டர்கள் என்ற நிலைமையி லிருந்து வருவது வருந்தத் தக்கது. இவ் விஷயத்தில் கட்டுப்பா டமைப்பதும் பெரும் பொறுப்பாகும். என்றாலும் முதலில் சட்ட திட்டங்கள் உண்டு பண்ணி கலாசாலைகள் நிறுவப் பட வேண்டும். அவ்விதம் செய்யப்படுமாயின் சட்டங்களை மீறி நடக்கிறவர்களைத் தண்டனைகளுக்குள்ளாக்க முடியும். தற்போது ஆலோபதிக் முறையையே யன்றி இதர வைத்திய முறைகளைக் கற்றுக் கொடுப்பதற்குக் கலாசாலைகள் ஒன்றுமே யில்லை. எனவே அவர்கள் செய்து வரும் வைத்தியத்தைத் தடுக்க முதன் முதலில் சட்டங்கள் இயற்றுவதும் தகாது தான்.

The "Scientific Indian," Calcutta.

## லண்டன் பத்திரிகைகளின் செலவு

லண்டன் நகரத்திலிருந்து வெளி வரும் தினசரி வாரப் பத்திரிகைகளின் மொத்த வெளியீடுகளைக் குறித்து "ஒறல்ட்ஸ் பிரஸ் நியூஸ்" என்னும் பத்திரிகை அறிவிப்பதாவது:—

| | | | |
|---|---|---|---|
| டெய்லி எக்ஸ்பிரஸ் | 17,03,000 | அக்டோபர் | 1930 |
| டெய்லி மெயில் | 18 72,418 | ஜூன் | 1930 |
| நியூஸ் கிராணிக்கிள் | 14,00,0 0 | நவம்பர் | 1930 |
| தி. டைம்ஸ் | 1,92,342 | நவம்பர் | 1930 |
| டெய்லி ஹெரால்ட் | 11,20,000 | நவம்பர் | 1930 |
| டெய்லி மிரர் | 10,71,200 | 1-வருஷத்திற்கு முன்னால் | |
| மார்னிங் போஸ்ட் | 1,45,101 | நவம்பர் | 1930 |
| தி. ஸ்டார் | 5,86,308 | ஜூன் | 1930 |
| ஈவனிங் நியூஸ் | 7,83,470 | ஜூலை | 1930 |
| ஈவனிங் ஸ்டாண்டர்ட் | 4,07,000 | ஜூலை | 1930 |
| நியூஸ் ஆப். தி. ஒரல்ட் | 30,00,000 | ............................ | |
| அப்ஸர்வர் | 2,02,301 | ஜூன் | 1930 |
| பீப்பிள் | 25,21,000 | டிசம்பர் | 1930 |
| ஸண்டே டெஸ்பாச் | 12,27,685 | ஜூன் | 1930 |
| ஸண்டே எக்ஸ்பிரஸ் | 10,16.181 | டிசம்பர் | 1929 |
| ஸண்டே நியூஸ் | 7,50,000 | ............................ | |
| ஸண்டே பிக்டோரியல் | 18,82,625 | செப்டம்பர் | 1930 |

The "World's Press News," London.

## இந்தியாவின் பெண் மக்கள்

ஸ்ரீமதி. ஷா நவாஸ் அவர்கள் மேல் நாட்டுப் பெண் மக்களைப் பார்க்கினும் இந்தியப் பெண்கள் தமது குடும்ப வாழ்வில் அடைந்து வரும் பெருமையைப் பற்றி லாகூரிலிருந்து வெளிவரும் "விடோஸ் காஸ்" என்னும் பத்திரிகையில் புகழ்ந்து எழுதுவதாவது:—

கிழக்கு இன்னும் கிழக்காகவே யிருந்துகொண் டிருக்கிறது. மேற்கு மேற்காகத்தா னிருக்கிறது. ஆனால் யௌவன இந்தியாவின் பிறப்பில் பல மாற்றங்கள் சம்பவித்து விட்டன. இன்றும் நமது இந்தியப் பெண் மணிகளின் நிலைமை சில அம்சங்களில் மேல் நாட்டுப் பெண்களை விடச் சிறந்துதான் விளங்குகிறது.



இந் நிலை இவ்வாறிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் இந்தியாவின் பெண் மக்கள் இந்து தேச சரித்திரத்தில் எப்பொழுதுமே மிக முக்கியமான பங்கெடுத்து வந்திருக்கின்றனர். பொது ஜன விஷயங்களில் அவர்களது முயற்சிகள் எப்பொழுதும் பிரதானமாயிரா விட்டாலும் அவர்களது செல்வாக்குக்கு யாதொரு குறைவும் நேரிட்டது கிடையாது.

எக் காலத்திலும் அவர்கள் வீடுகளில் தர்மம் வழுவாத தலைவிகளாகவே யிருந்தனர். "மணவாளன் வீட்டில் அன்புடையவனா யிருந்தால் மனையாட்டி அரசியாகத்தா னிருப்பாள்" என்பது நமது பழமொழிகளில் ஒன்று. எனவே புருடர்கள் எப்பொழுதும் குடும்ப காரியங்களைத் தாராளமாகத் தங்கள் மனைவிகளோடு கலந்து அவர்களின் அபிப்பிராயங்களை நாடி வந்தனர். இக் காலத்திலும் மேனாட்டுப் பெண்களால் அநேகருக்குத் தங்கள் புருடர்களின் வருமானம் தெரியாதெனச் சொல்லக் கேட்டிருக்கிறேன். நமது பெண்களைப் பொறுத்த மட்டில் அத்தகைய சந்தேகம் வேண்டுவ தில்லை. ஏனெனில் நமது வீடுகளில் மனைவிமார்களே வீட்டிலுள்ள வரவு செலவு கணக்குகளுக்கு அதிகாரிகளாக விருந்து வருகின்றனர். அது அவர்களை வீண் செலவு செய்யா திருக்கும்படி கற்பித்தும் வருகிறது. புதிய செலவுகளுக்கு வழி யில்லை யெனத் தங்கள் புருடர்கள் நினைத்து விடுவார்களோ யெனவும் அவர்கள் எண்ணுவதில்லை. அவளே அச் செலவை முதலில் அறிவதற்கானவள். நமது வாலிபர்களிற் சிலர் மேனாட்டு முறைகளைப் பின் பற்றி, மனைவிமார்கள் வீட்டுப் பொக்கிஷங்களுக்குப் பூரண பொறுப்புதாரிகளா யிருக்கும் இக் கருத்தை வெறுத்து வருவார்களாயின் வரவு செலவு சம்பந்தமாய் அதிகமான கஷ்டங்கள் குடும்பங்களில் நிகழ்வதற் கேதுவாகும்.

இந்தியாவிலுள்ள குடும்ப வாழ்வின் குறைகளைப் பற்றி இங்கிலாந்து தேசத்தார்களுக்கு அதிகமாய்த் தெரியவே தெரியாது. நமது நாட்டுக் குடும்பங்களில் ஒவ்வொருவருடைய சுக துக்கங்களையும் ஒவ்வொருவரும் பங்கெடுத்து வருகின்றனர். சில வேளைகளில் ஐநூறு பேர்களைக் கொண்ட பெரிய குடும்பங்களிலும் ஒற்றுமையும் சந்தோஷமும் நிலவி வரக் காண்கிறோம். குடும்பத்தைப் பொறுத்த முக்கியமான அபிப்பிராயங்கள் தாராளமாக வெளியிடப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் வருகின்றன.

The "Widow's Cause," Lahore.

## இந்தியாவின் சிசு மரணம்

"இந்தியன் லேடீஸ் மாகஸின்" என்னும் பத்திரிகையின் சென்ற டிசம்பர்மீ விசேஷ இதழில் "இந்தியாவில் சிசு மரணம்" என்பது பற்றி டாக்டர் "பாலிகா" என்பவர் எழுதுவதாவது:—

சரீர சுகாதாரத்தின் முக்கியமான விதிகளைக் குறித்தும் சுகாதார வாசஸ்தானங்கள், அதன் சுற்றுப் புறங்கள், சுத்தமான தண்ணீர், சுகமான ஆகாரம், கர்ப்பிணிகளும் குழந்தைகளும் கவனிக்கப்பட வேண்டும் விதிகள் ஆகியவற்றைக் குறித்தும் தனது சகோதர சகோதரிகளுக்கு எடுத்தூட்ட வேண்டியது கற்றவர்கள் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். அத்துடன் வியாதிகள் தடுக்கப்படக் கூடியவை யென்றும் நமது நாட்டில் அளவுக்கதிகம் காரணமாகி வரும் சிசுக்களின் தொகையைக் கூடியவாறு குறைப்பதற்கு ஏற்ற வழிகளையும் தேடிக் கொள்ள வேண்டி

மென்றும் பொது மக்களின் மனதில் நன்றாய்ப் பதியும் வண்ணம் அறிவுறுத்த வேண்டும். இந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்குத் தீவிரமும் திடமும் கட்டுப்பாடு மமைந்த பிரசார வேலையே மிகவும் பிரதானமானது. நம்மிடையில் கவனிப்பாரின்றி போதுமான ஆகாரமில்லாது தவிக்கும் ஓர் குழந்தையைக் காணும் போது அதன் தோற்றம் மகா இழிவைத் தரக் கூடியதன்றோ, வென என்று நாம் நினைக்கிறோமோ அனறுதான் நாம் கொண்ட கருத்தை நிறைவேற்றுவதற்கு அருகில் வந்தவர்களாவோம். நமது சென்னை மாகாணத்தில் மட்டும் வருடா வருடம் பெரும்பான்மையும் சுகப்படுத்தக்கூடும் வியாதிகளான வைசூரி, வயிற்றுழச்சல், மலேரியா, குடல் வீக்கம் ஆகியவற்றால் 10 இலக்ஷம் பேர்களும் 3 இலக்ஷம் சிசுக்களும் இறந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். இத் தொகைக்கு மூன்று மடங்குக்கு மேலும் ஏகதேசம் நான்கு மடங்குக்குக் கீழுமுள்ள தொகையினர் மிகவும் பலவீன முள்ளவர்கள். தங்கள் குடும்பங்களையோ அல்லது தன்னையோ பாதுகாத்து வருவதற்கு முடியாதவர்களாய்ப் பூமிக்கே பாரமாகயிருந்து வருகின்றனர். இதோ சில புள்ளி விவரங்கள் காணப்படுகின்றன. ஐரோப்பாவில் ஏகதேசம் எல்லாத் தேசங்களிலும் சிசுக்களின் மரணம் 1000-க்கு நூற்றிலும் கீழாகவே சம்பவித்து வருகிறது.

சென்னை மாகாணத்தில் சிசு மரணம் 1000-க்கு 200 ஆக யிருக்கின்றது. வருடந்தோறும் ஒரு வயதிற்குக் கீழ்ப்பட்ட 3,00,000 குழந்தைகள் இறந்து வருகின்றன. இந்தத் தொகை இந்தியாவின் இதர பாகங்களை விட மிகக் குறைவாகவே யிருக்கின்றது.

ஐம்பது வருடங்களுக்கு முன்னால் கல்கத்தாவில் சிசு மரணத்தின் தொகை 1000-க்கு 600 ஆக யிருந்தது. இப்பொழுதும் கூட அங்கு 1000-க்கு 260 ஆக யிருந்து வருகிறது.

மத்திய மாகாணங்களில் மரணமானதின் தொகை 1929ல் 1000-க்கு 240. ஒரு வயது ஆயிராத குழந்தைகளின் மரணம் அவ் வருடத்தில் 1,47,000. மத்திய மாகாணங்களிலேயே சிசு மரணங்களின் தொகை வேறு எந்த மாகாணங்களி லிருந்தும் அதிகப்படியாக யிருந்து வருவதெனக் கூறப்படுவதாகும்.

இந்த மாகாணத்திலேதான் குழந்தை பிறந்த முதல் வருடத்தில் 100-க்கு 24 வீதம் இறந்து வருகின்றன. இங்கிலாந்து தேசத்திலோ 100-க்கு 7 வீதம் இருந்து வருகின்றன.

இங்கிலாந்தில் மக்கட் பேறளிக்கும் தாய்மார்களின் மரணம் சென்ற பதினைந்து இருபது வருடங்களில் 1000-க்கு 4 வீதமே சம்பவித் திருக்கின்றன. இத்தாலி தேசத்திலோ 1000-க்கு 2 வீதமே யிருந்ததாகத் தெரிகிறது.

இந்தியாவின் தொகையோ 1000-க்கு 25 முதல் 30 வரை யிருந்து வருகிறது. மனித சமூகத்தினிடமும் முக்கியமாகக் குழந்தைகள் பேரிலும் பேரன்பு காட்டி வருவதில் இந்தியர்களுக்கு வேறு எந்த நாட்டினர்களும் இணையாக மாட்டார்கள். அவ்வித மிருந்தும் இவ்வளவு பயங்கரமான மரணங்கள் நம்மிடையில் சம்பவித்து வருவதற்கு நாம் ஏன் இடங்கொடுத்து வர வேண்டும்?

The "Indian Ladies Magazine," Cannanore.

---

# ஆசிரியர் குறிப்புகள்.

## காந்தி—இர்வின் உடன்படிக்கை

இந்தியத் தலைவர்களும் ஆங்கில இராஜ தந்திரிகளும் எதிர் பார்த்த வண்ணம் காந்தி—இர்வின் உடன்படிக்கை நிறைவேறி ஒரு வாராகச் சில விஷயங்கள் அமுலுக்கும வந்துவிட்டது சமாதானத்தைப்பற்றித் தீவிர வாதிகளுக்குச் சிறிதும் பிடித்தமில்லை யென்றாலும் மகாத்மாவின் பிடிவாதத்தாலும்—தேசத்தார் தம் கஷ்ட நிலைமையாலுமே இவ்விதமாகச் சமாதானத்திற் கிணங்க நேரிட்ட தென்பதை யறியலாம். இதுவுமன்றி இந்தியரின் நேர்மையும், விட்டுக் கொடுக்கும் தயாளத் தன்மையும், பெருங் குற்றங்களைக்கூட மன்னிக்கும் சுபாவத்தையும் உலகமறியச் செய்ய இவ் வொப்பந்தத்தால் முடிந்த தென்னில் அதுவும் ஓர் சிலாக்கியமே. சர்வ தேசங்களின் அனுதாபம் பெறுவது இந்தியாவுக்கு மிகு தியும் நன்மை பயப்பதாகு மென்பதை அறிந்த மகாத்மா காந்தி யடிகள், சந்தர்ப்பத்தைக் குலைத்துவிடக் கூடாதென, தாம் முன்னர் போலீஸாரின் அக்கிரமச் செயல்களை விசாரிக்க வேண்டிய தென அறிவித்திருந்ததைக் கூடக் கட்டாயப்படுத்தாது, எப்படியும் இரு பெரும் தேசங்களும் நேச பான்மையுடன் வாழ இர்வின் பிரபுவுடன் கூடி இணைத்து வைத்தது போற்றக்கூடியதென்றே அறிஞரானோர் கருதுகின்றனர். இவ் வொப்பந்தத்தால், கடற்கரை யோரமாக வுள்ளோர் உப்பெடுத்துச் சொந்தத்திற்கு உபயோகிக்கும் உரிமையும், ராஜீய நோக்கமில்லாது மறியல் செய்து கொள்ள உரிமையும், ராஜீயக் கைதிகளில் பலாத்காரமற்றவர்களாயுள்ளோரை விடுதலை செய்யும் உரிமையும், பறிமுதலான சொத்துக்களைக் கொடுக்கும் உரிமையும், அவசரச் சட்டங்க ளனைத்தையும் வாபஸ் வாங்கிக்கொண்ட உரிமைகளையும் பெற்று, இரண்டாவது சர்வகட்சி மகா நாட்டில் தேசீய வாதிகள் கலந்து கொண்டு லண்டன் மகா நாட்டில் நிகழ்ந்த விஷயங்களைப் பற்றிப் பரிசீலனை செய்வதென்பது சுருக்கமாகும். 2-ம் சர்வகக்ஷி மகா நாட்டில், லண்டன் மகா நாட்டில் நடைபெற்றவைகளைப் பரிசீலனை செய்யும்போது வேறு திட்டம் வருவதையும் ஆலோசிக்கலா மெனவும் குறிப்பிடப்பட் டுள்ளதினால் பூரண சுயராஜ்யத் திட்டமும், குடியேற்ற நாட்டந்தஸ்தும் வருமெனவே தெரிகின்றது.

எப்படியும் ஒருவர்க் கொருவர் மனம் விட்டுப் பேசச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த-சமாதானத்திற் கிணங்கிய இந்திய மந்திரியாரையும்-லார்டு இர்வினையும் மதிக்கவே செய்கின்றோம். நீண்ட காலமாக எதிர் பார்த்திருந்த இந்தச் சர்வ கட்சி மகா நாடு கன்சர்வேடிவ் கட்சியினர் மன மாற்றத்தை நீக்கி இரு நாடும் க்ஷேமமுற, நன்முறையில் நடைபெற்று சித்தி பெறவேண்டுமென விரும்புகின்றோம்.

### சர். வி. பி. ராயும் தென்னாடும்

சமீபத்திலே திருச்சினாப்பள்ளியில் நடை பெற்ற கதர் கண்காட்சி விழாவின் அமைச்சராக வந்த வட நாட்டுத் தலைவர்—சமூக சீர்திருத்தப் பெரியார்—காங்கிரஸ் ஊழியர்—கதர் தொண்டர்—தேசபக்த சிகாமணி சர். வி. பி. ராய் அவர்கள் திருச்சியிலும், மதுரையிலும், புதுக்கோட்டையிலும் தென்னாட்டாருக்கு உபதேசித்த அறவுரைகளைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடித் தொழுகவேண்டிய தவஸ்யமாகும்.

முரட்டுத்தனமான தேசாபிமானத்தால், பெருந் தீமையே விளையுமென அவர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆயுதமற்ற—உதவியற்ற—படிப்பற்ற இந்தியாவின் நிலைமைக்கு சத்தியாக்கிரகம் போன்ற ஆயுதம் பிறிதொன்றில்லை யென்பதை நம்மனோர் அறியும் வண்ணம் விளக்கி யுரைத்துள்ளது சிலாகிக்கத் தக்கதாகவே யிருக்கின்றது.

இந்து முஸ்லீம் போராட்டங்களும், பிராமணர் அல்லாதார் பிணக்குகளும், தீண்டாதார்-உயர்ந்தோர் என்ற பேதமும் தொலைந்தாலன்றி உண்மையான சுயராஜ்யத்திற்கு வழியில்லை யென்பதும் இவர் தம் வாக்காகும். இதனை உய்த்துணர்ந்து தாராளமாக விட்டுக் கொடுத்து சகோதரர்களாக வாழ வேண்டியதைப் பற்றி மிகவும் அழுத்தந் திருத்தமாகப் பகர்ந்துள்ளதை ஏற்று நடப்போமாயின், ஒற்றுமையும் சகோதரவாற்சல்யமும் நாட்டில் குடிகொண்டு சுயராஜ்யம் பெற்றவர்களாவோம் என்பதை நம்மனோர் அறியவேண்டும். வீராவேசங் கொண்டு சமூகச் சச்சரவுகளை விலை கொடுத்து வாங்கி என்றும் நீங்காத துன்பத்தை அறியாமையாலும் மூடக் கொள்கைகளாலும் விளைவித்து வருகிறார்கள். சமத்வம் கொடுப்பதில் என்ன குறைந்து விடுகின்றது? மதம் மாறும் தொல்லை ஏன் நிகழ்கின்றன? மனிதர்கள் விருப்பம் என்ன? என்பதொன்றையும் கவனியாது, உடன்பிறந்த சோதரர்களையொத்த தன் தேசத்தார்களைப் பகைத்துக் கொள்ளவே துணிகின்றனர். தன்னாட்டாருக்கு மனப் பூரணமான சுதந்திரம் கொடுக்காதபோது, பிற நாட்டினின்றும் விரும்புவது அழகா? முறையா என்பதை



சிந்திக்க வேண்டும். தேசீயப் புகழ் படைக்கச் சிறை வாழ்வு வாழ்ந்தால் மட்டும் போதாது. முறையும் நியாயமும் எங்கும் எப்பொழுதும் அனுசரித்து, தேசத்தாரின் மனதில் தோன்றும் மாற்றத்தை நீக்க வேண்டியது தேசாபிமானிகளின் கடமையாகும். திரு. ராய் அவர்களின் கருத்தை தேசீய வாதிகளும் மாணவர்களும் பின் பற்றி சமூகப் பிணக்குகளை யொழித்து சகோதரராக தேச விடுதலையில் பிரவேசிப்பதே இந்தியாவின் விடுதலைக்கு உழைத்ததாகு மென்பதை அறியவேண்டுகின்றோம்.

### சர்க்காரின் தோல்விகள்

நாளுக்கு நாள் இந்திய சர்க்காருக்குப் பல விடங்களில் தோல்வி பெருகி வருகின்றது. தேசீய வாதிகள் மிகக் குறைவான மத்திய சட்ட சபையிலும் பல மாகாணச் சட்ட சபையிலும் இன்று இந்நிலைமை மிகுந்து வருவது கண்டு, நியாயத்தைக் கடைப்பிடிக்கும் சர்க்காரானால் திருந்திக்கொள்ளும். அவ்விதம் இந்திய சர்க்காரின் ஜாதகத்தி லில்லாக் குறையினாலும், துராலோசனைக் காரர்களின் கூட்டுறவினாலும், இந்தியாவின் துரதிர்ஷ்டத்தினாலும், பிற காரணங்களினாலும் எதிர்பார்க்க முடியாம லிருந்து வருகின்றதை வருத்தத்துடன் கவனித்துவர வேண்டியிருக்கிறது. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் எனச் சாதிக்கும் இயல்பி லிருந்துவரும் சர்க்காரின் தன்மையால் மிதவாதிகளும் கசப்படைந்து விட்டனர். இவர்களின் பலத்தாலும் ஒரு சில முஸ்லீம் தலைவர்களின் ஆதரவினாலுமே நிர்வாகத்தைச் சமாளித்துக் கொண்டுவந்த அரசாங்கம், இவர்களின் ஆதரவையும் பெற முடியாது தோல்விக்கு மேல் தோல்வி பெற்று வருகிறது. இனி சர்க்கார், எதேச்சாதிகார ஆயுதத்தையே பிரயோகித்து அரசாங்கத்தை நடத்திச் செல்லவேண்டும். பொது ஜனங்களின் எண்ணத்தை மதியாது, தலைவர்களின் அறிவிப்புகளையும் யோசனைகளையும் உல்லங்கனஞ் செய்து, எதேச்சாதிகாரத்தையே துணையாகக் கொண்ட எந்த அரசாங்கமும் நீடித்து நின்றதில்லை யென்பதை அறியாதாரிலர். காலத்தின் வேகத்தைக் கண்டு நாட்டினரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியதே சர்க்காரின் முதல் வேலையா யிருக்க வேண்டியதிருக்க, அதனை மறந்து மக்களின் மனம் மாறுபடவும் தலைவர்களின் சிந்தை நோகவும் நடப்பது தகுதியற்றதாகும். இதனை அறிந்து செயலிற் காட்ட இந்திய சர்க்காருக்குத் துணிவுண்டோ என வினவுகின்றோம்?

### இந்தியச் சர்க்காரின் நிர்வாக இயல்பு

அரசாங்கமானது சாதாரணமாக வியாபாரப் பாங்குகளை யுடையதாயும் பிரதானமாக தயாளமும் தந்திரமும் பெற்றதாயுமே யிருந்தாலன்றி வருடந்தோறும் தோன்றிவரும் பேராபத்துக்களினின்றும் தப்பு

வது அரிதாகும். வியாபாரத்தில் ஓர் வருடம் நஷ்டமுற்றாலும் பிறிதோர் வருடம் இலாபங் கிடைக்குமென ஆசை கொண்டு ஏதோ சிலர் பிரவேசிக்கின்றனர். பெரும்பாலோர் நஷ்ட முற்றபோதே வியாபாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடுகின்றனர். அரசாங்கத்தைப் பார்க்கிலும் அனேக விதத்தில் வியாபாரம் சிலாக்கியமானதே. கண்ணுங் கருத்துமாக விருந்துவர வேண்டிய அரசாங்கம், வருடந்தோறும் பெருவாரியாக வரவுக்கு மிஞ்சிய செலவு செய்தால்தான், பட்டிருக்கும் சடன் தொகையைக் கட்டச் சாத்தியமாகாமலே போய்விடலாம். முடிவில் ஏழை மக்கள்தான் இலக்காகின்றனர். தற்போதைய நிலைமையில் இந்தியரின் வருமானத்தைப் பற்றியோ எண்ணினோமானால், வருந்தாதிருக்க முடியாது. இந் நிலைமையில் வரியின் பழுவு குறைவதற்குப் பதிலாக அதிகப்படுத்த யோசிக்கப்பட்டு வருகின்றது. மேலும் வரியை இந்தியர் தலையில் சுமத்தப்பட்டால் ஏழை இந்தியர் மிகவும் தத்தளிக்கவே நேருமென்பதை அறிவுகொளுத்தக் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றோம். அரசாங்கச் செலவைக் குறைக்க யோசிப்பதே முறையும் நியாயமுமாகும். இந்திய அரசாங்கத்தின் போக்கையறியும் ஒருவர், இவ்விதம் செலவினங்களைக் குறைப்பதை எதிர் பார்ப்பது அசாத்தியமாகும். ஏழை இந்தியரின் துன்பம் இன்னும் எம்மட்டோ!

## அமெரிக்கரும் மகாத்மா காந்தியும்

அமெரிக்கா செல்வத்திலும், கைத் தொழிலிலும், மற்ற நாகரீக நிர்மாணத்திலும் இன்று உலகிலேயே தலைசிறந்த நாடாக இருந்து வருவதை யறிந்ததே. இப்பொழுது அவர்களுக்கு அறிவுப் பசியே மிகுந்துள்ளது. மற்ற குறைவுகள் அவர்களிடத்தி னின்றும் அநேகமாக ஒழிந்து விட்டதினால், அமெரிக்கர் கூட்டங் கூட்டமாயும் தன்னந் தனியேயும் அறிவு ஆனந்தமாதிய வடையப் பெரும் பிரயாசையெடுத்து வருகின்றனர். அவர்களின் இந்தப் பேராசையை மதிக்காதிருக்க முடியாது.

செல்வத் திமிராலும், கல்விச் செருக்காலும், நிற ஆணவத்தாலும் ஓர் மனிதன் அறிவுடையவனாக மாட்டானென்பது அமெரிக்கர் விஷயத்தில் நன்கு அரியக் கிடக்கும் உதாரணமாகும். எங்கெங்கு எவ்வெத் தேசத்தில் அறிஞர்களுண்டோ அங்கெல்லாம் அவர்கள் சென்று அறிஞர்களிடம் அளவளாவி வருகின்றனர்.

இற்றை நாள் கீழ் திசை ஞானியாகிய மகாத்மா காந்தி யடிகளைக் காணவும் தெரிசிக்கவுமாக, இந்தியா வந்துள்ள அமெரிக்க ஆண் பெண் இருபாலாரின் தொகை நூற்றுக் கணக்காகும். அவர்களின் ஆவல் பரிசுத்தமானதினால், மகாத்மாவின் தெரிசனம் கிடைக்கப் பெற்ற



வர்களாகி, இந்தியாவை முன்னிலும் பன்மடங்கு மதிக்கும் இயல்பினராக விருக்கின்றனர். இந்தியா வந்துள்ள அமெரிக்கரின் அபிப்பிராயம், இந்தியாவைப் பற்றிய விஷயத்தில் மிகவும் சிலாக்கியமாகவே யிருக்கின்றது; ஏகோபித்த அபிப்பிராயமாகவே இந்திய விடுதலை விஷயத்தில் அவர்களால் அறிவிக்கப்படுகிறது. ஆங்கிலேயரிடமிருந்து பிறந்த இந்த ஆங்கில சமூகத்தில் தோன்றிய அமெரிக்கர்களின் பூரணமான அனுதாபம் இந்தியாவுக்குச் சிலாக்கியந் தருவதாக.

## பகவத் சிங்கர்களின் பலி

நாட்டின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யாத அரசாங்கத்தைப் பற்றி என்ன சொல்வது? எதேச்சாதிகாரமே உருக் கொண்ட இந்திய அரசாங்கம் சமய சந்தர்ப்பத்திலும் தனது அதிகார ஆணவத்தையே காட்டி இந்திய ஜனங்களின் விருப்பத்தைக் குலைத்துவிட்டதென்பதை யறிய வருந்தவே நேரிடுகின்றது.

லாகூர் சதிவழக்கில் சம்பந்தப்பட்டவர்களில் மரண தண்டனை விதிக்கப் பெற்ற வாலிப வீரர்கள் திருவாளர்களான பகவத் சிங், ராஜகுரு, சுகதேவ் மூவரின் தூக்கு தண்டனையை நீக்கி விடும்படி எத்தனையோ உபாயங்களில் முயன்றும், முடிவில் அரசாங்கத்தின் பிடிவாதமே நிறைவேறியது.

சென்ற 23உ இரவு 7 மணிக்கு லாகூர் சிறையில் இவர்களைத் தூக்கிலிடப் பட்டதாம். இவர்களது சவங்களைக் கூட அரசாங்கத்தார் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்காது பொசுக்கிச் சாம்பலை ராவி நதியில் கரைத்து விட்டார்களாம். பிரமாண்டமான இந்திய அரசாங்கத்தின் இச் செயல்களைக் கண்டிக்காத இந்தியரொருவருமில்லை. ஜனங்களின் விருப்பத்தை நிறைவேற்றாது போயினதொரு பக்கமிருக்க, இரவுக்கிரவே விஷயங்களனைத்தையும் முடிவு செய்து விட்டது மிகவும் கேவலத்தையே காட்டுவதா யிருக்கின்றது அரசாங்கத்தின் தரித்திர புத்தியை இவர்களிடம் இவ்விதமாகக் காட்டியதை ஏற்பார் யாருமிலர். எவ்வாறாயினும் என்றுமில்லாப் புது வழக்கமாக இரவில் தூக்கிலிட்டது வெறுப்புக்குரிய செயலேயாகும். ஜனங்களின் உள்ளக் கிடக்கையை அறிந்த இர்வின் பிரபுவின் ஆட்சியில் இவ்விதம் விரும்பத்தகாத செயல் நடை பெற்றது ஓர் பெருங் கலங்கமாகும்.

திரு. பகவத் சிங் முதலியோர் மீது காட்டியுள்ள குற்றத்தை தேசத்தார் ஒப்புக் கொள்ள வில்லை. அரசாங்கம் எப்படியோ இவர்களை நடத்தியது. இத்தனையும் இந்தியாவின் விடுதலைக்காகவே அனுபவித்து வந்த இவர்களின் தீரத்தையும் வீரத்தையும் மதித்து சர்க்கார் மன்னித்திருக்க வேண்டும். அதுவே வீரர்களை மதிக்கும் புத்தியுடைய சர்க்காருக்குப் பொருத்தம்.

சைமன் கூட்டத்தார் வருஞ் சமயம் பகிஷ்கார வியக்கத்தில் சென்ற, காலஞ் சென்ற திரு. லாலா லஜபதிராய் அவர்களையும் பிற சத்யாக்கிரகிகளையும் பொது ஜனங்களையும் போலீஸார் நையப்புடைத்ததின் காரணமாக, நம் லஜபதி அவர்கள் சின்னாளில் காலஞ் சென்ற விஷயம் அறிந்ததே யாகும். போலீஸாரின் அடிகளால் தலைவர் லஜபதிராய் மாண்டுவிட, எவராலோ சாண்டர்ஸ் என்னும் டிப்டி சூப்பிரண்டெண்டெண்டையும் ஹெட் கான்ஸ்டேபிள் ஒருவரையும் சுட்டுக் கொல்லப்பட்டது. இக் குற்றம்தான் மரண தண்டனை யடைந்த திரு பகவத் சிங்காகியோரின் மேல் சுமத்தப்பட்டிருக்கிறது. இதுவன்றி புரட்சிக் கூட்டத் தலைவராக விருந்ததாகவும் விசாரணையில் வெளியிடப் பட்டுள்ளது.

திரு. பகவத் சிங் வாலிபராகும். இவரின் வீரமும் தீரமும் புரட்சி வழி பற்றிய தென்றாலும், இந்தியரனைவரின் கவனத்தையும் கவர்ந்துவிடக் கூடியதா யமைந்து விட்டது. இந்தியா சட்ட சபையில் யாருக்கும் தீமை விளைவிக்கும் கருத்துடனன்றி அரசாங்கத்திற்கு எச்சரிக்கை செய்வான் வேண்டி வெடிகுண் டெறிந்து, தனது குற்றத்தை சவிஸ்தாரமாக ஒப்புக் கொண்டு ஸ்டேட் மெண்ட் கொடுத்தது முதல் இவரின் ஞாபகம் இந்தியரின் மனதில் தனியிடம் பெற்று விட்டது. தேசத்திற்காகத் தனது உயிரை அர்ப்பணம் செய்த வீரரை— புரட்சி யியக்கத்தில் சிறந்தவரா யிருந்த வாலிபரை இந்தியர்கள் இவ்விதம் நேசித்தது ஆச்சரியமல்ல.

அரசாங்கம் பழிக்குப் பழி யென்ற முறையில் பொது ஜனங்களின் விருப்பத்தை மதிக்காது சட்டத்தை நிலை நாட்டி விட்டது. பகவத் சிங்காகியோரை அரசாங்கமானது அவஸ்யம் மன்னித்து தீவாந்திர சிக்ஷையாக மாற்றிவிடு மெனவே, இந்தியரனைவரும் கடைசி வினாடியிலும் நம்பி வந்தார்கள். மகாத்மா முதல் சத்யாக்கிரகத் தலைவர்களும் மற்றோரும் இவ்வித அபிப்பிராயமே கொண்டவர்களா யிருந்தாரென்றால், லார்ட் இர்வினிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்க வேண்டு மென்பதைச் சொல்வது அசாத்தியமாகும்.

நாளை மறு நாள் கராச்சியில் காங்கிரஸ் கூடப் போகின்றது; தலைவர்க ளெல்லாம் பிரயாணஞ் செய்துகொண் டிருக்கின்றார்கள். இவ்வித நிலைமையில் வழியிலும், வண்டியிலும் பகவத் சிங்காகியோரின் மரண தண்டனை நிறைவேறி விட்ட தென்னும் பேரிடிக் கொப்பான செய்தி கேட்டுத் திடுக்கிட்டுவிடாதா ரில்லை. இந்தியர்களின் நம்பிக்கை தொலைந்த தெனவே தலைவர்கள் கருதி, சர்க்காரின் பிடிவாதத்தைக் கண்டித்து மிருகத்தனமான முறைக்கு வருந்தி, கராச்சியில்

நடக்கேறப் போகும் காங்கிரஸில் இது பற்றிப் பிளவுண்டாக்கச் செய்த சதிச் செயலெனவே எண்ணி தேச மக்களுக்கு இந் நெருக்கடியான சமயத்தில் புத்திசாலிகளாக நடந்து கொள்ள அறிவித்துயுள்ளார்கள்.

வீரர்கள் மாண்டு விட்டார்கள். அரசாங்கம் சட்டத்தைக் காத்துக் கொண்டது. ஜனங்கள் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்றாலும் இவைகளை அரசாங்கம் அறிய முடியாது. இந்தியரனைவரையும் ஆத்திரம் கொள்ளாது உயிர் துறந்த வீரர்களைப்போல் தேச விடுதலையில் உயிரைத் திரணமாகவும், மானமே கொள்கையாகவும், சாந்தமே சிந்தனையாகவும் கொண்டு தேச விடுதலைக் குழைக்குமாறு மகாத்மா வேண்டிக்கொள்கின்றார் சமாதானத்தை இந்தியர்கள் பழுதற நிறைவேற்றி வைத்தார்கள் என்ற நற் பெயரைக் காக்கக் கடமைப்பட்டவர்களாயிருப்பதை மனதில் கொண்டு சாத்திரம் விடுத்து தியாக புத்தியுடனும், சாந்த நிலைமையுடனும் ஆற அமர சிந்தித்து, சத்தியாக்கிரக வழியைப் பின் பற்றி ஜெயம் பெற முயலுவோமாக.

## வியாபார மந்தமும் விவசாயிகள் துன்பமும்

அபரிமிதமாக விளை பொருள்கள் எதிர் பார்த்ததிற்கு மேல் விளைந்து, உலக வியாபாரத்தையே தாழ்த்திவிட்டது. எங்கும் பணக் கஷ்டம். விவசாயிகளின் நிலைமையோ, மற்றெல்லோரைப் பார்க்கிலும் மோசமாக விருக்கின்றது. ஏற்றுமதிப் பொருள்களும் இறக்குமதிப் பொருள்களும் இன்று ஓர் நிலையே பெற்றிருக்கின்றதென்றாலும், நம் நாட்டினின்றும் வெளிச் செல்லும் ஏற்றுமதிப் பொருள்களுக்கு கிராக்கியில்லை. இறக்குமதிப் பொருள்களுக்கு அப்படியில்லை யென அறியலாம்.

தேசீயப் போராட்டத்தின் பயனாகவும் சிறிது இந்திய வியாபாரம் தேக்க மடைந்து, இது போதே ஒருவாறு நடை பெற முயற்சி செய்து வரப்படுகிறது. என்றாலும் பணம் தாராளமாக— முன்போலாக இவ் வருடத்தில் எதிர் பார்க்க வியலாதெனவே யெண்ணுகின்றோம். செல்வ மிகுந்துள்ள நாடுகளிலேயே இன்றைய வியாபார நெருக்கடியால் தொழிலற்றோரின் தொகை இலக்ஷ லக்ஷமாகப் பெருகி வருகின்றபோது இந்தியாவின் நிலைமையை எண்ணில் வருந்தாதிருக்க முடியாது. இந்திய விவசாயிகளும் வியாபாரிகளும் போட்டியிட்டு நடக்காது, ஐக்கியமாக நடந்து தேசச் செல்வத்தைக் காக்கக் கடமைப் பட்டுள்ளார்கள். நாட்டில் செல்வம் எங்கிருப்பினும் அஃது யாவருக்கும் சொந்தமானதாகவே கருதும் பெருங் குணம் வேண்டியது அவஸ்யமாகும்.

இலாபங் கிடைக்காத வியாபாரிகளைப் பார்க்கிலும் விவசாயிகளே தற்போது மிகவும் கஷ்ட மடைந்து வருகிறார்களாகையினால், வியாபாரிகளே தங்கள் நாட்டு விவசாயிகளின் துன்பத்தைத் துடைக்க முன்வர வேண்டும். மற்றத் தேசங்களின் அரசாங்கமோ துன்பமுற்றோருக்கும், நஷ்டப் பட்டோருக்கும் உதவியாக விருந்து வருகின்றது. இந்தியாவில் அவ்விதம் எதிர் பார்க்கும் வழக்கமில்லை யாகையினால், தங்கள் நாட்டாராகிய விவசாயச் சகோதரர்களுக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி செய்துவர வேண்டிக்கொள்ளுகின்றோம்.

ஐக்கிய நாணயச் சங்கங்களும் சிரமமுறும் விவசாயிகளை இச்சமயத்தில் ஒருங்கு சேர்த்து உதவிகொடுக்க முன் வரவேண்டும். கஷ்டம் வந்தபோதேனும் ஐக்கிய முறையை நாட்டினர் அறியச் செய்து அனுபவிக்கவும் செய்வது மிக சிலாக்கியம். துணை புரிகின்றவர்கள் தியாக புத்தியுடன் நடந்துகொண்டால், விருப்பம் நிறைவேறி சுபீட்சம் இலகுவில் விரைவில் கிடைக்கப் பெற்றவர்களாவார்கள். ஐக்கிய முறையினை விவசாயிகள் இதுபோது கண்டு அனுபவித்து விட்டார்களாயின் பின்னெக்காலமும் மறக்கமாட்டார்கள். நாட்டில் முறையும், திட்டமும் நிலவி, க்ஷேமமும் நிம்மதியும் உண்டாகும்.

**விடுதலையாகாத சத்தியாக்கிரகிகள்**

உடன்படிக்கையிற் கண்ட வண்ணம் காங்கிரஸ் உடனே தனது முறைகளை யெல்லாம் மாற்றிக் கொண்டது போல், அரசாங்கமும் தீவிரமாக எல்லா வழிகளையும் அனுசரிக்க வேண்டியது அவஸ்யமாகும். இன்னும் சத்தியாக்கிரகிகள் பலர் சிறையினில் வாடிக்கொண்டிருக்கின்றனர். இவர்களது விடுதலையில் ஏதோ மர்மம் இருந்து வருகிறதென்று ஜனங்கள் எண்ணி வரும் தப்பான எண்ணத்தை யுடனே நீக்க வேண்டியது சமாதான உடன்படிக்கையின்படி செய்ய வேண்டிய முதல் காரியமாகும்

சத்யாக்கிரகத்தில் சம்பந்தப்பட்டுச் சிறை சென்ற தேச பக்தர்களை விடுவித்ததில் மற்ற மாகாணத்தைப் பார்க்கிலும் சென்னை மாகாணமே மிகவும் தாமதமாக்கி யிருந்திருக்கிறது. இன்னும் பல தேசியவாதிகள் விடுதலை யுறவேண்டி யிருக்கின்றது. இவர்கள் சத்தியாக்கிரகிகளென்பதை அறியாது, போலீஸாரின் குற்றச் சாட்டையே ஒப்புக்கொண்டு தீர்ப்பு செய்ததை நம்பி பலாத்காரக் கைதிகளென நடத்தி சிறையிலிருத்தி வருவது முறையல்ல. இவர்களனைவரையும் உடனே விடுதலை செய்ய சென்னை சர்க்கார் முயலுவார்களாக.

**அறிக்கை**

மதிப்புரைக்கு அனுப்பியிருக்கும் பத்திரிகை, புத்தகங்கள், காலெண்டராகிய அனைவற்றிற்கும் அடுத்த ஏப்ரல்மீ வெளியீடான "பாரதி"யிற்றான் மதிப்புரை வரும்.

# ஏன்

## "பாரதி"யில்

## விளம்பரஞ் செய்ய வேண்டும்?

தமிழ் நாட்டில் எல்லாக் கக்ஷியினராலும் ஒப்புக்
கொண்டு ஆதரிக்கப்பெற்று வருவதினால்

*　*　*

தமிழ் நாட்டிலன்றி வெளி நாட்டிலும்
தமிழர்களால் விசேஷமாக மதிக்கப்பெற்று
ஆதரிக்கப்பெற்று வருவதினால்

*　*　*

நாட்டுக்கு வேண்டும் நலமிக்க தொண்டு
நாட்டமுடன் செய்யும் நன் முயற்சியினால்

*　*　*

பனிரெண்டு மாதங்களிலும் பல்லோராலும் தருவித்து
ஆரம்ப மணியிலிருந்து வாசிக்கப்பெறுவதினால்

*　*　*

விளம்பரஞ் செய்யின்

என்றும்

## இலாபமுண்டு; க்ஷேமமுண்டு.

உடனே விளம்பரஞ் செய்யுங்கள்.

# புதிய சந்தா நேயர்கட் கோர் நல் விருந்து

சென்ற 1930-ம் வருஷத்தின் "பாரதி" & "நவீன பாரதி" யாகிய இரு பத்திரிகைகளும் சேர்ந்த பைண்ட் வால்யம் தயாராக விருக்கிறது.

இதில் இந்திய தேசாபிமானிகளின் படங்களுடன் பெரியாரின் படங்களும் அவர்தம் விரிவான சரிதைகளும் அடங்கி யுள்ளது.

இதுவுமன்றி பத்திராசிரியர்களால் வரையப்பெற்ற அவஸ்யமானதும் காலத்திற்கு வேண்டப் படுவதுமாகிய கட்டுரைகளுடன் அறிஞர்களாலும், சிறந்த ஆசிரியர்களாலும், பிரபல நியாயவாதிகளாலும் அறிவு தருவதாய், ஆனந்தம் நல்குவதாய், செல்வம் ஈவதாய் நவம் நவமாக எழுதப்பெற்ற அற்புதமான வியாசங்களைப் பெற்று 800 பக்கம் கொண்டதா யிருக்கின்றது. பத்திரிகையின் விஷயப் போக்குக்கும் அச்சுக்கும் ஏற்ற விதமாக உறுதியாக பைண்ட் செய்து, நேர்த்தியான காலிகோவினால் அழகு செய்விக்கப்பெற்று, தங்க மசியில் காலிகோவின் மேலும் அச்சிடப்பட் டிருக்கிறது.

இவ் வால்யம் தமிழரானோர் ஒவ்வொருவரிடமும் அவஸ்யம் இருக்க வேண்டிய இலக்கியப் பொக்கிஷங்களுள் முதன்மையானதாகும்.

பிரதி 1-க்கு விலை ரூ. 2—8—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர் தபாற் செலவுக்கும் சேர்த்து ரூ. **3.** அல்லது 5 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டும்.

மானேஜர், **"நவீன பாரதி."**



# 'Bharati' Directory—'பாரதி'ப் பேரேடு.

## வியாபாரிகளே!

உங்கள் விலாசங்களை உலகத்திற்குத் தெரியப்படுத்துங்கள்.

உலகத்தார் உங்களை யார் என்று, என்ன வியாபாரிகளென்று, எதை விற்கிறவர்கள்-எதை வாங்குகிறவர்களென்று முதலில் அறியட்டும்.

**இதோ—**

**வலதுபுறம் பாருங்கள்;**

ஆறு கட்டங்களிருக்கின்றன.

**கட்டம் ஒன்றுக்கு**

விளம்பர விகிதம்

**ஒரே ரூபாய்**

ஆயிரக் கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டு லக்ஷக் கணக்கான மக்களால் வாசிக்கப்பட்டு கோடிக் கணக்கான மக்களால் பார்வை செய்யப்படும்.

**உடனே எழுதுங்கள்.**

**1000** பக்கங்கள் கொண்ட **"பாரதி"** ஒரு நூறு ஆசிரியர்களால் எழுதப்படுவது

தமிழராகப் பிறந்தோர் தம் மனத்தைக் கொள்ளைகொண்டு அவர் தம் பூரண ஆதரவு பெற்று வளர்ந்து வருவது

ராஜாக்களையும், மந்திரிகளையும், பெரும் பெரும் தனவந்தர்களையும் சந்தாதாரராக வுடையது

உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் தமிழரிடையிற் பரவி அவர் தமக்கு ஆனந்தம் நல்குவதா யிருப்பது

விவசாயிகளும் வியாபாரிகளும் விரும்பி பேற்று அவர்தம் உயர்வில் கருத்தைச் செலுத்தப் பாக்கியம் பெற்றதா யிருப்பது

தேசீயச் செல்வத்தை வளர்த்து-காத்து, யாவரையும் சரிநிகர் சமானமாகக் கொணர முயன்றுகொண் டிருப்பது

உத்தமபாளையம்

## ஆனந்தா பிரஸில்

செய்யப்பெறும் வேலைகளெல்லாம் நேர்த்தியாகவும் உயர்தரமாகவும் இருக்கின்றன வென்பதை அறியவேண்டுகிறோம்.

அறியாதிருப்பின் பரீக்ஷைக் கேனும் பாருங்கள்.

---

தேவை.

பைண்டிங் சம்பந்தமான வேலைகளில் திறமை வாய்ந்த

பைண்டர் தேவை.

மற்ற விபரத்திற்கு எழுதவும்.

---

இரண்டே ரூபாய்

ஒரு 100 விசிட்டிங் கார்டுகள்

உயர்ந்த ஐவரி கார்டில் நேர்த்தியான எழுத்துக்களால் அச்சிட்டுத் தபால் செலவின்றி அனுப்பப்படுகிறது.

---

நூறு லெட்டர் பேப்பர் கோண்ட பேட் 1-க்கு ரூ. $1\frac{1}{2}$ தான்

விரும்பிய விதமாக விலாசத்தை அச்சிட்டு அனுப்பப்படுகிறது.

தபாற் செலவு இனாம்.

---

இங்கு

நாவல்களோ, பிற உயர்ந்த புத்தகங்களோ, பத்திரிகைகளோ, எதுவானாலும் சரியே; பிழையின்றியும் கண்ணைக் கவரும் விதத்திலும் அச்சிட்டுத் தரப்படுகிறது.

---

கஷ்ட நஷ்டமேன்!

ஒற்றுமை யுற்றிடில்

ஒழியாதிருக்குமோ?

சேருங்கள்! ஒன்று கூடுங்கள்!!

திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கத்தை உயிர்ப்பிக்க முயலுங்கள்.

---

1929-ம் வருட

'பாரதி'

முதல் வால்யம் கிடைக்கப் பெறுகது.

மானேஜர், "பாரதி."

---

க்ஷேமமும் இலாபமும் ஒருங்கே பெறலாம்.

T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனியில் பங்காளிகளா? அன்றேல் இன்றே சேருங்கள்.

---

தேவை.

நகரங்கள் தோறும் பத்திரிகையை விற்பனை செய்ய

ஏஜெண்டுகள் தேவை.

நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர், "பாரதி."

---

கல்கத்தாவிலும் பம்பாயிலும் "பாரதி"க்கு விளம்பரம் சேகரிக்க

ஏஜண்டுகள் தேவை.

தமிழராகவே இருக்கவேண்டும்.

தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

---

ஆனந்தமடையலாம்

2-ம் வருஷ பைண்டு வால்யம் ஒன்றை வாங்கினால் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

மானேஜர், "நவீன பாரதி."





கிரேட் ஈஸ்டர்ன் ஆப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

(ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.) (இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டது.)

உயர்ந்த தன்மை வாய்ந்த பாலிசிகளையுடையது. பாலிசி பணம் கட்டாததற்காக, பாலிசி பறிமுதல் செய்ய முடியாததற்கான விதிகளும், சாசுவதமாகவே பணம் கட்ட இயலாமல் நோயுற்று விட்டாலும் சரி அல்லது அபாயம் நேர்ந்துவிட்டாலும் சரி அவற்றிற்கும் சௌகர்யமான விதிகளுடனும் கூடியது.

மூன்று வருஷங்களுக்கொரு முறை போனஸ்! உத்திரவாதமுள்ள போனஸ் திட்டங்கள்!!

இந்தியாவிலே பணம் முதலீடு செய்யப்பட்டது. லாபகரமான நிபந்தனைகளின் கீழ் வேலை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

மற்ற விபரங்களுக்கு எழுதவும்:—

1. எம் வி. மார்ச்சண்ட், பிராஞ்சு மானேஜர், 50–52 சர்ச் கேட்டு தெரு, பம்பாய்.
2. சி. பி. கிருஷ்ண ராவ், சீப் ஏஜெண்டு, (மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்கு) 30, வடக்குமாசி வீதி, மதுரை.

---

## "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தேழாவது ஆண்டு நடக்கிறது.

பத்திராதிபர்: பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாத்ரிப்பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.

# தேவை!

சென்னையில்

## விளம்பர ஏஜண்டு தேவை.

நல்ல சம்பளம் கொடுக்கப்படும்

கமிஷன் முறையும் உண்டு

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், "நவீன பாரதி"

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரதி பேரேடில் கலம் 1-க்கு | | | | ரு. | 1—0—0 |
| சாதாரண பக்கம் 1-க்கு | | | மாதம் 1-க்கு | ரு. | 10—0—0 |
| ,, | ,, | ½-க்கு | ,, | ,, | 5—8—0 |
| ,, | ,, | ¼-க்கு | ,, | ,, | 3—0—0 |
| கவர் | ,, | 3 ல் | ,, | ,, | 15—0—0 |
| ,, | ,, | 4 ல் | ,, | ,, | 20—0—0 |

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.



## நெடு நாள் எண்ணம்!

## இன்றே சாத்தியமானது!!

## இனாம்! இனாம்!! இனாம்!!!

# 1930-ம் வருட

# "பாரதி" வால்யூம் இனாம்.

நல்ல சந்தர்ப்பம்! சில பிரதிகளே கைவசமுள்ளது!!

முந்துங்கள்.

கஷ்டமின்றி சிரமமின்றி உங்களுக்குக் கிடைக்கும் இந்த இலாபத்தை இழக்க விரும்ப மாட்டீர்களென்பதே எமது எண்ணம்.

**1931-ம் வருட "நவீன பாரதி"க்குப்** புதிய சந்தாதாரராக 25 நண்பர்களைச் சேர்த்துதவினால், இந்த உயர்ந்த பரிசு உங்களைத் தேடிவரும்.

விரும்புவோர், தெளிவான விலாசந் தெரிவிக்கவும். துண்டுப் பிரசுரங்களும் ரசீதுப் புஸ்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "நவீன பாரதி."

# "கலா நிலயம்"

## இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை,

கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவி யென்றால் மிகையாகாது இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பாடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்

**சந்தா விபரம்.**

சந்தா உள்நாட்டிற்கு ரூ 7—8—0 வெளிநாட்டிற்கு ரூ 9—0—0 தனிப்பிரதி அணா 3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—**மானேஜர்,**
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

# இனிக் கஷ்டமில்லை!

வியாபாரிகளுக்குப் புதிய சகாயம்

**'பாரதி'ப் பேரேடு என்ற விளம்பரப் பக்கங்கள்**

வியாபாரிகளின் சௌகரியத்தை யுத்தேசித்தே பிரசுரித்து வருகின்றோம்.

ஓர் கலத்திற்கு விளம்பர விகிதம் ஓர் முறைக்கு ரூ **1.**

நேரமும் இடமும் பொருந்தி யிருக்கிறபோது சிறிது பணம் செலவிட்டு ஏன் இலாப மடையக்கூடாது?


19<sub></sub>535

# T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி Ltd., கோம்பை.

1913-ம் வருஷத்திய இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி
ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

பங்கு 1-க்கு ரூ 3 வீதம் 900,000 பங்குகளின் பேரில்

**2,700 000 ரூ மூலதனம்.**

1. ஏல விவசாயிகளைத் தவிர வேறு எவரையும் பங்காளிகளாக ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

2. ஏல விவசாயிகளின் ஐக்கியத்தையும் லாபத்தையும் பிரதானமாகக் கொண்டு பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்று, ஏலச் சரக்குகளைக் கொள்முதல் செய்தும் கம்பெனி மெம்பர்களிடம் கன்செயின்மெண்டில் சரக்குகளைச் சேர்த்தும் லண்டன், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய அந்நிய தேசங்களுக் கனுப்பிவைத்தும் பாம்பை, கல்கத்தா, கராச்சி டில்லி, கான்பூர், அம்ரிட்ஸார், விருதுநகர் முதலிய துறைமுகங்களில் சொந்தக் கடைகளை நிர்மாணித்தும் விற்றுமுதல் செய்து வருவதோடு சக்கர், முல்டான், லாகூர், அலகாபாத், ஆக்ரா, ஆதரிஸ், சென்னை முதலிய இடங்களில் விற்பனை ஏஜண்டுகளைக் கொண்டும் விற்றுமுதல் செய்து வரப்படுகிறது.

3. நல்ல விலைக்கு விற்க விரும்பும் ஏல விவசாயிகளும், நல்ல ஏலச் சரக்கை வாங்க விரும்பும் வியாபாரிகளும் இக் கம்பெனியை ஆதரித்துத் தக்க லாபத்தையும் மிக்கப் புகழையு மடையும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**உ. ம. சே. முகையித்தீன்பிள்ளை ராவுத்தர்,**
மானேஜிங் டைரெக்டர்,
**T. C. P. A.** ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி,
(லிமிடெட்,)
**கோம்பை, மதுரை ஜில்லா.**

# "நவீன பாரதி"

## ஒரு தேசிய மாதப் பத்திரிகை.

சுதந்திரம் பொங்கி சமத்வம் ததும்பி சகோதரத்வம் ஜ்வலித்து
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் மத பேதமற்று ஜாதி பேதமற்றுக்
கட்சி பேதமற்று இந்தியாவனைவரும் பாரத
மாதாவின் மக்களென்ற மேலான
கொள்கையுடன் தேசாபி
விருத்தியை முக்கிய
முதல்நோக்கமாகக்
கொண்டு

**தேச விடுதலைக்காக உழைக்கும்**
**தேசிய மணம் கமழும்**
**'நவீன பாரதி'க்கு**

**உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி அறிமுகம் செய்து சந்தாதாரர்களாய்ச் சேர்த்துக் கொடுங்கள்.**

### சந்தா விபரம்.

உள்நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2—0—0**
வெளி நாடுகளுக்கு ,, ரூ **2—8—0**
அல்லது **4** ஷிலிங்

தனிப் (சாம்பிள் காப்பி) பிரதி விலை அணு 3. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஏஜெண்டுகளாக விரும்புவோர் எழுதவும்.

பொறுப்பாளர்,
**"நவீன பாரதி" ஆலயம்,**
உத்தமபாளையம், மதுரை ஜில்லா

Printed, Edited and Published by R. SUBRAMANYAM,
at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt., S. India.